
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 15 மே 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 113



# உடைந்தும் உடையாத பேரினவாதம்



ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணி இரண்டாக உடைந்து விட்டது. ஆனால் அந்த உடைவில் அக் கட்சி வைத்திருந்த பேரினவாதம் மட்டும் உடையவில்லை. அதனைப் பிளவடைந்த இரு தரப்பினரும் பேணிப் பாதுகாத்து நிற்கின்றனர். ஏனெனில் இதுவரை உதவி வந்தது போன்று அவர்களது இருப்பிற்கும் வாக்கு வங்கிக்கும் பேரினவாதமே முதன்மையாக உள்ள அரசியல் சொத்தாகும்.

ஜே.வி.பி அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் ஒரு பிரிவாகவும் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சா தலைமையில் மற்றொரு பிரிவாகவும் பிளவடைந்து விட்டது. முக்கிய தலைவர்கள் எனப்படுவோர் சோமவன்சா தலைமையில் உள்ளனர். மணிச் சின்னமும் அவர்களிடமே உள்ளது. அதேவேளை விமல் வீரவன்சாவுடன் பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிக் கட்சி அமைக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். அங்கு கொள்கை கோட்பாட்டுப் பிரச்சினை காரணமாகப் பிளவு ஏற்படவில்லை. பாராளுமன்ற சுகம் அனுபவிப்பது சொத்து விவகாரம் பணக் கொடுக்கல் வாங்கல்கள் அரசாங்கத்தை நேரடியாகவோ? அல்லது மறைமுகமாகவோ? ஆதரிப்பது தனிப்பட்ட வாழ்க்கை முறை போன்றனவே பிளவின் அடிப்படைகளாகும்.

இத்தகைய பிளவில் அவர்கள் இதுவரை பின்பற்றி வந்த பேரினவாதம் என்பதை இரு தரப்பினருமே பேணிப்பாதுகாத்து நிற்கின்றமை நோக்கத் தக்கதாகும். அண்மையில் ஜே.வி.பியின் தலைவர்களில் ஒருவரான விஜித ஹேரத் வெளியிட்ட கருத்தில் இனப்பிரச்சினைக்கான சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதி குழுவின் இறுதித் தீர்வாக முன்வைக்கப்படும் எந்த யோசனையையும் நாம் வன்மையாக எதிர்ப்போம் என்றே கூறி இருந்தார். அண்மையில் சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதி குழுவின் தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் மற்றும் சிலரும் வட அயர்லாந்து சென்று வந்தனர். அதன் மூலம் இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக ஒற்றையாட்சியையும் சமஷ்டி முறைமையையும் கலந்து புதிய யோசனைகளை முன் மொழிந்து கொள்ள இருப்பதாகவும் அறிய முடிகிறது. அவ்வாறான யோசனைகள் முன்வைக்கப்படுவதை ஜே.வி.பி. வன்மையாக எதிர்க்கும் என்பதை வலியுறுத்திக் கூறி உள்ளார் ஜே.வி.பி விஜிதஹேரத். ஏற்கனவே பதின்மூன்றாவது திருத்தத்தையும் ஜே.வி.பி எதிர்த்தே வந்துள்ளது என்பது தெரிந்ததேயாகும். ஏற்கனவே இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிடக் கூடாது என்றும் அப்படித் தலையிட்டால் தாங்கள் எதிர்த்துப் போராடப் போவதாகவும் சோமவன்ச அமரசிங்கா அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரகடனம் செய்திருந்தார். அவர் அவ்வாறு கூறியமைக்குக் காரணம் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்க்கும் நிலைப்பாட்டில் இருந்தல்ல. இனப்பிரச்சினையில் தமிழ்த் தேசிய இனத்திற்கும் முஸ்லிம் தேசிய இனத்திற்கும் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் எவ் வித தீர்வும் ஏற்படக்கூடாது என்ற பேரினவாத நிலைப்பாட்டில் இருந்தேயாகும். எனவே உடைவிற்குப் பின்பும் ஜே.வி.பி தனது பேரினவாத நிலையில் இருந்து மாறவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை உடைந்து சென்றுள்ள விமல் வீரவன்சாவும் அவரது குழுவினரும் இனப்பிரச்சினையில் நியாயமான ஒரு கொள்கை நிலைப்பாட்டிற்கு வரமாட்டார்கள். அவர்கள் ஏற்கனவே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி போன்ற தீவிர பேரினவாத சக்திகளுடன் இணைந்தே விமல் வீரவன்சா தனது பிரச்சாரப் பீரங்கிப் பேச்சுக்களை நிகழ்த்தி வந்தார். சட்டங்களில் உள்ள ஓட்டை ஓடிசல்களைப் பயன்படுத்தி நீதிமன்றத்

2ம் பக்கம்



புதிய-ஜனநாயக கட்சி அட்டன் சக்தி மண்டபத்தில் தோழர் இ.தம்பையா தலைமையில் நடாத்திய மே தினக் கூட்டத்தில் கட்சியின் தலைமைத் தோழர்கள் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்



யாழ். புத்தூரில் கலைமதி மக்கள் மண்டபத்தில் புதிய-ஜனநாயக கட்சி தோழர் கா.சுதிர்காமநாதன் தலைமையில் நடாத்திய மே தினக் கூட்டத்தில் கட்சியின் வடபிரதேச தலைமைத் தோழர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





தோழர்களே! நண்பர்களே! இன்றைய நாள் உலகம் பூரா விலும் உள்ள தொழிலாளர்கள் உழைக்கும் மக்கள் தமது உரி மைக்காகவும் வாழ்வுக்காகவும் குரல் எழுப்பிக் கொண்டிருக் கிறார்கள். மறுபுறத்திலே ஏகாதிபத்திய ஆளும்வர்க்க கூட்டு சதிக்குப்பட்ட ஆயுத பயங்கரவாதம், ஆக்கிரமிப்பு யுத்தம் என்ப வற்றை மிகவக்கிரமாக முன்னெடுப்பதன் மூலம் உழைக்கும் மக்கள் மீதான தனது சுரண்டல்களையும், அடக்குமுறைகளை யும் வியாபித்துக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகமயமாக்கம், நவீனமய மாக்கம் என்ற கருத்தியல் சிந்தனைகளை திணித்து அறிவியல் மற்றும் பண்பாட்டு ரீதியாகவும் மக்களை அடிமைப்படுத்தி தமது வர்க்க நலனை நிலை நிறுத்திக் கொள்வதில் ஏகாதிபத்தியம் வெற்றி கண்டு வருகிறது. எனினும் உலக நாடுகள் எங்கும் இதற்கெதிரான எழுச்சியும் போராட்டங்களும் மேலெழுந்து வருவதையும் காணலாம்.

வேளை யுத்தத்தை காரணம் காட்டி ஆயுத பயத்தை யும், அச்சமிகுந்த சூழலையும் உருவாக்குவதன் மூலம் எமது அடிப்படை உரிமைகளுக்கான போரா ட்டங்களையும் மக்கள் இயக்கங்களையும் நசுக்கி விடுவதில் முதலாளித்துவப் பேரினவாத அரசு வெற்றி கண்டு வருகின்றது.

இன்று எமது அரசியல் தொழிற்சங்க பலம் மிகவும் திட்டமிட்டே சிதைக்கப்பட்டு வருகின்றது. எமது மக்களின் சந்தா பணத்திலும், வாக்கு பலத்திலும் வயிறு வளர்க்கும் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் இன்றும் எமது மக்களின் ஏகத்தலைமை தாமே எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டாலும் இவை தமது சுய நல பதவி வெறிக்கு அப்பால் எதையும் செய்தது மில்லை செய்யப் போவதுமில்லை. இந்த வங்குரோத்து தலைமை களின் கையாலா கத் தனத்தைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய காலம் இது வாகும்.

எனவே தோழர்களே! நண்பர்களே! இன்று எமது சமூகமும் ஒட்டு மொத்த உழைக்கும் மக்களும் எதிர்கொள்ளும் அச்சம் மிகுந்த சூழ லில் இருந்து மீட்சி பெறுவதற்கான போராட்டம் தொடங்கப் பட்டே ஆக வேண்டும். இனியும் அச்சப்படுவதும் பொறுமை காப்ப தும் நம்பிக் காத்திருப்பதும் அடுத்த தலைமுறைக்கு நாம் செய்யும் வரலாற்று துரோகமாக அமைந்து விடும்.

எனவே எமது சமூக பொருளாதார பண்பாட்டு கலாச்சார உரி மைகளை வென்றெடுக்கவும் உழைக்கும் மக்களின் வாழ்வாதார

# மே தினத்தில் சபதமேற்போம்!

எமது நாட்டைப் பொறுத்தவரை சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்கத்தின் எழுச்சியும் அதன் பேரினவாத யுத்த முன னெடுப்புகளும், தேசிய இனங்கள் மீதான மக்கள் விரோத, ஜன நாயக விரோத செயற்பாடுகளும், நாசகார செயற்திட்டங்க ளின் நடைமுறைப்படுத்தலும் எமது பொருளாதார அடித்தள த்தை சிதைத்து வருகின்றன. சமூக பண்பாட்டு கலாச்சாரங் களை சீரழித்து மேலைத்தேய நுகர்வு கலாச்சார மோகத் தினை திணித்து எமது நாட்டின் எதிர் காலத்தை இருண்ட ஒரு யுகத்தை நோக்கி தள்ளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

ஆளும் வர்க்க அதிகாரம் தனது பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கும் தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை நன்றி யுடன் வெளிப்படுத்திக் கொள்வதற்குமாக அரச பயங்கரவாத த்தை கட்டவிழ்த்து விட்டு மிலேச்சத்தனமான படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கைதுகள், தடுத்து வைப்புகள், ஊடக அடக்கு முறை என்பவற்றை தாராளமாக முன்னெடுத்து வருவதன் மூலம் மக்கள் இயக்கங்களையும், வெகுஜனப் போராட்டங் களையும் ஒடுக்கி வருகின்றது.

தோழர்களே! இந் நாட்டின் தொழிலாளர்கள் விவசாயிகள் உழைக்கும் மக்கள் மிக அழுத்தமான பொருளாதாரச் சுமைக ளும் மக்கள் விரோத ஜனநாயக விரோத சூழலுக்கும் முகம் கொடுத்து மிகவும் சவால் மிக்க வாழ்வியல் சூழலை எதிர் கொண்டு வருகின்றனர். இந்த நேரத்தில் இந்நாட்டின் எதிர் காலத்தை தீர்மானிக்கும் சக்தியும் பலமும் கொண்ட தொழி லாளர் வர்க்கம் என்ற வகையில் மலையக மக்களாகிய நாம் எமக்கு முன் இருக்கும் வரலாற்றுக் கடமையையும், சமூகப் பொறுப்பையும் உணர்ந்தாக வேண்டும்.

தோழர்களே! இன்று எம் மீதான பொருளாதார சுரண்டல் களும், இனவாத ஆக்கிரமிப்புகளும், இன வன்முறைகளும், எமது வாழ்வியல் பிரதேசங்கள் மீதான ஆக்கிரமிப்புகளும் மிகக் கடுமையாக முன்னெடுத்து வரப்படுகின்றது. அதே

ஜனநாயக உரிமைகளை மீட்டெடுக்கவும் காட்டி கொடுக்கும் ஏமாற்று, பம்மாத்து தொழிற்சங்க தலைமைகளை தூக்கியெறி ந்து இன்று எம்முள் ஊடுருவி எமது சிந்தனையை ஐக்கியத்தை சிதைத்துக் கொண்டிருக்கும் சமூக விரோத சக்திகளை அடித்து துரத்தி வெகுஜன மக்கள் தலைமை மேலும் கட்டி வளர்க்கப்படு வது அவசர அவசியத் தேவையாகி நிற்கிறது.

எனவே தோழர்களே சிதைத்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள தொழிற்சங்க அரசியல் பலத்தை புதிய தளத்தில் கட்டியெழுப்பவும், புதிய சமூக பொருளாதார பண்பாட்டு சமூக நிர்மாணத்தை உரு வாக்கவும் முன்வரல் வேண்டும். உழைக்கும் மக்களின் அடிப்படை வாழ்வாதார உரிமைகளை வென்றெடுத்து சமூக மாற்றத்திற் கான வெகுஜன போராட்டங்களை வழி நடத்துவதற்கான வெகு ஜன அரசியல் தலைமையை பலப்படுத்தி எமது புதிய - ஜனநாயக கட்சியோடு கரம் கோர்த்து உறுதியுடன் முன்செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தோழர்களே! இந்த அராஜக ஆட்சியானது தனது அதிகாரத் திற்கு எதிரான மக்கள் எழுச்சியை அடக்கி விடலாமென கனவு காணுகின்றது. எம்மையும் எம்மைப் போன்ற பல நூற்றுக்கணக்கான அப் பாவி இளைஞர்களையும், இனவாதத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த சிங்கள இளைஞர்களையும் சிறைச்சாலைக ளில் தடுத்து வைத்திருக்கிறது. இந்த பேரினவாத முதலாளித்துவத் தலைமைக்கு நாம் இங்கிருந்து விடுக்கும் சவால் விலங்குகளும் உங்கள் சிறைசாலைகளும் எங்களது விடுதலைப் பயணத்தைத் தடுத்து விட முடியாது. நாளைய விடியலுக்கான புரட்சிகர நம்பி க்கையோடு காத்திருக்கிறோம் என்பது தான்.

**சிறையில் இருந்து தோழர்கள்**

**வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசன், எஸ். மோகன்ராஜ், என். கிருஷ்ணப்பிரியன்.**

1ம் பக்க தொடர்ச்சி

**உடைந்தும் உடையாத**

தீர்வுகளைப் பெற்று பேரினவாதத்தைப் பலப்படுத்தியவ ர்களில் விமல் வீரவன்சா முன்னின்றவர். பிரபலமான பௌத்த சிங்களப் பேரினவாதச் சட்டத்தரணிகளும் இனவெறிப் பௌத்த பிக்குகளும் விமல் வீரவன்சாவுடன் இணைந்து நிற்கின்றனர்.

ஆதலால் உடைந்து இரண்டாகப் பிளவடைந்துள்ள ஜே.வி.பியின் இருதரப்பும் பௌத்த சிங்களப் பேரினவாத த்தை தொடர்ந்து முன்னெடுப்பதில் உறுதியாகவே உள்ளனர். ஒரு பிரிவு அரசாங்கத்தை எதிர்ப்பது என்ற நிலை யிலும் மற்றைய பிரிவு அரசாங்கத்தை ஆதரிக்கும் நிலை யிலும் இருந்து கொண்டு பேரினவாதத்தை முன்னெடு க்கவே செய்வார்கள் என்பது உறுதியாகியுள்ளது. அதன் விளைவு யுத்த அழிவாகவும் பொருளாதார வீழ்ச்சியாகவும் இருப்பதற்கு உடைந்த ஜே.வி.பி யினர் உதவுவோராகவே இருப்பர் என்பது காணக் கூடியதாகும்.

## நாலு நடக்கும் உலகிலே

(நற்குணன்)

### காந்தி பக்தி கருணாநிதி

ஞாபக மறதி போல நண்பன் கிடையாது. இல்லாவிட்டால் கருணாநிதியால் "காந்தியைக் கொன்ற கூட்டத்தை ஆட்சி க்கு வர விடக் கூடாது" என்று கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கட்கு அறிவுரை சொல்லியிருப்பாரா? இப்போது பாரதிய ஜனதா ஆட்சி வரக்கூடாது என்று தீவிரமாக உள்ள இதே காந்தி பக்தர் தான் பத்தாண்டுகள் முன்பு தான் பாரதிய ஜனதாவுடன் மத்தி யில் கூட்டரசாங்கத்தில் இணைந்தவர். தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி வேரூன்றியுள்ளதென்றால் அந்தப் புண்ணியத்திற் பெரும் பகுதி கருணாநிதிக்கும் திமுக காவுக்குமே சேரும். மீதியை ஜெயலலிதாவும் கோபாலசாமியும் பங்கிட்டுக் கொள்ள லாம்.

### ரெஃப்லொன் மீசைப் பயில்வான்

முன்னாள் "லண்டனிலிருந்து" தனது லண்டன் வதிவிடவு ரிமையை உறுதிசெய்கிற விதமாக லண்டனில் நடந்த ஒரு மாநாட்டில் இலங்கையில் சீனக்குறுக்கீடு பற்றித் தான் கேள்வி கேட்டதாகவும் அதை யாருமே காதிற் போட்டுக்கொள்ள வில்லை என்றும் மார்ச் மாதம் அழுது வடித்திருந்தார். போதாதற் குத் தென்னாபிரிக்காவிடமிருந்து எதையென்று சொல்லா மல், கம்யூனிஸ்ட்டுக்கள் கற்க வேண்டும் எனவும் எழுதியிருந் தார். ஏப்ரல் மாதம் (முதலாம் திகதி எழுதியதோ தெரியாது) வந்த கட்டுரையை இலங்கையில் சீனக் கமாண்டோக்கள் வந்து இறங்குவது பற்றிய மிரட்டலுடன் தொடங்கியிருந்தார். கொஞ் சம் பரிதாபமான கேஸ் தான். இப்படிப்பட்டவைக்கு விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டுமா?

யாருடைய கொமாண்டோக்கள் உலகின் பிற நாடுகளில் இற ங்குகிறார்கள் என்றும் யார் பிற நாடுகட்கு எதிரான மிரட்டல் களை விடுக்கிறார்கள் என்றும் தெரியாவிட்டால், கொஞ்சம் விசாரித்தாவது பார்க்கலாம். விசாரித்து அறிந்தாலும் உண் மையை எழுத மனம் வருமா? இவர்களை நினைந்துதானே பாரதியார்,

"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி வாய்ச் சொல்லில் வீரரடி"
என்று எழுதிப்போனார்?

### மேலாதிக்கத்தின் ஊடக முகவர்கள்

முரளிதர ரெட்டி "இந்து" பத்திரிகை நிறுவனத்தின் நிருபர். இலங்கை வந்த தொடக்கத்தில் கொஞ்சம் காத்திரமான செய்திகளைச் சேகரித்து எழுதி வந்தார். இப்போது எசமானர் ராம் இட்ட கட்டளைப்படி எழுதப் பழகி விட்டார். அண்மையில் "புரொண்ட்லைன்" ஏட்டுக்கு எழுதிய ஒரு கட்டுரையில் பல மாதங்கள் முன்பு விடுதலைப் புலிகள் இந்தியாவின் அணுகு முறை பற்றிய விசனம் தெரிவித்ததையும் அண்மைக் காலமாக ஜே.வி.பி இந்திய எதிர்ப்பில் முனைப்பாக இருப்பதையும் முடிச்சுப் போட்டு எதிரெதிரான இந்த இரண்டு தீய சக்திகளும் இந்தியாவை எதிர்ப்பதால் இந்தியா செய்கிறது நியாயம் என்கிற விதமாக எதையோ உளறியிருக்கிறார்.

இந்தியாவை யாரும் வெறுக்க நியாயமில்லை. ஆனால் இந் தியா தனது மேலாதிக்க நோக்கத்திற்காகவே இலங்கையிற் குறுக்கிட்டு வந்துள்ளது. இது ராமுக்கும் தெரியும், ரெட்டிக் குத் தெரியும். அப்படியிருக்க இந்திய அரசின் நடத்தையை விம ர்சிக் காமல் இந்தியாவை விமர்சிக்கிறவர் களை வைத்து இந்திய அரசை நியாயப்படுத்துவது ஏன்? இருவருமே இந்திய மேலாதிக்கவாதிகளின் ஏவலாட்கள் என்பதாலா?

### கலாநிதி ஒருத்தர் காலமாகி வந்த கதை– 1

கலாநிதி கிருஷ்ணதுரை என்று ஒருத்தர் பத்து வருஷம் முன்னம் சரிநிகர் என்கிற வார ஏட்டில் விடுதலைப் புலிகளு க்கு வசை பாடோ பாடென்று பாடி எழுதி வந்தார். இருந்தாற் போல அவர் காணாமற் போய்விட்டார். விடுதலைப் புலிகளை மோசமாக வசை பாடியதால் யாரும் அவரைக் கடத்திக் கொண்டு போயிருப்பார்களோ என்று விசாரித்துப் பார்த்தேன். இப்போது போல அப்போது நாளாந்தம் கடத்தல் நடப்பதில்லை. அதை விட அந்தப் பேரில் யாரும் காணாமற் போனதாக யாரும் எங்கும் முறைப்பட்டதாகவும் தெரியவில்லை. சரிநிகர் ஏடும் அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை.


பிறகு தான் தெரிய வந்தது, கலாநிதியார் தன்னைத் தானா கவே இல்லாமலாக்கிக் கொண்டார் என்று. கொஞ்சக் கால மாகக் கலாநிதியார் மாதிரி ஒருத்தர் லண்டனில் ஒரு வானொலி நிலையத்தில் எடுபிடியாளாக வேலை பார்த்துப் பிறகு தனக்கு வேலை எடுத்துக் கொடுத்தவருக்கே குழி பறித் தார் என்றும் கேள்விப்பட்டேன். அவரது திருவிளையாடல் களை அறிந்த பிறகு கலாநிதி யாராய் இருக்க வேண்டும் என்று தோன்றியது. பிறகு அவர் விடுதலைப்புலிகளை மிஞ்சிய "ஒரு பேப்பர் புலியாக" மறு அவதாரம் எடுத்திருப்பது தெரிய வந்தது. இப்போது அவருக்குள்ள தொழில் புலி எதிர்ப்பாளர்களை மோப் பம் பிடிப்பது. மோப்ப ஆற்றல் ஒருவேளை அவருக்குப் பிறவிக் கொடையாகக் கூட இருக்கலாம். முன்னர் பல பேரையும் புலி எதிர்ப்பாளர்கள் என்று மோப்பம் பிடித்து அறிவித்து வந்தவர், இப்போது வேறு பேரில் புலி எதிர்ப்பாளர்களை மோப்பம் பிடித்து அறிவித்து வருகிறார்.

கலாநிதி கிருஷ்ணதுரை "காலமாகி வந்த கதை" பல என் கைவசம் உண்டு. ஒரேயடியாகச் சொன்னால் திகட்டி விடும். எனவே நேரம் கிடைக்கிற போது கொஞ்சங் கொஞ்சமாக அவிழ்த்து விடுகிறேன்.

—லண்டன்—


## விற்பனையாகின்றன






www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



விழக்கை விடுவித்து விட்டோம் அவ்வாறே வடக்கையும் மீட்டு போகிறோம் என் நடாத்தப்படும் யுத்தத்தால் நாடும் மக்களும் பல்வேறு அழிவுகள் அபாயங்கள் மத்தியில் வாழவேண்டியுள்ளது. அவ்வாறே பொருளாதார வீழ்ச்சியும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பும் மக்களைத் தலை நிமிர முடியாதவாறு அழுக்கி வருகிறது. யுத்தமும் உலகமயமாதலும் என்ற இரட்டைப்பிசாசுகளின் கொடூர நடவடிக்கைகள் காரணமாகவே அனைத்து உழைக்கும் மக்களினதும் தேசிய இனங்களினதும் வாழ்க்கை நிலை அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதனைத் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி உழைக்கும் மக்களிடம் தான் உண்டு. ஆனால் ஒன்றுபட்டுப் போராட வேண்டிய தொழிலாளர்கள் விவசாயிகள் ஏனைய உழைக்கும் மக்களும் தேசிய இனங்களும் வேறுபடுத்தப்பட்டு ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் போன்று இருந்து கொள்ளுமாறு விடப்பட்டுள்ளனர். முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளால் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் இத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சியைத் தொழிலாளர் வர்க்கமும் உழைக்கும் மக்களும் உணர்ந்து ஒரு பரந்த வெகுஜனப் போராட்டப் பாதைக்கு வராத வரை மக்களுக்கு மீட்சியும் இல்லை நாட்டிற்கு விடிவும் கிடையாது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சி அட்டன் சக்தி மண்டபத்தில் நடாத்திய புரட்சிகர மேதினத்தில் உரையாற்றும் போது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர். சி. கா. செந்திவேல் கூறி சகல வழிகளாலும் மக்களைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கி வருகிறது.

அதேவேளை அரசாங்கத்தை எதிர்க்கும் சக்திகளை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட நாட்களாக விசாரணை இன்றித் தடுத்து வைத்தும் வருகிறது அரசாங்கம். எங்களது கட்சியின் ஐந்து தோழர்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேல் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நாம் பயங்கரவாதிகளா? அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டோமா? எங்களுடைய கட்சி எந்த வகையான தனி நபர் பயங்கரவாதத்தையோ குழுப் பயங்கரவாதத்தையோ ஏற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை பயங்கரவாதம் என்பதற்கு அரசாங்கம் கூறும் வரைவிலக்கணம் தான் என்ன? நாங்கள் அகிம்சை வாதிகளும் அல்ல இம்சை வாதிகளும் அல்ல. நாம் சமூக மாற்றத்திற்கான புரட்சிகர வெகுஜனப் போராட்டத்தில் நம்பிக்கை உடையவர்கள். மக்களுக்காக மரணத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மாக்சிச லெனினிசப் புரட்சிகர சக்திகளாகவே செயல்பட்டு வருகின்றோம். அத்துடன் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் அனைவரையும் பிளவுபடுத்தாது ஐக்கியப்பட்ட போராட்டத்தின் ஊடாக முன்செல்லும் கொள்கையைக் கொண்டிருப்பவர்கள் என்றும் கூறினார்.

அடுத்து உரையாற்றிய கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் சோ. தேவராஜா தனது உரையின் ஆரம்பத்தில் சிறையில் இருக்கும் எமது ஐந்து தோழர்களும அனுப்பிய மேதின வாழ்த்துச்

# யுத்தமும் உலகமயமாதலும் இரட்டைப் பிசாசுகள்

## இவற்றைக் கட்டியணைத்து நிற்கிறது மகிந்த சிந்தனை

## பு.ஜ. கட்சி மேதினத்தில் தோழர் செந்தில் உரை

னார். கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி மேதினக் கூட்டத்தில் தோழர் செந்தில் தொடர்ந்தும் உரையாற்றுகையில் இந்த நாடு நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் உரிய நாடாகும். சொந்தசுகத்துடன் வாழ்ந்து தொழிலாளர்கள் விவசாயிகளைச் சுரண்டி தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கும் ஆளும் வர்க்கத்தின் தனிச் சொத்தாக எவரும் எண்ணிவிடக் கூடாது. நிலவுடைமை ஆண்ட பரம்பரையில் வந்தவர்கள் தான் பாராளுமன்ற ஆட்சி

செய்தியை கூட்டத்தில் வாசித்தார். அதன் பின் தனது உரையில் இன்று இலங்கையிலும் உலகின் பல நாடுகளிலும் தேசிய வாதங்கள் ஊடாக மக்கள் பிரிக்கப்பட்டு தொழிலாளி வர்க்க உணர்வு மழுங்கடிக்கப்பட்டு வருகிறது. ஒன்றுபட்டுப் போராட வேண்டிய உழைக்கும் மக்கள் பிரிக்கப்படுகிறார்கள். சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் ஐக்கியப்பட்ட வெகுஜனப் போராட்டத்தை வலியுறுத்தி எமது கட்சி வேலை செய்வதை ஆளும் வர்க்கம் பொறுக்கவில்லை. அத்தகைய ஒற்றுமைப்பட்ட போராட்டத்தை மேல் கொத




**புதிய- ஜனநாயக கட்சியின் 5 தோழர்கள் உட்பட நீண்டகாலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணை செய்ய வேண்டும் எனக் கோரும் 1 இலட்சம் கையெழுத்துக்களை பெறும் இயக்கத்தை அட்டன் மே கூட்டத்தில் கட்சி தலைவர்கள் ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.**

முறையின் கீழும் ஆளும் வர்க்கத் தலைவர்களாக இருந்து வருகிறார்கள். மகிந்தவும் ரணிலும் அதிகாரத்திற்காக முரண்பட்டு நிற்கிறார்களே தவிர உழைக்கும் மக்களுக்கு சேவையாற்றி நாட்டைச் சுபீட்சமாக்குவதற்கு அல்ல. அவ்வாறான நோக்கமும் அதற்கான கொள்கையும் நடைமுறையும் இருந்திருந்தால் யுத்தமாக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கு என்றோ நியாயமான அரசியல் தீர்வு காணப்பட்டிருக்கும். அவ்வாறே உலகமயமாதலின் நச்சுத் தனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். ஆனால் கடந்த 30 வருடங்களில் அவ்வாறு இடம் பெறவில்லை. யுத்தம் உலகமயமாதல் என்ற இரட்டைப் பிசாசுகளைக் கட்டியணைத்து அதற்கு வழிகாட்டிய ஏகாதிபத்திய சக்திகளோடு கூடிக் கூலாவிக் கொள்வதையே மகிந்த சிந்தனை மூலமும் முன்னெடுக்கப்படுகின்றது. யுத்தத்தின் மூலம் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிக்கலாம் என்ற பொய்மையை சிங்கள மக்கள் மத்தியில் ஒரு மாயையாக ஏற்படுத்தி அரிசி உட்பட அன்றாட அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைகளை அதிகரித்துவருகிறது அரசாங்கம். யுத்த வெற்றிக்காக வயிற்றுப் பட்டிகளை இறுக்கிக் கொள்ளுமாறு சிங்கள மக்களுக்குப் போதிக்கப்படுகின்றனது. ஆனால் இந்நிலை அதிக காலத்திற்கு நீடிக்கப் போவதில்லை.

அன்று 122 வருடங்களுக்கு முன்பு 8 மணி நேர வேலை கோரி தொழிலாளி வர்க்கம் நடாத்திய போராட்ட எழுச்சி போன்று மக்கள் எழுவார்கள் என்ற நம்பிக்கையில் எமது கட்சி அனைத்து மக்கள் மத்தியிலும் தனது அரசியல் வேலைகளை முன்னெடுத்து வருகின்றது என்றும் தோழர் செந்தில் தனது உரையில் குறிப்பிட்டார்.

இம் மேதினக் கூட்டத்தில் தலைமை உரையாற்றிய கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா, மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று அமைச்சர் பதவிகளும் ஏனைய சுகபோக சலுகைகளும் அனுபவித்து வரும் தலைமைகளை தொழிலாளர்கள் இன்று நன்கு அடையாளம் கண்டு வருகிறார்கள். அரிசி மா சீனி மண்ணெண்ணை போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிப்பால் தோட்டத் தொழிலாளர்கள் படும் துயரங்கள் வர்ணிக்க முடியாதவையாகும். தோட்டத்தொழிலாளர்கள் மட்டுமன்றி அனைத்து உழைக்கும் மக்களும் வாட்டி வதைக்கப்படுகிறார்கள். ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சி மலை நீர் மின் திட்டத்திற்கு எதிராக எமது கட்சி முன்னெடுத்தது ஒரு முன் உதாரணம். அதில் முன்னின்ற எமது கட்சித் தோழர்கள் ஐந்து பேர் பழிவாங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது தானா ஜனநாயகம்? இது தான் மகிந்த சிந்தனையா? எனவே தான் உலகத் தொழிலாளர்களின் போராட்டத்தினமான மேதினத்தில் ஐக்கியப்பட்ட மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க மலையக மக்கள் அனைத்து மக்களோடும் கைகோர்த்து முன்வரல் வேண்டும் என நாம் அறைகூவல் விடுக்கின்றோம் என்றும் கூறினார்.

மேலும் கட்சியின் மலையகப் பிரதேசக் கமிட்டியின் செயலாளரும் வலப்பனை பிரதேச சபை உறுப்பினருமான தோழர் ச. பன்னீர் செல்வம் உரையாற்றும் போது மலையகத் தொழிலாளர்களின் அரசியல் விழிப்புணர்விலும் போராட்டத்திலும் தான் மலையகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. நாம் படித்திருந்தாலும் பதவிகள் சில பெற்றிருந்தாலும் தொழிலாளர்களின் பிள்ளைகள் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. கல்வி பெற்று உத்தியோகங்கள் ஆங்காங்கே பெற்ற போதிலும் தொழிலாளி வர்க்க அரசியலை மறந்து விட முடியாது. மக்களுக்காகவும் சமூக மாற்றத்திற்காகவும் எத்தகைய இடர்களையும் சவால்களையும் நாம் சந்திக்கவே தயாராக உள்ளோம். இன்று எமது தோழர்கள் ஐவர் மலையக மக்களின் விடுதலைக்கான போராட்டப் பாதையில் பயணித்ததன் காரணமாகவே சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் அதற்காகக் கவலைப்படவில்லை. அவர்கள் கொலைகளோ கொள்ளைகளோ செய்தவர்கள் அல்லர். எனவே எமது கட்சி மலையகத்தில் மாத்திரமன்றி வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் தனது அரசியல் வேலைகளை முன்னெடுத்து வருகின்றது. எமது பிரதேசசபைப் பிரதிநிதித்துவம் மக்கள் சேவைக்குரியதே அன்றி குறுக்கு வழிச் சம்பாதித்தியத்திற்கு உரிய ஒன்றல்ல. அத்தகைய மக்கள் சேவைக்கு அந்தப் பிரதிநிதித்துவம் உதவாது என்றால் அடுத்த கணம் அப்பதவியைத் தூக்கி வீசவும் தயாராகவே உள்ளோம் என்றும் கூறினார். மலையகத் தொழிலாளர்களுக்கு உரிய அரசியல் மார்க்கம் ஏமாற்றும் தொழிற்சங்க பாராளுமன்ற அரசியல் மார்க்கம் அல்ல. வெகுஜனப் போராட்ட அரசியல் மார்க்கத்தில் அணி திரண்டு போராடுவதாகும் என்றும் கூறினார்.

மேலும் இக் கூட்டத்தில் தொழிலாளர்கள் ஆசிரியர் பிரதிநிதிகளும் உரையாற்றினார். புரட்சிகரப் பாடல்களும் இடம் பெற்றன.

## புரட்சிகர மேதினம்




ஆயிரம் ஆண்டு கால
சுமையிறக்க
ஆழப் புதைந்த
அடிமை வேரறுக்க
ஆயிரம் ஆயிரமாய்
ஆர்ப்பரித்தெழுந்த
சிக்காக்கோ சிவந்த நாள்
உழைக்கும் மக்கள்
உரிமை வெல்ல
போர் முழக்கம் செய்த
புரட்சிகரப் பெருநாள்
இந்நாளை
ஆளுகையின் அதிகாரம்
ஆக்கிரமிப்பு செய்து
அரைகுறை ஆடை கட்டி
கூத்து அடிக்கும் மேடையாக்கி
தொழிலாளர் உணர்வுகளை
தொகையாக விலை பேச
தொடரும் இந்த அக்கிரமம்
கட்டெரிக்க நெருப்பெடுத்து
புது உலகம் வெல்ல
புரட்சிக் கீதமிசைக்க
கூடியிருக்கும்
தோழர்களே
சமூக மாற்றத்திற்காய்
வீதிகளில் கிளை பரப்பிய
விழுதுகள்
சிறைக்குள் இருந்து
செவ்வணக்கம் சொல்கின்றன.

***கொழும்புச் சிறையிலிருந்து தோழர்கள்***

## மேதினம்

எட்டுமணித்தியால வேலை
எல்லோர்க்கும் சமமான நீதி
தம்மையழித் தேயவர்பெற்றுத் தந்தார்- புத்துலக
சந்ததியைத் தலைநிமிர வைத்தார்.
செங்கொடியும் வந்துதித்த
சேதியெல்லாம் அமெரிக்க மண்ணில்
பாரெல்லாம் அற்றைத்தினம் விடுமுறைநாள்- பெற்றுத்தந்
தோர்
பட்டதெல்லாம் சூடுபட்ட விழுப்புண்கள் தான்
வெள்ளைநிறக் உடைதாங்கி
வீரமுடன் புறப்பட்டோரைத்
துப்பாக்கிக் குண்டுகளால் சுட்டழித்தார்- அவர்களது
துணிகளெல்லாம் செந்நிறமாய்க் குவித்தார்.
பதினெட்டு மணித்தியாலங்கள்
அதிகவேலை செய்தபின்னும்
நதுசம்பளம் கொடுக்க மறுத்தார்- முதலாளிகள்
உழைப்போரின் உரிமைகளைப் பறித்தார்.
ஓய்வெமக்கு வேண்டுமென்று
உரத்த குரல் எழுப்பி ஓரணியில்
ஒன்று திரண் டெழுந்தார் அன்று- அந்நாள்
வென்று மேதினமானது இன்று.
தொழிலாளி விவசாயி
வழிவழியாய் நடாத்துமிந்த
மேதினமாம் தொழிலாளர் போர்த்தினம்- அதுதான்
ஆதியுமந்தமும் மில்லாத் தொழிலாளர் மந்திரம்
உலகிலுள்ளோர் பசிதீர்க்க
அகிலமெல்லாம் வியர்வை சிந்தி
களைப்போடு பயிரிடுவோன் விவசாயி- அவனைப்போல்
உழைப்போடு களைப்படைவான் தொழிலாளி
தொழிலாளி விவசாயி இல்லாமல்
ஒளியிழக்கும் உலகம் பட்டினியால்
ஒருசிலரின் உடம்பு பட்ட தடியடியால்- அந்த
செங்கொடியும் உயர்ந்ததுவே பாரில்.
விடுமுறையே கிடைக்காமல்
அடிமையாய்க் இருந்தோர்க்கு
மேதினம் தான் அளித்ததுவே புதுவாழ்வு- அந்த
நாள் தன்னைப் போற்றுவோம்
புரட்சி வழி நின்று!

**வ. சு. மணி**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமானே பிரஜா உரிமை பெற்றுக்கொடுத்தார் என்று எத்தனை காலம் கூறுவர் ?

தற்போது (ம.ம.மு.யின்) கண்டிமாவட்ட மாகாணசபை உறுப்பினராக இருக்கும் இராஜரட்ணம் (இ.தொ.கா.வில் இருந்தபோது கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்) 1986, 1988 ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டங்களை நிறைவேற்ற காலஞ்சென்ற சௌ. தொண்டமானே காரணமானவர் என்றும் அச்சட்டங்களை இ.தொ.கா. வின் சட்டத்தரணியான இராஜாக்குலசிங்கம் என்பவரே வரைந்து அரசாங்கத்திற்கு கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியிலேயே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

கேப்பையில் நெய் வடிகிறதென்றால் கேட்பாருக்கு மதி எங்கே போச்சு என்று மலையகத்தில் பரவலாகப் பேசப்படும் பழமொழியே நினைவிற்கு வருகிறது.

1986 ஆம் ஆண்டு "நாடற்றவர்களுக்கு" பிரஜா உரிமை சட்டம் பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றப்பட்டபோது காலஞ்சென்ற சௌ. தொண்டமான் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. அவ்வேளை அவர் இந்தியாவில் இருந்தார். அச்சட்டம் ஆக்கப்பட்டமை குறித்து இந்திய இந்து பத்திரிகைக்கு கருத்து தெரிவித்தபோது, பிரஜா உரிமை சட்டங்கள் ஆக்கப்பட்ட போதெல்லாம் (அவர் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையிலான பிரஜா உரிமைச்சட்டம் பற்றி குறிப்பிட்டுள்ளார்) தன்னுடன் கலந்துரையாடாமல் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் தன்னை ஏமாற்றியது போன்று இம்முறையும் ஏமாற்றிவிட்டதாகவும் அச்சட்டம் பற்றி தான் திருப்தியடையவில்லை என்றும் பலமுறை தெரிவித்திருந்தார். இதிலிருந்து இச் சட்டத்தை ஆக்குவதற்கு அவர் எவ்வகையிலும் பங்களிப்பு செய்ய வில்லை என்பது தெளிவாகும்.

ஆனால் அச்சட்டத்தை கொண்டுவர தானே காரணம் என்று இலங்கை திரும்பியவுடன் தொடர்ந்து தொண்டமான் கூறிவந்தார். அதனையே இ.தொ.கா வினர் அனைவரும் கூறினர். சில படித்தவர்களும் கூறி வருகின்றனர்.

அவற்றை தற்போது ஏறக்குறைய எல்லோருமே கிளிகள் ஒப்புவிப்பது போன்று ஒப்புவிக்கின்றனர்.

1986 ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டத்தை ஆக்குவதற்கு சௌ. தொண்டமான எவ்வகையிலும் காரணமாக இருக்கவில்லை என்பதை பல முறை புதியபூமியில் ஆதாரபூர்வமாக கட்டுரைகள் வெளிவந்தன. இது பற்றி சில படித்தவர்கள் தேசிய பத்திரிகைகளிலும் எழுதியுள்ளனர்.

அதேபோன்று 1986 ஆண்டு பிரஜா உரிமை சட்டத்தினால் "நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கு சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் அந்த சட்டத்தின் அடிப்படையில் பிரஜா உரிமையைப் பெற்றவர்களாக கொள்ளப்படுபவர்கள் பிரஜா உரிமை சான்றிதழை காட்டாமல் சத்தியக்கடதாசியின் மூலம் பிரகடனப்படுத்திக் கொள்ளலாம் என்று 1989 ஆம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்ட போது இச்சட்டம் பற்றி அப்போது ஆங்கில பத்திரிகையொன்று கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை சௌ. தொண்டமான் சொல்லவில்லை. எனவே அச்சட்டம் ஆக்கப்பட்டமைக்கும் அவர் பங்களிக்கவில்லை. உண்மை இவ்வாறிருக்க மலையகத்தை சேர்ந்தவர்களும், அதற்கு வெளியில் இருப்போரும் திரும்பத்திரும்ப 'நாடற்றவர் பிரச்சினையை' தொண்டமானே தீர்த்து வைத்ததாகக் கூறுவது வரலாற்றை திரித்து பொய்யாகக் காட்டுவதாகும்.

பிரஜா உரிமை சட்டங்களை ஆக்க பலபேர் பலவிதமாகப் பங்களிப்பு செய்துள்ளனர். 'நாடற்றவர்' என்ற நிலையை முற்றாக போக்கும் நோக்கில 2003 ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு பாராளுமன்றத்தில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட ஆதரவாக வாக்களித்தனர்.

பிரஜா உரிமையை வழங்கக்கோரி பல விதமாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கு தொண்டமானும், இ.தொ.காவும் தனியே உரிமை கோர முடியாது. அத்துடன் பல புத்திஜீவிகளும், சட்டத்தரணிகளும் ஆலோசனை வழங்கியதன் பேரில சட்டவரைஞர் திணைக்களம் பிரஜா உரிமை சட்டத்தை வரைந்தது. ஒரு குறிப்பிட்ட இ.தொ.கா சட்டத்தரணியே சட்டத்தை வரைந்து கொடுத்தார் என்பது சுத்தப்பொய்.

எனவே இராஜரட்ணம் போன்றவர்கள் மக்களை ஏமாற்றி அரசியலை செய்வதற்காக ஆதாரமற்றவகையில் விடயங்களை கூறுவதை நிறுத்த வேண்டும். அவர்கள் கூறுவதை கேட்டுக் கொண்டிருக்காமல் உண்மையை அறிந்தவர்கள் உண்மைகளை நிலைநிறுத்துவதே நல்லது.

**சிவகுமார்**

# மலையக மக்களும் ஊடகங்களும்

மலையக மக்கள் பற்றி நம் நாட்டு ஊடகங்கள் எவ்வாறான அணுகுமுறையைக் கையாளுகின்றன என்பது முக்கியமானது. சிங்கள ஊடகங்கள் முற்றாகவே அவர்களின் பிரச்சினைகள் பற்றி பேசுவதில்லை. ஆங்கில ஊடகங்களும் தமது தேவைக்கு ஏற்றவாறு அவ்வப்போது கூறிக் கொள்கின்றன. ஆனால் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் அவற்றுக்கான காரண காரியங்களையும் அரசியல் சமூக பொருளாதார அம்சங்களையும் முழுமையாக வெளிப்படுத்தவேண்டிய தமிழ் ஊடகங்கள் பிரசுரிக அடக்கியும் மட்டுப்படுத்தியுமே வெளிப்படுத்தி வருகின்றன.

மலையக மக்கள் தொழிலாளர்கள் என்ற வர்க்க நிலையிலும் தமிழர்கள் என்ற இன அடிப்படையிலும் பல்வேறு பாகுபாடுகள் நிராகரிப்புகள் உரிமை மறுப்புகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் ஊடகங்கள் உரியவாறு அவற்றை வெளிப்படுத்துவது இல்லை. வெறும் செய்தி ஆக்குவது சாதாரண விடயம். அவர்களது விடயங்களை பிரச்சினையாக்கி வெளிக் கொணர்ந்து வெளிச்சமிட்டுக் அம்பலமாக்குவது ஊடக தர்மமாகும். ஆனால் அரசாங்கத்தில் ஒட்டி இருக்கும் மலைய தொழிற்சங்க அரசியல் தலைமைகள் போன்றவர்களுக்கு தலையிடிக்கும் இக்கட்டும் வராதவாறே தமிழ் ஊடகங்கள் செய்தி விமர்சனம் செய்து கொள்கின்றன. அங்கு அபிவிருத்தி என்று கூறப்படுவதிலும் கல்வித்துறையிலும் ஊழலோ ஊழல் என்றவாறு விடயங்கள் இடம் பெறுகின்றன. அவற்றை ஊடகங்கள் கண்டும் காணாதது போன்று இருந்து அதிகாரிகளுக்கு உதவுகின்றன.

உதாரணமாக கடந்த வருடம் 3179 இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டன. நீண்ட காலத் தாமதம் இழுபறிகளுக்குப் பின் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் காட்டிய எதிர்ப்பு கண்டனங்கள் மத்தியிலேயே அந் நியமனங்கள் வழங்கப்பட்டன. அதிலும் கூட பலவகை ஊழல்கள் பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றதாக முறைப்பாடுகள் கூறப்பட்டு வருகின்றன. ஆனால் எந்தவொரு ஊடகமும் தமது துணிவை இவ்விடயத்தில் காட்டத் தயாராக இல்லை. ஊழலை அம்பலப்படுத்தாது அதனைச் செய்தவர்களுக்கு பக்கபலமாகவே இருந்தும் வருகின்றன. இது போன்றது தான் மேல கொத்மலைத்திட்டம் பற்றிய விடயத்திலும் தமிழ் ஊடகங்கள் தமது முதுகெலும்பு அற்றதனத்தைக் காட்டிக் கொண்டன. மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் முன்னெடுக்கப்பட்ட வேளையில தமிழ் ஊடகங்கள் அத்திட்டத்தை ஆதரித்த மலைய தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் பக்கமே நின்றன. அங்குள்ள ஊடகவியலாளர்கள் மேல் கொத்மலைத்திட்ட எதிர்ப்பு இயக்கத்தை இருட்டடிப்பு செய்து அரசிடம் ஒட்டியிருக்கும் மலையகத் தலைமைகளுக்குச் சேவை செய்யும் விதமான செய்திகள் வெளியிட்டதை மறந்து விடமுடியாது. ஆனால் இன்று மேல்கொத்மலைத் திட்டத்தால் அப் பிரதேசமும் தோட்டத் தொழிலாளர்களும் பட்டு வரும் துயரங்கள் பற்றி அக்கறையுடன் எந்த ஊடகமும் விடயங்களை வெளிப்படுத்துவதில்லை. கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ அரசாங்கம் செய்துவரும் பேரினவாத நடைமுறைகள் பற்றியோ ஊடகங்கள் எதனையும் பிரச்சனையாக்கத் தயாராக இல்லை. காரணம் அவ்வாறு செய்தால் அவை மலையகத்தின் ஆதிக்கத் தலைமைகளுக்கு எதிரான விமர்சனமாக அமைந்து விடும் என்பதாலேயேயாகும்.

இதற்கு மலையகப் பிரதேச ஊடகவியலாளர்கள் பிரதான காரணமானவர்களாக உள்ளனர். ஊடகத் தர்மம் என்பது வியாபாரமாகி நிற்கிறது. சொத்து சுகம் அதிகாரம் படைத்தோரைப் பாதுகாத்து நிற்கும் கவசமாகவும் இருந்து வருகின்றன. இவ்விடயத்தில இந்திய ஊடகங்கள் சிலவற்றின் துணிவான வெளிப்படுத்தல்களும் மக்கள் முன் அம்பலப்படுத்தி அறிவூட்டல்கள் செய்வதும் குறிப்பிடத்தக்கதாகும். நமது தமிழ் ஊடகங்கள் பணம் பண்ணுவதற்கும் யாரையாவது காக்கா பிடித்து வயிறு வளர்ப்பதற்கும் அப்பால் மக்கள் பிரச்சினைகளைக் கையில் எடுக்கத் தயங்குவது பரிதாபமானது.

**மலையகன்பன்**

### விஷங்களுக்கிடையே வாழ்வோர்!

நஞ்சு கக்கும் நாகம் ஒன்று
எம் வளவில் சுற்றக் கண்டோம்
பக்தியால் பால் வார்த்து
பச்சை முட்டை வைத்தோம்
விஷம் பற்றி மறந்தபடி
வெளியில் அது வருகையிலே
காதினில் அதைப் பார்த்து
'நல்லதே சொல்வதை கேளென்று'
கருணை இன்றி கூச்சலிட்டோம்
வாகைமாய் அரவமது உடல் நெளித்து
அந்த வழி போதல் கண்டு
கும்பிட்டோம் விளக்கேற்றித்தோம
'நாகப் பாம்பையா'
நமைத் தீண்டும், துரத்துவோம்
என்றொருவன் சொல்லக்கேட்டு
கடுங்கோபமாகி கண்சிவந்து
காதில் விழுந்ததென்றால்
கருவென்றும் கலையாது
தூரப்போ என்றே
அவன் துணிவை சாகடிப்போம்
ஏட்டுக் கல்வியை நீட்டி அளந்தபடி
நல்லப் பாம்பைக் கொல்லல்
ஏழேழு தலைமுறைக்கும்
இளவென்று கதைசொல்வோம்
இன்னும் .....

காயம் சிறிதேனும் பட்டாலும்
இரு துண்டாய் வெட்ட தலை மீந்தாலும்
தேடிவந்து பழிதீர்க்கும்
இப்படியே இன்னபிற கட்டுக்கதையோடு
எமகாலம் கழியுதிங்கே.

இல்லை எனில்......
நச்சு பாம்புகளை
நம் தலைமையாக்கும் நிலை
என்னருமை மலையகமே!
உனக்கின்று வந்திடுமா?
அவர் விஷம் கொண்டு கொத்துவார்
சில போது நஞ்சு மறைத்து நகர்வார்
நாமிங்கே.....
உரிமைகளை முட்டைகளாய் அவித்து
உதிரத்தை பாலாய் வார்த்து
அவர்கள் உயர உழைப்போம்
அரவம் மீது கொண்ட பக்தியோடு
குாய வழிச் சொல்வோனை பிழையாக்கி
மடிந்த படியே எம்மக்கள்
நச்சுப் பாம்புகள் கோலோச்ச
விஷங்களுக்கிடையே வாழ்வார்.

-காவத்தையூர் மகேந்திரன்-

## ● பகிரங்கக் கடிதம்

# அமைச்சர் அருள்சாமி விளக்கம் தருவாரா ?

பாடசாலை அதிபருக்கு லஞ்சம் கொடுக்க முடியாதபடியால் தான் க.பொ.த உயர்தரத்தில் சேர்ந்து படிக்கவில்லை. அதனால் பட்டதாரி ஆகும் வாய்ப்பு தனக்கு இல்லாமல் போய்விட்டது என்று ஒரு கூட்டத்தில் மத்திய மாகாண கல்வி அமைச்சர் அருள்சாமி பேசியதாக செய்தி வெளியாகி இருந்தது. அதுவும் தனது தந்தையாரிடம் பாடசாலை அதிபர் ஒருவர் டீககன்று ஒன்றை லஞ்சமாகத் தரும்படி கேட்டதாகவும் அதனை கொடுக்க முடியாததால் தன்னால் க.பொ.த உயர் தர வகுப்பில் சேர்ந்து படிக்க முடியாமல் போனதாக அப் பேச்சின் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதுபற்றி அதற்குரிய அமைச்சரிடமிருந்து சில விளக்கங்கள் வேண்டும்.

க.பொ.த உயர்தரம் படிக்க க.பொ.த சாதாரண தரத்தில் (கணிதம் உட்பட குறைந்தது ஐந்து பாடங்களில்) சித்தியடைந்திருக்க வேண்டும்.

நீங்கள் க.பொ.த உயர்தரம் படித்திருக்க வேண்டிய காலகட்டம் 1976– 1979 வரை ஆகும். அப் போது நுவரேலியா மாவட்டத்தில அட்டன் ஹைலண்டஸ் கல்லூரியில் மட்டுமே க.பொ.த உயர்தர வகுப்புகள் நடத்தப்பட்டன. நீங்கள் நுவரேலியா மாவட்டத்தை சேர்ந்தவர். அட்டன் ஹைலண்டஸ் கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தில் சேர்த்துக் கொள்ள எந்த மாணவனிடமிருந்து அக்கால கட்டத்தில் அக்கல்லூரியின் அதிபராக இருந்தவர் லஞ்சம் வாங்கியதாகவோ கேட்டதாகவோ கூறுவது அபத்தமாகும். 1976 இல அக்கல்லூரியின் அதிபராக இருந்தவர் கிருஸ்ணன். அவருக்கு முன்ப திருச்செந்தூரனும் இரா. சிவலிங்கமும் அதிபராக இருந்தனர்.

இவர்கள் மூவரும் மலையக கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டவர்கள். அவர்கள் மீது மோசடி குற்றச்சாட்டுகள் எதுவும் இருக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு நுவரேலியா மாவட்டத்தில் இன்னொரு பாடசாலையில் உயர்தர வகுப்பு– அதுவும் வர்த்தக பிரிவு மட்டும் நுவரேலியா ஹோலி டிரினிறி கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் பல வருடங்களுக்கு பிறகே ஏனைய பாடசாலைகளில் உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது. ஹோலி டிரினிறியில் அக்கால கட்டத்தில் அதிபராய் இருந்தவர் மாரிமுத்து ஆவார். கிருஸ்ண னுக்கு பிறகு ஹைலண்டஸ் கல்லூரியில் அதிபராக இருந்தவர் திருமதி சிவசிதம்பரம் ஆவார்.

நீங்கள் ஒரு பாடசாலையில் ஒரு அதிபர் பசுக்கன்றொன்றை உங்கள் தந்தையாரிடம் கேட்டதாக பொத்தம் பொதுவாக கூறியிருப்பதானால் மலையகத்தின் நேர்மையுடன் சிறந்த அதிபர்களாக இருந்தவர்கள் மீதெல்லாம் அவதூறு செய்வதற்கு இடமளிக்கிறது. பாடசாலையின் பெயரையும் அதிபரின் பெயரையும் ஆண்டையும் குறிப்பிட்டாலேயே உங்களின் கூற்றை நம்ப முடியும். அத்துடன் எப்பாடசாலையில் எத்தனையாம் ஆண்டு நீங்கள் சாதாரண தரத்தில் சித்தியடைந்தீர்கள் என்பதையும் குறிப்பிடுவது நல்லது.

அமைச்சராக இருந்தால் எதனையும் எப்படியும் எப்போதும் பேசிவிடலாம் என்று நினைப்பது தவறாகும். விபரமாகவும் குறிப்பாகவும் பேசுவதே நல்லது.

இலங்கை அரசியலில் கல்வியலாளரோ கல்வி அமைச்சராகவும் சட்டத்தரணியே நீதியமைச்சரா கவும், பொருளாதாரம் தெரிந்தவரே நிதியமைச்சராகவும் வைத்தியர் சுகாதார அமைச்சராகவும் இருப்பது ஒரு சம்பிரதாயமாக இருந்த காலம் ஒன்றிருந்தது. தற்போது அரசியல்வாதியாக, பாராளுமன்ற உறுப்பினராக அமைச்சராக ஏன் ஜனாதிபதியாக கூட இருப்பதற்கு மட்டுமே சட்டபூர்வமாக மட்டுமன்றி, சம்பிரதாயபூர்வமாக கூட கல்வித்தகைமை அவசியமில்லை. அவ்வாறிருக்கும் போது நீங்கள் ஏன் பட்டதாரியாக இல்லையென்று கவலைப்படுகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்காக நீங்கள் கூறிய காரணமானது அக் காலகட்ட மலையக நுவரேலியா மாவட்ட அதிபர்களை அவமானப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. எனது தாழ்மையான இக் கூற்றுக்கு கௌரவ அமைச்சர் பதில் தருவாரா?

அட்டன் **பீ. செல்வராஜ்**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 மே 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 113
இல. 47. 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# அரசியல் ஞானமில்லா ராஜபக்ச அரசாங்கம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பசில் ராஜபக்ச இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராக இனப்படுகொலை, மனிதத்திற்கெதிரான குற்றங்கள் நீதிக்கு புறம்பான படுகொலைகள், சித்திரவதைகள் ஆகிய குற்றங்கள் சாட்டப்பட்டு அமெரிக்க நீதிமன்றத்தில் நடவடிக்கை முயற்சி எடுக்கப்படுவதாக அறியமுடிகிறது.

அவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரங்களை அமெரிக்க சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கூடாக தாக்கல் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளை முன்னாள் அமெரிக்க பிரதி சட்டமாஅதிபர் தற்போது சட்டத்தரணியாக கடமையாற்றுபவருமான புறூஸ் பெயின் எடுத்து வருவதாகச் வெளியாகியுள்ளன. அவரின் குற்றப்பத்திர வரைவுகள் அமெரிக்க சட்ட மா அதிபருக்கும் ஐக்கிய அமெரிக்க காங்கிரசுக்கும் சரவதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அக்குற்றச்சாட்டுகள் யூகோஸ்லாவிய தலைவர் மிலோசெவிக்கிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு சமமானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோட்டாபய ராஜபக்ச அமெரிக்காவின் (இரட்டை) பிரஜையாவதுடன் பசில் ராஜபக்ச கிறீன்காரட் வழங்கப்பட்டவருமாவார்.

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிவரும் நிதியுதவியை இரண்டாவது தடவையாகவும் குறைக்கவிருக்கிறது. 2008 ஆம் ஆண்டிற்கான உதவியை 7.4 மில்லியன் டொலரிலிருந்து 6.5 மில்லியனாகக் குறைக்கத் தீர்மானித்துள்ளது. இவ்வாறு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான அமெரிக்க நிதியுதவி மட்டுமல்ல "பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான" நிதியுதவியையும் பாரிய அளவில் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் இங்கு இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்களும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காமையும் எனக் கூறப்பட்டுள்ளது. மிகவும் பாரதூரமான 16 மனித உரிமைகள் மீறல் (மூதூரில் இடம் பெற்று தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் கொலை, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலைகள் உள்ளடங்கலாக) சம்பவங்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை மீதான அவதானிப்புகளை செய்த சர்வதேச சுதந்திர முக்கிய பிரமுகர்கள் குழு அவதானிப்பு நடவடிக்கைகளிலிருந்து வெளியேறியுள்ளது. இந்தியாவின் உயர்நீதிமன்ற பிரதம நீதியரசராக இருந்த பி.என். பகவதி தலைமையிலான அக்குழு விசாரணை நடவடிக்கைகள் நம்பிக்கை தருவதாகவும் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்றதாகவும் இல்லையென்ற அடிப்படையில் பல விமர்சனங்களை முன்வைத்துள்ளது. அக்குழுவின் வெளியேறும் முடிவானது மனித உரிமை மீறல்களை அவதானிக்கும் ஐ.நா கண்காணிப்பு காரியாலயத்தை இலங்கையில் அமைப்பதை சாத்தியமாக்குவதற்கான சதி என்று இலங்கையின் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி. சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களை மேற்கொண்டு வருகின்றன. அவை இலங்கைக்கு வழங்கும் உதவிகளை வெகுவாக குறைத்துள்ளன. ஜப்பானும் உதவிகளை நிறுத்த வேண்டிவரும் என்று எச்சரித்துள்ளது. அவற்றின் உள்நோக்கங்கள் தெரிந்து கொள்வதற்கு கடினமானவைகள் அல்ல. ஆனால் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்களே தமது முடிவுகளுக்கும் காரணமென்றே கூறிவருகின்றன. ஆசிய நாடுகளையே நம்பி "பயங்கரவாதத்திற்கு" எதிரான போரை முன்னெடுப்பதாக ராஜபக்ச அரசாங்கம் கூறி வந்தபோதும் இந்தியா- சீனா- பாகிஸ்தான் ஆகியவற்றின் அக்கறைகளினாலும் அவற்றினிடையேயான முரண்பாடுகளிடையேயும் இலங்கை மாட்டிக்கொண்டிருப்பதாகவே தெரிகிறது. இந்தியாவில் நடக்கும் ஒவ்வொரு சிறிய சிறிய நிகழ்வை பற்றியும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து இலங்கை அரசியற்கு பாதிப்பு ஏற்படுமா இல்லையா என்று பொதுவாகவே எதிர்வு கூறப்படுகிறது. ராஜீவ காந்தியின் கொலை வழக்கில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நளினியை ராஜீவ் காந்தியின மகள் பிரியங்கா சந்தித்ததை பற்றி பலவாறாக ஆராய்ந்து இலங்கையின இனப்பிரச்சினை விவகாரத்தில திருப்பங்கள் ஏற்படப் போவதாகப் பலரும் பல எதிர்வு கூறல்களை முன்வைக்கின்றனர்.

ஈரானுடன் இலங்கை அரசாங்கம் நெருக்கமாக உறவை வளர்த்திருப்பதால் இலங்கைக்கு வழங்குவதற்கு ஒப்புக்கொண்டிருந்த ஆயுதங்களை வழங்காது தடுத்து வைக்கப்போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு உறவுகளில் ஏற்பட்டுள்ள சில சிக்கல்களையே மேலே பார்த்தோம். இவையெல்லாம் இலங்கை அரசாங்கத்தின் இராணுவ ஓட்டத்தினால் ஏற்பட்டுள்ள விளைவும் சிக்கல்களுமாகும்.

இவை தமது நாட்டின் அரசியல் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தப்போவது உறுதி. இராணுவ நடவடிக்கைகளோ நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகின்றன. அழிவுகளும் கூடிக்கொண்டே போகிறது. எனினும் போரை நிறுத்தி மனிதஉரிமைகள் மீறல், ஜனநாயக மறுப்பு, ஆட்கடத்தல், கொலைகள் காணமால்போதல் கைதுகள் ஆகியவற்றைக் கைவிட்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக் கைகளை முன்னெடுப்பதற்கான 'ஞானம்' மட்டும் ராஜபக்ச அர சாங்கத்திற்கு வருவதாக இல்லை. ஆனால் இப்போது வராத ஞானம் காலம் கடந்து வந்து எவ்வித பயனும் இல்லை. அது சுடலை ஞானமாக மட்டுமே இருக்க முடியும்.

இவ்விடத்தில் "அரசியல் என்பது இரத்தம் சிந்தா யுத்தம் என்பதையும் யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல் என்பதையும்" விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

ஆசிரியர் குழு

# அரிசி விலை ஏற்றமும் மக்கள் வயிறு காய்தலும்

வெகுஜனன்

இலங்கை வெப்ப வலய நாடு என்பதும் அதன் பிரதான உற்பத்தி நெல்லாகவும் முக்கிய உணவு அரிசியாகவும் இருந்து வந்துள்ளது. இந் நெல் உற்பத்தியும் அரிசி உணவும் இலங்கையின் நீண்ட வரலாற்று நாகரீகத்தில் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளன. தென்னாசியாவின் நெற்களஞ்சியம் என்று கூறுமளவிற்கு இலங்கையில் நெல் உற்பத்தி மன்னராட்சிக் கால கட்டத்தில் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டதுடன் ஏற்றுமதியும் செய்யப்பட்டது. ஆனால் கொலனித்துவ வாதிகள் அத்தகைய நெல் உற்பத்தியை நலிவடையவும் அழிவடையவும் வைத்தனர். அதன் காரணமாக அவர்கள் இங்கிருந்து சென்ற பின்பும் இலங்கையானது தனது அரிசித் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு சுய உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. பல்வேறு விவசாய நீர்ப்பாசனத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் சுய தேவையை எட்ட முடியாது இன்றும் அரிசியை இறக்குமதி செய்யும் நிலையிலேயே இருந்து வருகிறது. அதனால் அரிசி என்பது பொருளாதாரம் சார்ந்ததாக மட்டுமன்றி அரசியலில் தாக்கம் விளைவிக்கும் ஒன்றாகவும் இருந்து வந்துள்ளது. பாராளுமன்ற தேர்தல் காலங்களில் இலவச அரிசி, குறைந்த விலையில் அரிசி போன்ற வாக்குறுதிகள் மக்களின் வாக்குகளுக்காக முன்வைக்கப்பட்டும் வந்தன. "சந்திர மண்டலத்திலிருந்தாவது அரிசி கொண்டு வருவோம்" என்று கூறி நின்றதையும் "அரிசி உட்பட எட்டு றாத்தல் உணவுப் பொருட்கள் தருவோம்" என்று வாக்குறுதியளிக்கப்பட்டதையும் கேட்க முடிந்தது. அத்தகைய அரிசி தான் இப்போது மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் வேகமான விலை அதிகரிப்பையும் தட்டுப்பாட்டையும் உருவாக்கி அரசியல் நெருக்கடியாக மாற்றியிருக்கிறது.

அண்மைய மாதங்களில் அரிசி விலை வேகமாக உயர்ந்து ஒரு கிலோ அரிசி 100, 90, 80 ரூபாவென விற்கப்பட்டது. பெரும் போக அறுவடைக்குப் பின்பு அரிசி விலை குறையும் என எதிர்வு கூறப்பட்டதையும் தாண்டி அரிசி விலை ஆனை விலை குதிரை விலையாகிக் கொண்டது. இந்நிலையில் கடந்த ஏப்பிரல் மாதம் 16ம் திகதி நள்ளிரவு முதல் அரசாங்கம் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து வர்த்தமானி மூலம் அறிவித்தது. அதனால் அரிசி மொத்த வர்த்தகர்கள் விசனமடைந்து தமக்கு நட்டம் எனக் கூறி எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அரசாங்கம் விலை மாற்றம் செய்யவில்லை. ஒரு நாள் கடையடைப்புச் செய்து கையிருப்பில் இருந்த அரிசியைப் மொத்த விற்பனையாளர்கள் பதுக்கவும் செய்தனர். அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டிற்கு வந்ததினால் கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முன்வருவதாகவும் கூறிக் கொண்டனர். ஆனால் அரிசியில் கலப்படம், தரக்குறைவு, நிறுவைக் குறைப்பு, கல்மண் சேர்ப்பு போன்றவற்றுடன் கட்டுப்பாட்டு விலைக்கு மேலாகவும் அரிசி விற்கப்படும் நிலை தான் இன்று காணப்படுகிறது. அரிசி விலை உயர்வுக்கும் தட்டுப்பாட்டிற்கும் புறக்கோட்டையின் தமிழ் முஸ்லீம் மொத்த வியாபாரிகளை மக்களுக்கு எதிரிகளாகக் காட்டி ஒருவகை இனவாதம் கலந்த பிரசாரத்தை மேற் கொண்ட அரசாங்கம் உண்மை நிலையை மறைத்துக் கொண்டது.

நாட்டு மக்களின் தேவைக்கான அரிசி இரண்டு வழிகளில் பெறப்படுகிறது. ஒன்று இறக்குமதி. இரண்டாவது உள்ளூர் நெல் உற்பத்தியாகும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கும் அரசாங்கம் அவ் அரிசிக்கு பலவகை வரிகளை அறவிட்டுக் கொள்கிறது. அத்துடன் இறக்குமதி பெரும் வர்த்தகர்கள் தமக்குரிய லாபத்தை கொள்ளை லாபமாகப் பெற்றுக் கொள்கிறார்கள் இதனால் இறக்குமதி அரிசி சந்தையில் அதிக விலை கொடுத்தே மக்களால் நுகர்வு செய்யப்படுகிறது.

அதேவேளை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் பெரும் அரிசி ஆலை முதலாளிகள் என்போர் கொள்வனவு செய்து அதனை அரிசியாக்கி தமது லாப நோக்கு அடிப்படையில் சந்தைக்கு விடுகிறார்கள். இந் நெல் கொள்வனவில் தற்போது அரசாங்கம் பெருமளவிற்கு ஈடுபடுவதில்லை. பெயருக்கு நெல் சந்தைப்படுத்தும் சபை என்பது இருந்த போதிலும் அது செயலற்றதாகவே இருந்து வருகிறது. இது தாராள தனியார்துறை முழுமையாக்கப்பட்டதன் விளைவாகும். அதேவேளை அரிசி ஆலை நடாத்தும் ஏகபோக முதலாளிமார் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து கூடிய விலைக்கு அரிசியைச் சந்தைக்கு விடுகிறார்கள். கடந்த பெரும் போக நெல் அறுவடை காலநிலை மாற்றம் காரணமான மழையினால் சிறு அழிவைக் கண்ட போதிலும் சிறந்த பெறுபேறுகளைக் கண்டது. இம் மொத்த உற்பத்தியில் 8 அல்லது 10 வீதத்தை மட்டும் நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு செய்யப்பட்டது. அதேவேளை மிகுதியான நெல் முழுவதையும் அதாவது விளைச்சலில் 80 வீத நெல் தனியார் ஏகபோக நெல் ஆலை முதலாளிகளாலேயே கொள்வனவு செய்யப்பட்டது. அதுவும் ஒரு கிலோ சம்பா ரூபா 21-50க்கும் நாட்டு நெல் ரூபா 19-50க்குமாக விவசாயிகளிடமிருந்து இத் தனியார் முதலாளிகளால் கொள்வனவு செய்யப்பட்டது. அதே நெல்லை அரிசியாக்கப்பட்டு சந்தைக்கு அறுபது எழுபது எண்பது ரூபாய்களுக்கு விற்கப்படுகிறது. இதனால் இந்த தனியார் ஏகபோக முதலாளிகளுக்கு 100 வீத லாபத்தை விட 300 வீத லாபம் கிடைத்துள்ளது. அதேவேளை இந்த ஏகபோக அரிசி ஆலை முதலாளிகளால் விலை உயர்வு மட்டுமன்றி நடுத்தர அல்லது சிறி அரிசி ஆலைச் சொந்தக்காரர்களும் நட்டமடைந்து ஆலைகளைப் மூட வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இங்கே சுட்டிக் காட்டப்படும் ஏகபோக அரிசி ஆலைச் சொந்தக்காரர்களான முதலாளிகள் என்போர் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் பங்காளிகள் ஆவர். பிரதான அமைச்சர்களின் நெருங்கிய உறவினர்கள். இவர்களின் கீழ் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பல நூறு லொறிகள் நெல் கொள்வனவிலும் அரிசி சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டு வருகின்றன. எனவே இலங்கையின் அரிசிச் சந்தையில் விலையைத் தீர்மானிப்போர் புறக்கோட்டையின் மொத்த இறக்குமதி வர்த்தகப் புள்ளிகள் மட்டுமல்ல. அரசாங்க அமைச்சர்களின் உறவினர்களான அரிசி ஆலை முதலாளிமார்களுமாவர். இம் முதலாளிகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் உள்ளனர். அவர்கள் கூட இப்போது அரசாங்கத்தை ஆதரித்துச் சென்றே தமது கொள்ளை லாபத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இந்த ஏக போக நெல் ஆலை முதலாளிமார் பற்றி ஜனாதிபதியோ அமைச்சர்களோ வாய் திறப்பதில்லை.

ஆதலால் அரிசி விலையினதும் தட்டுப்பாட்டினதும் திரைக்குப் பின்னால் யார் யார் இருந்து வருகிறார்கள் என்ற உண்மையை மக்கள் தெரிந்து கொள்வது அவசியம். அமெரிக்காவின் வழிகாட்டலில் ஜே. ஆரினால் புகுத்தப்பட்டு பின் சந்திரிகாவினாலும் தற்போது மகிந்த ராஜபக்ஷவாலும் நடைமுறைப்படுத்தப்படும் உலகமயமாதலின் கீழான தாராள தனியார் பொருளாதாரத்தின் மோசமான விளைவே இன்றைய அரிசிக்கு வந்துள்ள அவல நிலையாகும். காலநிலை மாற்றத்தால் அரிசி உற்பத்தி தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பாதிப்பைப் பெற்று வருகின்றமை நிராகரிக்க முடியாத ஒன்றாகும். ஆனால் அதுவே நமது நாட்டு அரிசித் தட்டுப்பாட்டிற்கும் விலை உயர்வுக்கும் முழுக் காரணமாகி விட முடியாது. திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தி முறைமையின் கீழ் நாட்டின நெல் உற்பத்தி உறுதியாக முன்னெடுக்கப்பட்டிருக்குமாயின அரிசித் தட்டுப்பாடு பெரும்பாதிப்பாக மாறச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

ஆனால் உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் ஆலோசனைக்கு அமைய நவதாராள பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியதன் விளைவையே இன்று நாடு அனுபவிக்கின்றது. நாட்டு மக்களில் 40 வீதமானோர் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றனர். அவர்கள் ஒருவேளை தானும் சோறு சாப்பிட முடியாத நிலையிலேயே இருந்து வருகிறார்கள். கவலை தரும் விடயம் யாதெனில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளே ஒருவேளை உணவுக்கு அரிசி வாங்க முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பது தான். பெருநகரங்களின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் உல்லாச உயர் விடுதிகளிலும் முதலாளித்துவ வர்த்தக மேட்டுக்குடியினர் தாராளமாக உண்டு களித்து உல்லாசவாழ்வு வாழ்கின்றனர். அரசாங்க எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் என்போர் பாராளுமன்றத்திலும் அலரிமாளிகையிலும் தாராளமாக உணவு வகைகளையும் குடிவகைகளையும் உட்கொண்டு குறைவற்ற வாழ்வை அனுபவிக்கின்றனர். அங்கெல்லாம் மீத மிச்சமாகும் பெருந்தொகை சோறு உட்பட உணவு வகைகள் குப்பைக்கும் பன்றிப் பண்ணைகளுக்கும் சென்றடைகின்றன. அதேவேளை ஏகப்பெரும்பான்மையான தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் ஒருவேளை உணவுக்காகப் பெரும் துயரம் அனுபவிக்கின்றனர். வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் ஏழைகள் என்ற பெயரில் காய்ந்து போன வயிறுகளுடனும் ஒட்டி உலர்ந்த உடல்களுடனும் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய வறுமையைத் தான் தாராளமயம் தனியார்மயம் உலகமயம் என்பன எமக்கு அளித்துள்ள பயன்களாகும். சொத்து சுகம் பெற்ற உயர் வர்க்க சக்திகளும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளான ஆளும் வர்க்கக் கட்சிகளும் அதிகாரத்தில் தொடரும் வரை இன்றைய ஏழ்மையும் வறுமையும் மக்கள் வயிறுகள் காய்தலும் தொடரவே செய்யும். இதனை மக்கள் அரசியல் ரீதியில் உணர்வது அவசியமாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஜே வி பி உடைந்தால் ஒட்டினால் ஒன்றே

**தயா**

பாராளுமன்ற அரசியலில தீவிர பேரினவாதத்தை அரசியலாகக் கொண்டு இயங்கி வந்த ஜே.வி.பி யில் (மக்கள் விடுதலை முன்னணியில்) பாரிய பிளவு ஏற பட்டுள்ளது. ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச எம்.பி யின் தலைமையில் 10 எம்பிக்கள் சோமவன்சவின் தலைமைக்கு மாறாகச் செயறபட ஆரம்பித்துள்ளமை வெளிப்படையாகியுள்ளது. கட்சிக்குள் தனக்கு இருந்த முரண்பாட்டை பாராளுமன்றத்தில் 'அழுது உணர்ச்சிபூர்வமான' உரையாற்றி பகிரங்கப்படுத்தினார் வீரவன்ச. அவரைக் கட்சிப் பதவிகளிலிருந்து இடைநிறுத்தி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக சோமவன்ச அறிவித்தப் பிறகே அவர் அவ்வாறு செயறபட்டார்.

அதன் பிறகு வீரவன்சாவிற்கு ஆதரவான சில எம். பிக்களின் வாகனங்கள் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. அவருக்கு ஆதரவானவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். கட்சி முரண்பாடு தாக்குதல்களாக வளர்ச்சி அடைந்து செல்கிறது. இரண்டு குழுவினரும் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இது அடிப்படையில் பாரிய கொள்கை முரண்பாட்டின் வெளிப்பாடல்ல. ஜே.வி.பி என்ற பெயரில் இயங்கிய சிங்கள தேசிய வாதிகள் சிறு முதலாளித்துவ வர்க்கத்தினர் சிங்களப் பேரினவாதிகளிடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியின் வெளிப்பாடாகும்.

தமிழ் ஊடகங்கள் ஜே.வி.பியை இடதுசாரி அமைப்பென தொடர்ந்து எழுதிவருவதும் தமிழ்தேசியவாதிகள் அதனை மாக்சிச அமைப்பென்று நக்கலாகக் கூறுவதும் இடதுசாரி, மாக்சிச விரோத நிலையை வெளிப்படுத்தவேயாகும். ஜே.வி.பி சிவப்புக் கொடிகளை ஏந்திக் கொண்டிருந்த, சோஷலிஸத்தை உச்சரித்த 1971, 1988 களில் ஆயுத நடவடிக்கைகளை முன்னெடுத்த அமைப்பேயன்றி அடிப்படையில் அது ஒரு இடதுசாரி அமைப்போ, மாக்சிச அமைப்போ கிடையாது.

யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் தேசிய அபிலாவைகளை உறுதி செய்யும் வகையிலான அதிகாரப்பங்கீட்டிற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதனை வலியுறுத்தி பேரினவாதப்பிரசாரத்தை அரசாங்கத்திடம் தொடர்ந்து ஜே.வி.பி செய்து வந்தது. அதனால் இன்று நாடு சந்தித்திருக்கும் அழிவுகளுக்கு அக் கட்சியும் பாரியப்பொறுப்பைக் கூறியே ஆக வேண்டும். அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல வீரவன்ச 'அல்லி மலர் இயக்கம்' என்றொன்றை அமைத்து இராணுவ முகாம்களுக்கு சென்று யுத்தத்தை நடத்து வதை ஊக்குவித்து பிரசாரங்களை செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் பாராளுமன்ற அரசியலில் மூழ்கி விட்டதாகவும், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக அவைகள் முன்வைக்கும் அதிகாரப்பகிர்வு திட்டங்கள் நாட்டுப் பிரிவினைக்கே வழி வகுக்கும் என்றும் ஜே.வி.பி பிரசாரம் செய்தது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அதிகாரங்களை பகிர வேண்டும் என்ற நிலைப்பாட்டுடைய நேர்மையான இடதுசாரிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான கட்சிகளாகக் காட்டிப் பிரசாரம் செய்தது. அவ் விடதுசாரி கட்களுக்கு "இடதுசாரி புலிகள்" என்றும் பெயரிட்டுப் பிரசாரம் மேற்கொண்டது ஜே.வி.பி. அதே போன்று தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்த தொழிற சங்கங்களை "தொழிறசங்கப் புலிகள்" என்று கூறியது. தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயங்கள் பற்றி எழுதிவந்த பேசி வந்த மாற்று ஊடகங்களை "ஊடகப்புலிகள்" என்று அழைத்தது. யுத்தத்திற்கு எதிரானவர்களை "சமாதானப் புலிகள்" என்று அழைத்தது.

இவ்வாறு ஜே.வி.பி யின் நிலைப்பாட்டிற்கு மாறானவர்கள் எல்லோருக்கும் 'புலிகள்' என்று பட்டம் சூட்டி பிரசாரங்களை ஜே.வி.பி முன்னெடுத்து வந்தது. இதனால் அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான மாற்று அரசியல் சக்திகள் ஒருங்கிணைக்கப்பட்டவும் பலமடையவும் முடியவில்லை. "சிங்களப்புலிகள்" என்று பெயர்சூட்டப்பட்டு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சிங்கள இளைஞர்களும் இடதுசாரிகளும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதற்கு வழிசெய்ததில் ஜே.வி.பிக்கு பாரிய பங்குண்டு.

பெயரளவில் இன ஒற்றுமை பற்றி கதைத்தாலும் பேரினவாத ஆதிக்கத்தை நிலைநாட்டும் கட்சியாகவே ஜே.வி.பி செயறபட்டு வந்துள்ளது. ஊழல், மோசடிகள் போன்றவற்றை பற்றி கதைத்தாலும் வாழ்க்கை செலவு அதிகரிப்பால் மக்கள் படுகின்ற கஷ்டத்திற்கு எதிராக உரிய வேலைத் திட்டங்கள் அதனிடம் இல்லை. பூகோளமயமாதலுக்கு எதிராகப் பேசிவந்த போதும் அதனூடான பாதிப்புகள் ஏற்பட்ட போதெல்லாம் மௌனமாக இருந்து வந்தது.

ஐ.தே.கட்சி சுதந்திரக்கட்சிக்கு அடுத்தபடியான மூன்றாவது கட்சியாக ஜே.வி. பியை வைத்திருக்க வேண்டும் என்பதும் பாராளுமன்ற அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாகத் தாமே இருக்க வேண்டும் என்பதும் ஜே.வி.பி யின் தலைவர்களின் இலக்காக இருந்து வந்தது. அந்த சக்தியை பெறுவதற்காகவே அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளர்களானார்கள். பேரினவாதத்தை உயர்த்தி நிற்பதால் பெரும்பான்மை இன மக்களிடம் ஆதரவைப் பெறலாம் என்றெண்ணிச் செயறபட்டனர்.

இதனால் ஜே.வி.பி இரண்டு பிரதான கட்சிகளிலிருந்தும்

தொடர்ச்சி..... 10ம் பக்கம்

# உடல் தளர்ந்தாலும் மாக்சிச உள்ளம் தளராத

## தோழர் மூ. கணபதிப்பிள்ளை

இலங்கையின் வடபுலத்து சமூக உருவாக்கத்தில் ஆண்ட பரம்பரையின் ஆதிக்கக் கருத்தியல் செல்வாக்கு கணதியுடன் இருந்து வருவதாகும். இந்தியாவில் பிராமணிய ஆதிக்கம் போன்றதே வடபுல யாழ்ப்பாணத்து வேளாள ஆதிக்கம் இந்தப் பழைமைவாத ஆதிக்கக் கருத்தியலானது வடபலத்து மக்களை சாதிய சமூகமாகப் பிரித்து கட்டியாண்டு வந்தது. இக் கொடிய சமூக நடைமுறைகளுக்கு தாழ்த்தப்பட்டவர்களாக்கப்பட்ட மக்கள் மட்டுமன்றி அதற்கு சற்று மேலே படிநிலையில் இடை நிலைச் சாதிகளாக்கப்பட்ட விவசாயிகளும் கைவினைத் தொழில் செய்வோரும் கூட சாதிய வர்க்க ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகினர்.

அத்தகையோர் மத்தியில் இருந்து நாற்பதுகளுக்குப் பின் கருத்து சிந்தனை என்பனவற்றால் உந்தப்பட்டவர்கள் சமூக ஏற்றத்தாழ்வையும் வர்க்க நிலையையும் உணர்ந்து பொதுவுடைமை இயக்கத்தினால் ஈர்க்கப்பட்டனர். அத்தகையவர்களில் ஒருவராக மூத்ததம்பி கணபதிப்பிள்ளை பொதுவுடைமை இயக்கத்திற்குள் வந்து கொண்டார். தோழர் கணபதிப்பிள்ளைக்கு இப்போது 75 வயதாகிறது. அவர் காங்கேசன்துறை மயிலிட்டியின் விளங்காவத்தைக் கிராமத்தைச் சேர்ந்தவர். முற்றிலும் உடல் உழைப்பில் ஈடுபட்ட சிறு நில விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தோழர் கணபதிப்பிள்ளை மாணவனாக இருந்த காலத்திலே பல்வேறு சமூக ஏற்றத்தாழ்வு நடைமுறைகளைக் கண்டு அவற்றுக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்ற ஓர்மத்தை வளர்த்துக் கொண்டவர். தனது குடும்பம் தன்னைச் சூழவுள்ள கிராமம் கல்வியில் பின் தங்கி இருந்தமை கண்டு அதற்குரிய காரணம் பொருளாதார பின்மையும் அன்றைய ஆண்டபரம்பரைக் குடும்பமான உடையாளவின் ஆதிக்கமும் தான் என்பதை உணரலானார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. இடைநிலைச் சாதி மக்களுக்கும் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் உயர்கல்வி கற்பது முற்றாகவே மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்தது. அந்த நிலை இலவசக் கல்வியாலும் அரசாங்கம் பாடசாலைகளை தேசியமயமாக்கியதாலும் தாய் மொழிக் கல்வியைக் கட்டாயப்படுத்தியதாலுமே மாற்றமடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் கணபதிப்பிள்ளை கல்வியில் அக்கறைப்பட்டு காங்கேசன்துறை அமெரிக்கன் பாடசாலையில் ஆறாம் வகுப்பு வரை கல்வி கற்ற பின் நடேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்து இடைநிலைக் கல்வியைக் கற்க விடுகை அனுமதி கோரிய போது அது மறுக்கப்பட்டது. அவரது விடுகைப் பத்திரமும் ஏனைய சான்றிதழ்களும் கிழித் தெறியப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். இச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் ஏற்படுத்தியது. அவ் வேளை பி. நாகலிங்கம் செனட்சபை உறுப்பினராக இருந்தவர். அவரது உதவியாலும் விடா முயற்சியாலும் கணபதிப்பிள்ளை நடேஸ்வராக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு அன்றைய எஸ்.எஸ்.சி வரை படித்தார். அவரது குடும்ப நிலை தொடர்ந்து படிக்க இடமளிக்கவில்லை. அதனால் விவசாயத்தில் ஈடுபட்டார்.

அவரது மாணவக் காலத்தில் பொதுவுடைமை இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றி அறிந்து கொண்டதனால் கட்சி இயக்கத்துடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தார். அன்றைய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வலி வடக்கு கட்சிக் கிளையிலும் வாலிபர் இயக்கத்திலும் இணைந்து கொண்டார். கட்சியின் நடவடிக்கைகளில் ஊக்கமுடன் பங்கு கொண்டு செயற்பட்டு வந்த அவர் அமைதியான சுபாவம் கொண்டவர். ஆனால் அவரிடம் வர்க்க வைராக்கியமும் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற பொதுவுடைமைக் கொள்கையின் தெளிவும் உறுதி பெற்றிருந்தது.

காங்கேசன்துறை மயிலிட்டி பிரதேசத்தில் முக்கியமான தோழர்கள் பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து அக் காலப் பழைமைவாதச் சூழலில் கடுமையான எதிர்ப்புக்கள் மத்தியில் அரசியல் வேலைகளை முன்னெடுத்து வந்தனர். தோழர்கள் டாக்டர் சு.வே. சீனிவாசகம், சிதம்பரி, குமாரலிங்கம், மு. கந்தப்பிள்ளை, இ.கா. சூடாமணி, சின்னராசா, கந்தையா போன்றவர்களுடன் தோழர் கணபதிப்பிள்ளையும் இணைந்து வேலைகளை முன்னெடுத்தார். அன்றைய மயிலிட்டி கிராம சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒருவருக்கு விஷேடமான துணிவும் ஆற்றலும் அக்காலத்தில் தேவைப்பட்டது. அந்தளவிற்கு மயிலிட்டி உடையார் குடும்பத்தின் ஆதிக்கம் கொடி கட்டிப்பறந்த காலம். யாராவது அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டால் அத்தகையவர் மறைமுகமாகவும் நேரடியாகவும் மிரட்டப்பட்டும் தாக்கப்பட்டும் வாபஸ் வாங்கவைக்கப்படுவார். அத்தகைய சூழலில் தோழர் கணபதிப்பிள்ளை மயிலிட்டி எட்டாம் வட்டாரத்தில் உடையார் ஆதிக்கத்தை எதிர்த்துப் போட்டியிட்டார். அதன் மூலம் பலவித எதிர்ப்புகள் அச்சுறுத்தல் ஏற்பட்டன. இவற்றுக்கெல்லாம் தோழர் கணபதிப்பிள்ளை முகம் கொடுத்து கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக நட்சத்திரம் சின்னத்தில் போட்டியிட்டார். அவரது குடும்பத்தினர் அவருக்கு பக்கபலமாக இருந்து வந்ததுடன் கட்சித் தோழர்கள் மக்களின் ஆதரவைத் திரட்டிக் கொடுத்தனர். அத் தேர்தலில் 47 அதிகப்படி வாக்குகளால் வெற்றியும் பெற்றார். அன்றைய பழைமைவாத ஆதிக்க சூழலில் சாதாரணமான ஒரு விவசாயி தேர்தலில் போட்டியிடுவது என்பது இலகுவான ஒன்றல்ல என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும். அதற்கான துணிவும் ஆற்றலும் பொதுவுடைமைவாதிகளுக்கு மட்டுமே இருந்தது.

தோழர் கணபதிப்பிள்ளை கட்சியில் ஏற்பட்ட தத்துவார்த்தப் பிளவுகளின் போது மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனையின் பக்கம் உறுதியாக நின்று வந்த ஒருவர். கட்சியின் வெகுஜனப் போராட்டங்கள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டு தனது பங்களிப்பை வழங்கி வந்தவர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம், விவசாய சங்கம் போன்றவற்றின் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த தோழராவார். அவர் தனது குடும்பத்தையும் உறவினர்களையும் கட்சியின் ஆதரவாளர்களாக வைத்திருப்பதில் அக்கறையுடன் இருந்து வந்த ஒரு தோழர். முதுமையடைந்த சூழலிலும் தோழர் கணபதிப்பிள்ளை கட்சி இயக்கம் பற்றிய அக்கறையுடனும் நம்பிக்கையுடனும் இருந்து வருகின்றமை இளந்தலைமுறைத் தோழர்களுக்கு படிப்பினை தரும் முன்னுதாரணமாகும். அரசியல் நெருக்கடிகளும் அச்சுறுத்தல்களும் நிறைந்த வடபுலத்து சூழலிலும் கட்சியின் எந்தவொரு கூட்டத்திலும் ஏனைய கட்சி நிகழ்வுகளிலும் தோழர்கள் மு. கந்தப்பிள்ளையும் மூ. கணபதிப்பிள்ளையும் துவிச்சக்கர வண்டியில் பல கிலோ மீற்றர் தொலைவில் இருந்து வந்து உணர்வு உற்சாகத்துடன் கலந்து கொள்வதை அண்மைக் காலம் வரை காண முடிந்த ஒன்றாகும். புதிய- ஜனநாயக கட்சி தனது 25 வது வருட விழாவின் போது புரட்சிகர கௌரவம் வழங்கி செஞ்சால்வை அணிவித்து விருது வழங்கப்பட்ட மூத்த அறு தோழர்களில் தோழர் கணபதிப்பிள்ளையும் ஒருவராவார். பதினெட்டு வருடம் முன்பான வலிவடக்கின் சொந்த வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்வு உட்பட்ட பல நிலைப் பிரச்சினைகள் மத்தியிலும் தோழர் கணபதிப்பிள்ளை போன்ற மூத்த கம்யூனிஸ்ட் தோழர்கள் தமது பொதுவுடைமை நிலைப்பாட்டில் தெளிவுடனும் நம்பிக்கையுடனும் இருந்து வருவது புரட்சிகரப் போற்றுதலுக்குரியதாகும். உடல் நிலை தளர்ந்தாலும் மாக்சிச உள்ளம் தளராத தோழராக கணபதிப்பிள்ளை இருந்து வருகிறார். அவர் மேலும் ஆரோக்கியத்துடன் இருக்க கட்சியும் தோழர்களும் வாழ்த்துகின்றனர்.

*சி.கா.செ*



**தோழர் மூ. கணபதிப்பிள்ளை புதிய- ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு (2003) விழாவில் செஞ்சால்வை அணிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறார்.**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் பாதாளத்தை நோக்கிய பயணம்

பயங்கரவாதத்தை முறியடித்து விட்டால் இலங்கையின் பிரச்சனைகளெல்லாம் தீர்வு வந்துவிடும் என்பது கடந்த கால் நூற்றாண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டு வந்தவர்கள் மக்களுக்குச் சொல்லி வந்த பொய்களில் முக்கியமானது. போரைத் தீவிரப்படுத்த முடிவும் ஒவ்வொரு நேரத்திலும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்க்கப் பயங்கரவாதத்தை முற்றாக முறியடிக்க வேண்டும் என்றே சொல்லப்பட்டு வந்தது. இடையிடையே அமைதிக்கான நடவடிக்கைகள் தேவைப்படுகிறபோது மட்டும் பயங்கரவாதம் என்பது அடக்கி வாசிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் அரசாங்கத்தின் விருப்பத்திற்கு அமைந்த ஒரு அமைதியைத் திணிக்க இயலாத போது மறுபடியும் தமிழ் மக்களின் போராட்டம் பயங்கரவாதமாகி விடும். இது பார்த்தும் கேட்டும் அலுத்த கதை.

நாட்டிற் பயங்கரவாதம் இல்லை என்று யாருஞ் சொல்ல முடியாது. ஆயுதமேந்தாத யாரும் கொல்லப்படுவதையும் அவர்களது வாழ்வும் உடைமைகளும் வன்முறையாற் பறிக்கப்படுவதையும் பொதுச் சொத்துக்கள் அழிக்கப்படுவதையும் நாம் பயங்கரவாதச் செயல்கள் என்று கொள்வோமானால் இரண்டு பிரதான வகையான பயங்கரவாதங்களைக் காணலாம். ஒன்று அரசு நடைமுறைப்படுத்துகிற பயங்கரவாதம் மற்றது அரசுக்கு எதிரான சக்திகள் நடைமுறைப்படுத்துகிற பயங்கரவாதம். பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதின் பொதுவான உடன்பாடு இருந்தாலும் எது பயங்கரவாதம் என்பதிலும் எவ்விதமான பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலும் கருத்து வேறுபாடு மிகுதி.

முன்னைய அரசாங்கம் எதையும் விட ராஜபக்ஷ அரசாங்கம் பயங்கரவாதிகளுடனான போரில் பெரிய வெற்றிகளைப் பெற்றுள்ளது என்ற கருத்துத் தென்னிலங்கையிற் பரவலாக உள்ளது. இது இன்றைய அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாமல் தடுக்க உதவுகிறது என்பதும் உண்மை. அரசாங்கம் கிழக்கில் விடுதலைப் புலிகளை முறியடித்துள்ளது போல வடக்கிலும் முறியடிக்க இயலும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் உருவாக்கியது மட்டுமன்றி அதைச் செயலிலுங் காட்டுவதற்கு வடக்கிலும் போரை உக்கிரப்படுத்தியதோடு வெற்றிக்கான குறுகிய காலக் கெடுவும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டது. எதிர்பார்த்த வேகத்தில் வெற்றி கிட்டவில்லை என்பது போக அரசாங்கம் ஏற்றுக் கொள்வதை விடப் பெருமளவில் அரசபடைகள் உயிரிழப்புகளைக் கண்டுள்ளன. அரசாங்கம் சொல்லுகிற வேகத்தில் விடுதலைப் புலிகள் பின்வாங்கவுமில்லை. இதனுடைய கருத்து விடுதலைப் புலிகள் வெல்கிறார்கள் என்பதல்ல. அங்கும் இழப்புக்கள் மிகுதி. அனைவரையும் விட அதிகமாகத் தமிழ் மக்களே துன்புறுகின்றனர்.

உண்மை என்னவென்றால் இரு தரப்பிலும் பெரும் இழப்புக்கள் நேர்ந்தும் போர் மூலம் திட்டவட்டமான வெற்றியை யாரும் பெற இயலாதுள்ளது. யார் பெறுகிற அற்ப வெற்றியானாலும் அதனால் அதிகம் இழப்புக்களைச் சந்திப்போர் வறுமைப்பட்ட உழைக்கும் மக்கள் தாம். இது ஒவ்வொரு போரக் காலத்திலும் நாம் திரும்பத் திரும்பக் கண்டது. எப்போதுமே போர் சில நிச்சயமான விளைவுகளைத் தந்துள்ளது. பொருளாதாரச் சிதைவு சட்டமும் ஒழுங்கும் சீர்குலைதல் சனநாயக மறுப்பு, குற்றச் செயல்களின் பெருக்கம் நிருவாக ஊழல் சமூகச் சீரழிவு என்பன என்றும் நிச்சயமானவை. இவை சமூகத்தில் உள்ள அனைவரையும் வெவ்வேறு அளவுகளிற் பாதிக்கின்றன. ஒரு எல்லை வரை மக்களால் இச்சுமைகளைத் தாங்க இயலுமாகிறது. அதன் பின்பு இரண்டு சாத்தியப்பாடுகள் தான் உள்ளன. ஒன்று மக்கள் போராடத் திரள முன்னரே ஏற்படும் பாஸிஸ அடக்குமுறை ஆட்சி. மற்றது மக்கள் போராடி வெல்லும் புரட்சிகர மாற்றம். இன்றைய சூழ்நிலையில் முதலாவதற்கான வாய்ப்பே அதிகம். அது பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

நாட்டிற் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைவது ஒரு புறமிருக்க, அரசாங்கமே அதற்கு உடந்தையாக இருந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆட்கடத்தல், மிரட்டல், கொள்ளை, கொலை ஆகியன மிகவும் அதிகரித்துள்ளன. அதேவேளை குற்றவாளிகள் சட்டப்படி தண்டிக்கப்படாமல் உள்ளனர். அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எது விதமான அக்கறையுங் காட்டவில்லை என்ற குற்றச் சாட்டு அண்மையில் வெளியேறிய சுயாதீனமான சர்வதேச மாண்புடையோர் குழுவினர் உட்படப் பலராலும் பல மட்டங்களிலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியிலேயே பத்திரிகையாளர்கட்கெதிரான வன்முறையும் மிரட்டலும் அரசாங்கத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தில் அமைச்சர் ஒருவரது சண்டித்தனத்திற்கு எதிராக ஊழியர்களது எதிர்ப்பு நடவடிக்கை நிகழ்ந்தது. சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலகினாலும் அவரது அதிகாரத்திற்கு எதுவித மான குறைவுமில்லை. அதேவேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்நின்ற கூட்டுத்தாபன ஊழியர்கள் குற்றச் செயற் கும்பல்களால் இலக்குவைத்துத் தாக்கப்பட்டு வந்துள்ளனர். இவையாவும் அரசாங்கம் அராஜகத்தின் மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள எடுக்கிற முயற்சிகளே ஒழிய வேறு எதுவுமல்ல.


மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளை முறியடித்த பின்னரும் சட்டமும் ஒழுங்கும் மோசமாகவே உள்ளன என்பது பற்றியும் சிறுவர்கள் கடத்தப்படுவது பற்றியும் மனித உரிமை மீறல்களும் குற்றச் செயல்களும் பெருகி வருவது பற்றியும் பல அவதானிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகள் 1994ல் கருணா குழுவினரைத் தோற்கடித்த பின்பு அரச படைகளது துணையுடன் அந்த ஆயுதக் குழு மீளக் கட்டி யெழுப்பப்பட்டது. அதனால் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மக்கள் நிம்மதியாக வாழ இயலவில்லை. இரண்டு மாவட்டங்களிலும் தமிழ்- முஸ்லிம் நல்லுறவுக்குக் கேடான காரியங்களே நடக்கின்றன. அரசியற் படுகொலைகளிலும் அரசியற் காரணங்கட்கான மிரட்டல்களிலும் ஆட்கடத்தல்களிலும் மட்டக்களப்பு மாவட்டம் முன்னணியில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் மட்டக்களப்பில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அவை அரசாங்கம் விரும்பிய விதமான முடிவுகளைத் தந்துள்ள நிலையில் வடக்கினின்று பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

கிழக்கில், முக்கியமாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் அடுத்தபடியாக அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் உள்ள சூழ்நிலை நியாயமான முறையில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தோதானதல்ல என்று எல்லாருமே அறிவர். அரசாங்கத்தின் கூட்டாளிக் கட்சிகள் சிலவும் அதே விதமான கருத்தை வெளியிட்டுள்ளன. என்றாலும் தேர்தல் முறைகேடுகள் பற்றியும் த.ம.வி.பு என்கிற அமைப்பினர் ஆயுதந் தாங்கியபடி தேர்தலில் பங்குபற்றுவது பற்றியும் முறைப்பட்டுக் கொண்டும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் ஒழுங்கீனங்களைக் கண்டித்துக் கொண்டும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் யூ.என்.பி, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன பங்குபற்றுகின்றன. த.ம.வி.பு அமைப்புடன் பொதுசன முன்னணி தேர்தல் கூட்டணி அமைத்துள்ளதைக் கண்டித்துள்ள பாராளுமன்ற இடதுசாரிகள் வேறு மூன்று தமிழ்க் கட்சிகளுடன் கூட்டணி வைத்துள்ளார்கள். அரசாங்கத்துடன் அந்தளவுக்குக் கருத்து முரண்பாடிருந்தால் இவர்கள் எல்லாரும் ஏன் அரசாங்கத்துக்கு தமது ஆதரவை விலக்கிக் கொள்ள மாட்டார்கள்? தேர்தல் அரசியல் என்னமாதிரிச் சந்தி சிரிக்கிறது என்பதற்கு மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் நல்ல சான்று என்றால் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் அதையும் மேவிவிடும் என்று நாங்கள் நம்பலாம்.

கட்சி அரசியலைக் கேலிக் கூத்தாக்குவதில் இந்த அரசாங்கம் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் சாதனையையும் மிஞ்சி விட்டது என்னலாம். யூ.என்.பியைப் பிளவுபடுத்திய பிறகு இப்போது ஜே.வி.பியைப் பிளவுபடுத்துவதிலும் அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது. உறுதியான பாராளுமன்ற அரசாங்கத்திற்கு உத்தரவாதமளிப்பது அரசியல்வாதிகளது ஊழல்களே என்ற உண்மையை இன்றைய அரசாங்கம் ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளது.

இந்தக் கோமாளிக் கூத்துக்கு நடுவே விலைவாசிகள் பல மடங்காக ஏறுகின்றன. உலகச் சந்தையையும் உலகளாவிய பணவீக்கத்தையும் குற்றஞ் சொல்லி அரசாங்கம் தப்பிக் கொள்ள முயன்றாலும் இலங்கையின் விலைவாசி உயர்வும் பண வீக்கமும் பிற ஆசிய நாடுகளினதை விடப் பல மடங்கு அதிகம். அதே வேளை அரிசி விலைக் கட்டுப்பாடு என்கிற நாடகமாடிக் குறுகிய காலத்திற்கு மக்களை ஏமாற்றுகிற முயற்சி வெகு விரைவிலேயே பெரும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு வழி வகுக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. நாட்டின் அந்நியக் கடன் சுமை மேலும் அதிகமாக்கப்பட்டுள்ளது. நாட்டின் உற்பத்தித் துறை சீரழிந்துள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தின் மீது அந்நிய முதலீட்டாளர்கள் வேகமாக நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

நாட்டின் மனித உரிமை மீறல்கள் பற்றிய அக்கறையின்மை போக, அவற்றை அலட்சியம் செய்வது போக, அவற்றுக்கு அரசாங்கம் உடந்தையாகவும் உள்ளது என்ற கருத்துச் சர்வதேச மட்டத்தில் வலுவடைகிற விதமாகவே அரசாங்கம் நடந்து வந்துள்ளது. நாட்டில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் யாரால் சுட்டிக் காட்டப்பட்டாலும் சுட்டிக்காட்டுவோரை அவமதிப்பதையே அரசாங்கம் தனது நடைமுறையாக்கியுள்ளது. அதேவேளை அமெரிக்கா, இலங்கை அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்துக் கொண்டே நிதியுதவியும் ஆயுதங்களும் வழங்கி வருகிறது. அமெரிக்காவின் உலக ஆதிக்க நோக்கத்தாலும் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்தாலும் இலங்கை சர்வதேச அரசியலில் ஒரு பகடைக்காயாகி வருகிறது.









சீனா, பாக்கிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்துவதைத் தடுக்கிறதற்காக என்று ஒரு புறம் இலங்கை அரசாங்கத்தின் போரை ஆதரித்துக் கொண்டு இன்னொரு புறம் ஆட்சிக்குள் குழிபறிக்கிற வேலைகளும் நடைபெறுகின்றன.

அண்மைக் காலமாக, இலங்கை பற்றி மேற்குலகில் வெளிவெளியாகவும் இந்தியாவிற் சாடைமாடையாகவும் காணப்படுகிற அதிருப்தி இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை அவை விரும்புவதாக எண்ணுமாறு தூண்டலாம். ஆனால் இவை ஆட்சி மாற்றத்தை இலக்காகக் கொண்டவையா அல்லது அரசாங்கத்தைத் தமது பிடிக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளா என்பதை உறுதியாகக் கூற முடியாது.

வேறு வழியின்றி ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினாலும் அதன் நோக்கம் மனித உரிமை மீறல்களையோ போரையோ முடிவு கட்டுவதல்ல. அது தேசிய இனப்பிரச்சனையின் தீர்வு பற்றியதாயும் அமையாது. அது சனநாயக மீட்சிக்கானதாகவும் இருக்கமாட்டாது.

அந்நியக் குறுக்கீடு எதுவும் அந்நிய ஆதிக்க நோக்கங்களைக் கொண்டிருக்குமே ஒழிய இலங்கை வாழ் மக்களின் நலன் பற்றிய அற்ப அக்கறை உடையதாகவும் அமையாது என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம்.


எனவே தான் நமது உடனடியான கடமை அந்நியக் குறுக்கீடு எதற்கும் இடமில்லாத விதமாக போரினின்றும் கட்டுக்கடங்காது விரிவடையும் மனித உரிமை மீறல்களினின்றும் சனநாயக மறுப்பினின்றும் நாட்டை மீட்டெடுக்கும் இயக்கமொன்றைக் கட்டி யெழுப்புவதாகும்.

சனநாயகத்திற்கும் மனித உரிமைகட்கும் சமாதானத்துக்குமான பேரியக்கம் ஒன்று பாராளுமன்றச் சந்தர்ப்பவாத அரசியலுக்குப் புறம்பாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதில் நேர்மையான சிங்கள இடதுசாரிகளதும் முற்போக்காளர்களதும் சனநாயகவாதிகளதும் உண்மையான நாட்டுப்பற்றுடையோரதும் பங்களிப்பு அவசரமானதும் அவசியமானதுமாகும்.

-மோகன்-

# நவகொலனியமும் அரசும்

ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள அரசு கொலனிய யுகத்திலிருந்தின்னும் அதிகம் வேறுபடாத பூகோளப் பொலிஸ்காரனின் வகிபாகத்தை கொண்டிருக்கிறது. அதேவேளை உள்நாட்டில் தனது மூர்க்கத்தனமான வலிமையை 'அமைதியையும்' 'சட்டத்தையும்' 'ஒழுங்கையும்' குலைக்கக் கூடிய வெகுசன ஆர்ப்பாட்டங்கட்கும் வெகுசன அரசியல் ஒன்றுதிரளுக்கும் எதிராக ஒதுக்கி வைத்திருக்கிறது. பெரும்பாலும் ஊடக ஆதிக்கக்காரரின் உள்ளார்ந்த நலன்கள் காரணமாகவும் சில வேளைகளில் நிர்ப்பந்தத்தின் கீழும் தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள வெகுசன ஊடகங்களது ஒத்துழைப்புடன் நெருக்கடியான காலங்கள் தவிர்ந்து அரசு பொதுசன அபிப்பிராயத்தின் மீது மெய்யான ஆளுமையுடன் உள்ளது. பொதுசன அபிப்பிராயத்தை ஆளும் வர்க்கத்திற்கும் ஏகாதிபத்திய நலன்கட்கும் மாறாகத் திருப்பக் கூடிய தனிப்பட்ட செயற்பாட்டாளர்களையும் குழுக்களையும் தெரிந்தெடுத்து இலக்கு வைக்கக் கூடிய விதமாக சில இணையரினரும் அரசியற் குழுக்களும் வெறுமனே அரசுக்கு மட்டுமன்றி அமைதிக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் மிரட்டலாக உள்ளனர் என்று காணுவது போல குறிப்பான சில விடயங்களில் அரசின் பார்வையையே ஏற்குமாறு பொதுசன அபிப்பிராயத்தை ஊடகங்கள் பண்படுத்துகின்றன. உள்நாட்டிலும் உலகு தழுவியும் ஈராக் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான பொதுசன அபிப்பிராயத்தைப் புறக்கணித்து பிரித்தானியாவின் ஆதரவுடன் அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்த போது பொதுசன அபிப்பிராயத்தை எவ்வாறு அமெரிக்க அரசு சூழ்ச்சியாகக் கையாண்டது என்பது மேற்கூறியதற்கு ஒரு நல்ல உதாரணம். எவ்வாறாயினும் போர் இயந்திரம் முடுக்கிவிடப்பட்ட பின்பு போர் எதிர்ப்பு அரசியல் விழிப்புடைய ஒரு சிறுபான்மைக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளை ஒரு காலத்திற்கு போரைக் கடுமையாக எதிர்த்த ஊடகப் பிரிவினரும் தேசபக்த, தேசிய பாதுகாப்பு காரணங்கள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு அடங்கிப்போயினர். தோல்வி அவமானம் உயிரிழப்பு, உயர்ந்து செல்லும் போர்ச் செலவு போன்ற வடிவில் போருக்குக் கொடுக்க வேண்டிய பெரும் விலையுமே உண்மையை உணரச் செய்கின்றன.



**நவ தாராளவாதச் சிந்தனைகள் திட்டமிட்டு புகுத்தப்பட்டன. ஏகாதிபத்தியத்தின் கைக்கருவிகளே என்.ஜி.ஓக்கள் இடதுசாரிகளின் பின்னடைவை என்.ஜி.ஓக்கள் பயன்படுத்திக் கொண்டன.**

ஏகாதிபத்தியம் தனது ஆக்கிரமிப்புக்கு ஆதரவை உறுதிப்படுத்தத் தேசபக்தி, தேசிய நலன்கள் போன்ற சிந்தனைகளைத் தேசியவாதத்துடன் சேர்த்துப் பயன்படுத்துகிறது. அதற்கும் அப்பால் 'எதிரியாகக் கூடியவர்களிடமிருந்து' கற்பனையான மிரட்டல்களைப் புனைந்து தனக்கு விசுவாசமான ஒரு ஊடகத்துறை மூலம் மக்களிடையே திறமாகப் பரப்பி விடுகிறது. மக்களை வறுபுறுத்திப் பணியச் செய்வதில் அச்சத்திற்கு ஒரு பெரும் பங்குண்டு. இதனால் பழைய கொலனித்துவம் போல, நவகொலனியமும் தனது உலக மேலாதிக்க நோக்கில் தேசத்தின் பெருமை, தேசபக்தி என்பனவற்றுக்கும் மேலாக இனம், மதம், பண்பாடு போன்ற அடிப்படைகளில் அந்நியர் பற்றி இருக்கிற மனத்தடைகளின் வழியான அச்சத்தையும் வெறுப்பையும் பயன்படுத்துகிறது.

அமெரிக்காவின் ஆக்ரோஷமான ராணுவ அடிப்படையிலான அயற் கொள்கையின் பின்னால் இருக்கிற இயங்குசக்தியான நவதாராளவாதச் சித்தாந்தம் பெரிய கம்பனிகளின் லாபம் மேலும் பெருகுவதை உறுதிப்படுத்தச் சமூக நலன்கட்காகவும் பிற அத்தியாவசிய சேவைகட்காகவுமான அரசின் செலவினத்தைக் குறைக்குமாறு வேண்டுகிறது. அரசின் சலுகைகள் முற்றாக இல்லாமலாக்கப்படவில்லை. எனினும் அவை பெருமளவும் சமூகத்தின் வசதி படைத்தோருக்கே உதவுகின்றன. ஊதியங் குறைந்த தொழிலாளர், வேலையற்றோர், விளிம்புநிலைச் சமூகப் பிரிவினர் போன்றோர் மீது இதன் விளைவான பாதிப்புக்கள் மிகக் கொடியன. 2006ம் ஆண்டு அமெரிக்க இயற்கை அனர்த்தங்களின் போது அமெரிக்க அரசு காட்டிய மனித உணர்வற்ற அசிரத்தை இதற்கான நல்ல உதாரணமெனலாம்.

மூன்றாமுலக நாடுகளைப் பொறுத்தவரை நவதாராள வேலைத் திட்டத்தின் விளைவுகள் மேலும் மோசமானவை. சமூக நலச் சேவைகளை வழங்குகிற வகிபாகத்தை அரசிடமிருந்து கடத்திச் செல்கிற என்.ஜி.ஓக்கள் அரசியல் சாராத எதிர்ப்புக்களையும் மனிதாபிமானக் கெஞ்சுதல்களையும் பரிந்துரைப்பதனூடு வெகுசன அரசியலுக்கும் எதிர்ப்பு அரசியலுக்கும் குழிபறிக்கின்றனர். இதேவேளை நவகொலனி நாட்டின் அரசு ஆளும்வர்க்க நலன்களைப் பாதுகாக்கின்றதான தனது முக்கிய வகிபாகத்தின் மீது தனது கவனத்தைக் குவிக்கிறது. நவகொலனிய யுகத்தில் இந்த வர்க்க நலன்கள் ஆளும் நிலவுடைமை-முதலாளிய வர்க்கங்களதும் அவற்றினும் முக்கிய வர்க்கங்களதும் அவற்றினும் முக்கியமாக அவர்களது ஏகாதிபத்திய எசமானர்களதும் நலன்களுமாகும்.

மூன்றாமுலக நாடுகளின் தேசிய பொருளாதாரத்தின் தவிர்க்கவியலாத பலவீனப்படலின் விளைவு ஏதெனில் அவற்றின் அரசுகள் முழுமையாக ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்படிவானவையாவதுடன் தமது இருப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஏகாதிபத்தியத்தின் ஆணையை ஏற்று ஏகாதிபத்தியத்திற்கெதிரான எந்தச் சவாலினின்றும் அதைக் காக்கச் செயற்படுகின்றன. அதற்குப் பிரதியாக நிலையான அரசாங்கத்தை உறுதிப்படுத்துகிற பேரிலும் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கிற பேரிலும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுகிற பேரிலும் அரசின் அடக்குமுறை வகிபாகத்தை வலுப்படுத்துகின்றது.

மூன்றாமுலக நவகொலனிகளில அரசின் வகிபாகம் உண்மையில் கொலனிய அரசினது போன்றதே. வேறுபாடு ஏதெனில் பொலிசையும் ராணுவத்தையும் தனது நேரடி ஆதிக்கத்தின் கீழ்க் கொண்ட ஒரு கொலனிய நிருவாகம் இல்லையாயினும் இ

**தேசபக்தன்**
**(New Democracy 26 டிசெம்பர் 2007 கட்டுரையின் தமிழாக்கம்)**

வாறு அரசாங்கத்துடன் அதிருப்தி கொண்ட ஒரு சனத்திரளின் சீற்றத்தை ஏகாதிபத்தியம் தவிர்த்துக் கொள்கிறது. அதாவது ஒரு வலிய ஏகாதிபத்திய விரோத இயக்கம் தோன்றுகிற வரை, ஒரு மூன்றாமுலக நாட்டின் உடனடியான முரண்பாடாக இருப்பது அரசிற்கும் அரசாங்கத்தின் விமர்சகர்கட்குமிடையிலான தாகும். ஏகாதிபத்தியத்தின் தேவைகளை ஒரு மூன்றாமுலக அரசு நிறைவேற்றத் தவறுகிற போதே ஏகாதிபத்தியக் குறுக்கீடு நிகழ்கிறது. அவ்வாறான தவறுதல் நவகொலனிய அரசின் பலவீனத்தின் விளைவானது என்றால் ஏகாதிபத்தியம் அந்த அரசின் சார்பாகக் குறுக்கிட்டுத் தேவையான நேரடியான அல்லது மறைமுகமான உதவியை வழங்குகிறது. ஏற்றின அரசாங்கம் கவிழக் கூடுமானால் இன்று பாக்கிஸ்தானில் நிகழ்வது போல அடுத்து வருகிற ஆட்சியும் தனக்கு முந்தியது போலவே தமக்கு வளைந்து கொடுக்கக் கூடியதாக அமையுமாறு உறுதிப்படுத்த ஏகாதிபத்தியம் செயற்படுகிறது.

புதிதாக உருவான ஒரு அரசாங்கம் ஏகாதிபத்தியத்திற்கு மறுப்பாகச் செயற்படுமாயின் ஏகாதிபத்தியம் தருணம் பார்த்துப் பலவேறு வகைகளிற் குறுக்கிடும். பெரும்பாலும் அந்த அரசாங்கத்தை ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு உடன்பாடாக நடந்து கொள்ளுமாறான நெருக்குவாரங்கள் வழங்கப்படுகின்றன. இது தென் அமெரிக்காவில் அண்மையில் ஆட்சிக்கு வந்த மத்திய இடது அரசாங்கங்கள் பலவற்றுக்கு நடந்தது. ஹெயிற்றியில் தெரிவு செய்யப்பட்ட ஷோன்-பேட்ரான் அரிஸ்தியின் விடயத்தில் அவர் பதவி ஏற்கு முன்னமே சில முன் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. மாறாக ஒரு அரசாங்கம் நடந்து கொள்ளுமாயின் 'ஜனநாயக' முறையில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கை அல்லது தேவையானால் சிலியில் ஆயுதப்படைகளிடையே இருந்த பிற்போக்கு வாதிகளைக் கொண்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டவாறோ வெனசுவேலாவில் தோல்வியடைந்தவாறோ ராணுவக் குறுக்கீடு மேற்கொள்ளப்படும். நேரடியான ஏகாதிபத்தியக் குறுக்கீடு இறுதி முயற்சியாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவது அமெரிக்காவுக்கெதிரான மிரட்டலை இல்லாதொழிப்பது என்கிற விதமான பேரில் நடத்தப்படும்.

ஏகாதிபத்தியம் வெகுசனங்களின் முன்னால் தெரிவுகளை விட்டுவைப்பதில்லை. வெகுஜன எதிர்ப்பு அரசியல் எழுச்சியாகி ஆயுதப் போராட்டம் உட்பட நீடித்த போராட்டமாவது தவிர்க்க இயலாதது. இவ்விடத்தத்தான் என்.ஜி.ஓக்கள் ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் பயனுள்ளவர்களாகின்றனர்.

# தேச அரசும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும்

முதலாவதாக, மக்களை எதிர்நோக்குகிற பிரச்சினைகளை அரசியல் நீக்கஞ் செய்வதன் மூலம் வெகுஜன அரசியல் போராட்டங்களைத் துவங்கச் செய்வதில் என்.ஜி.ஓக்களது பங்கு சிறியதல்ல. பாராளுமன்ற அரசியற் கட்சிகளது நம்பகமற்ற நடத்தையை, குறிப்பாகப் பாராளுமன்ற இடதுசாரிகளது நடத்தையை, வாய்ப்பாக்கி எல்லாவகையான அரசியலும் நம்பகமற்றதாக்கப்படுகிறது. மாக்சியச் சிந்தனையாளர் அந்தோனியோ கிராம்ஸ்சி தொடக்கிப் பயன்படுத்திய சிவில் சமூகம் என்ற பொருளில்லாமல் வர்க்க உணர்வற்று அரசியல்சாராத அடங்கிப்போகிற ஒரு சனப்பிரிவைக் குறிக்கிற விதமான சிவில் சமூகமொன்றின் பேரில் அரசியல் சாராத போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விடத்துள்ள நோக்கம் ஏதென்றால் வெகுசனங்களின் பிரச்சினைகளைக் கையாளுகிற போது எவ்விதமான அரசியல் வேலையையும் தவிர்ப்பதாகும்.

தொழிற்சங்கவாதிகள், அரசியலில் முன்செல்ல இயலாது விரக்தியடைந்த இடதுசாரித்தலைவர்கள் மேட்டுக்குடிப் பெண்ணியவாதிகள் ஊசலாடும் புத்திஜீவிகள் உட்பட வெகுசனத்தலைவர்களாகக் கூடியவர்களை இலக்கு வைக்கிற ஏராளமான என்.ஜி.ஓக்கள் உள்ளன. ஏகாதிபத்திய நாடுகள் வழங்கிய அல்லது ஏகாதிபத்திய நாடுகளின் ஆசிகளுடன் வழங்கப்பெற்ற நிதியைப் பயன்படுத்தி இலங்கையில் இயங்குகிற என்.ஜி.ஓக்கள் பல 1977ல் இடதுசாரி இயக்கம் சந்தித்த பின்னடைவுக்குப் பின்பாக 1983க்குப் பின்பான அரசியல் அடக்குமுறைச் சூழலையும் சாதகமாக்கி பாட்டாளிவர்க்க சக்திகளாகும் வாய்ப்புடைய மக்கள் பிரிவினரிடையே உள்நுழைந்துள்ளனர். மனிதாபிமான உதவி, சமூக நலன், பெண்களது சிறார்களதும் உரிமைகள் என்கிற விதமான பேர்களில் அவர்களது நடவடிக்கைகள் அடுத்தடுத்து வந்த பிற்போக்கு அரசாங்கங்களின் கீழ் தடையின்றி மேற்கொள்ளப்பட்டன. கிறிஸ்தவத்துக்கு மதம் மாற்றுகிற சில என்.ஜி.ஓக்களின் நடவடிக்கைகள் பொதுத் திரளங்களின் எதிர்ப்பைச் சந்தித்த போதும் சர்வதேச என்.ஜி.ஓக்கள் வழியாகத் தேவையான அளவில் கிடைக்கக் கூடிய நிதியைக் கொண்டு அந்த என்.ஜி.ஓக்கள் தாம் விரும்பியபடி நடக்கின்றன. முன்னாள் முற்போக்குவாதிகளும் முன்னாட் போராளிப் புத்திஜீவிகளும் படைப்பாளிகளும் கலைஞர்களும் தமது அறிவார்ந்த தேடல் கட்கும் கலை இலக்கிய முயற்சிகட்கும் என்.ஜி.ஓ உதவி மட்டுமே வழி என்று சொல்லுமளவுக்கு என்.ஜி.ஓக்களுக்கு விலைப்பட்டுப் போய்விட்டனர்.

**தொழிலாளி வர்க்க நோக்கையும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் கொண்டிராத எந்த விடுதலைப் போராட்டத்தையும் ஏகாதிபத்தியம் தனக்குத் தேவையான விதத்தில் பயன்படுத்தும். அத் தேவை முடிந்ததும் அதனைத் தூக்கியெறிந்து விடும்.**

**உலகமயமாதலின் யுகத்தில் விடுதலைப் போராட்டங்கள்**

வர்க்கம் பால் தேசியம் என்கிற அடிப்படைகளிலான ஒடுக்குமுறைகள் இன்னமும் சமூக ஒடுக்குமுறையின் முக்கிய வடிவங்களாக உள்ளன. விடுதலைப் போராட்டங்கட்கான எதிர்ப்பு பலவகையான வடிவங்களை எடுக்கிறது. வெகுஜனப் போராட்டங்களை முறியடிக்க ஜனநாயக அரசியல் முறைகளால் இயலாது போகிறபோது அரச வன்முறையில் இறங்குகிறது. வெகுசன எதிர்ப்பும் ஆர்ப்பாட்டமும் வெகுஜன எழுச்சிகளாகவும் அரசியல் அதிகாரத்திற்கான வெகுஜனப் போராட்டங்களாகவும் மாறுவதைத் தவிர்க்க அரசு முயல்கிறது. வெகுஜனப் போராட்டங்களைக் கையாளும் போது பொதுப்பட, அரசே முதலில் வன்முறையில் இறங்குகிறது அல்லது வன்முறையைத் தூண்டி விடுகிறது. எந்தப் போராட்டத்திலும் வன்முறையின் தவிர்க்க இயலாமை ஒடுக்கப்பட்ட வர்க்கங்களது உள்ளார்ந்த வன்முறையான இயல்பாலன்றி ஒடுக்குமுறையாளரதும் அரச இயந்திரத்தினதும் உள்ளார்ந்த வன்முறையான இயல்பினாலேயே உண்டாகிறது.

தொடர்ச்சி..... 9ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



8ம் பக்கம் தொடர்ச்சி.....

# உலகமயமாதலின் கீழ் விடுதலைப் போராட்டங்கள்

அரசு அரசியற் தன்மையுடையது என்பதால், "ஜனநாயக அரசியற் செயல்முறை" மீது பொதுசன நம்பிக்கைக்குக் குழிபறிக்காமல் எந்த அரசியற் செயற்பாட்டையும் தடைசெய்ய இயலாது. எனவே தான் அடையாளப்படுத்துகிற வர்க்க நலன்கட்கு மிரட்டலாக வரும் என எதிர்பார்க்கிற அரசியற் கட்சிகளையோ வெகுஜன அமைப்புக்களையோ வெகுஜனப் போராட்டங்களையோ தடைசெய்கிற போது அது பயங்கரவாதத்துடன் போரிடல் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல், தேசத்தைக் காத்தல் போன்ற சாட்டுக்களைப் பயன்படுத்துகிறது.

தொழிலாளி வர்க்க நோக்கையும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் தனது முக்கிய கூறுகளாகக் கொண்டிராத ஒடுக்குமுறைக்கு எதிரான எவ்வகையான போராட்டமும் ஏகாதிபத்தியத்தால் தன் வசதிக்கேற்பப் பாவிக்கப்பட்டுத் தேவைமுடிந்தவுடன் தூக்கி யெறியப்படலாம். தங்கள் தரப்பில் ஏகாதிபத்தியம் இருப்பது நன்மையானது என்ற மாயைக்கு உட்பட்ட பல தேசிய விடுதலை இயக்கங்கள் அதற்கான பெரும் விலையைக் கொடுத்துள்ளன. எனினும் மூன்றாமுலகின் தேசியவாத இன அடையாள அடிப்படையிலான இயக்கங்கள் பற்றிய ஏகாதிபத்தியப் பார்வை சந்தர்ப்பவாத இயல்புடையது.

தேசிய இனங்கட்கிடையிலும் இனம், மதம், பிரதேசம் என்பன சார்ந்த சமூகப் பிரிவுகட்கிடையிலுமான உள முரண்பாடுகள் ஏகாதிபத்திய நலன்கட்கு உதவுமானால் அவை அரசைக் கவிழ்க்குமளவிற்குச் செல்லும் உள்நாட்டுப் போராக வளரக் கூடிய பெரும் மோதல்களாக மாற்றப்படுகின்றன. மறுபுறம் இஸ்ரேலும் துருக்கியும் போன்ற ஒடுக்குமுறை அரசுகட்கு ஆதரவாகவும் மறுத்து நிற்கும் தேசிய இனத்திற்கு எதிராகவும் ஏகாதிபத்தியம் நிறகவுஞ் செயகிறது.

எதியோப்பியாவிற் போன்று நினைத்தபோது அதனாற் கட்சி மாறவும் முடியும். எதியோப்பிய சர்வாதிகாரி 'மாமன்னர்' ஹெய்லே செலாஸி 1976ல் தூக்கி எறியப்படுகிற வரை எரித்திரியரும் பிறதேசிய இனங்களும் ஒடுக்கப்படுவதை ஆதரித்த அமெரிக்கா அதன் பின்பு ஆட்சிக்கு வந்த மிரியம் மெங்கிஸ்ற்றுவின் சோவியத் சார்பு ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகப் பிரிவினைக்கான போராட்டங்களை ஆதரித்தது. 1991ல் மெங்கிஸ்ற்று ஆட்சி கவிழ்ந்த பின்பு புதிய ஆட்சியை அமெரிக்கா ஆதரித்த போதும் 1993ல் வெற்றிகரமான ஆயுதப் போர் மூலம் எரித்திரியா எதியோப்பியாவினின்று பிரிந்தது. அன்று தொட்டு எரித்திரியாவுடன் பகைமை பாராட்டுவதில் அமெரிக்காவும் எதியோப்பியாவும் இணைந்துள்ளன. எதியோப்பியாவின் சிறுபான்மைத் தேசிய இனங்களை எதியோப்பிய அரசு ஒடுக்குவதை அமெரிக்கா ஆதரிக்கிறது. எதியோப்பியாவின் அண்டை நாடான சோமாலியாவில அமெரிக்காவின் சார்பாக ஒரு போரை எதியோப்பியா நடத்தி வருகிறது. இதே விதமான கோலங்கள் முன்னைய யூகோஸ்லாவியா தொடர்பாகவும் அண்மையில் ஈராக் தொடர்பாகவும் காணப்பட்டுள்ளன.

பிரித்தானியக் கொலனித்துவத்தின் முன்னைய பிரித்தாளுந் தந்திரம், மூன்றாமுலக நாடுகளை ஒன்றுக்கொன்று முரண்படச் செய்து, அவற்றுக்குக் குழிபறித்து அவற்றை உறுதி குலைத்துக் கட்டுப்படுத்துகிற நோக்கில் இன்று அமெரிக்காவால் செம்மைப்

**எந்த தேசிய இனத்தின் பெயரால் பேரினவாத ஒடுக்குமுறை ஏவப்படுகிறதோ அந்த இனத்தின் மத்தியில் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை நட்புடன் விடுதலைப் போராட்டம் நாட வேண்டும்.**


படுத்தப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறான மூலோபாயங்கள் ஏகாதிபத்தியத்தின் எதிரிகள் தாம் ஒற்றுமைப்பட வேண்டிய தேவையை உணரும் போது பயனளிக்கத் தவறி விடுகின்றன.

ஏகாதிபத்திய எதிர்ப்பான இயக்கங்கட்கும் அரசுகட்கும் குழிபறிப்பதற்கு ஏகாதிபத்தியம் பயன்படுத்தும் பல வகையான 'மென் கருவிகளை' என்.ஜீ.ஓக்கள் அடையாளப்படுத்துகின்றன. வெவ்வேறு சூழ்நிலைகளில் அவை வெவ்வேறு வகிபாகங்களை ஏற்கின்றன. சில என்.ஜீ.ஓக்கள் தாம் அரசியற் தன்மையற்றன என்று கூறிக்கொண்டே முன்னாள் சோவியத் யூனியனின் நாடுகளில் ஏகாதிபத்திய விரோத ஆட்சியாக இருக்கிறவற்றுக்கு மாறாக மேலை நாடுகட்கு ஆதரவான குழுக்கட்கு நிதி உதவியும் தந்திரோபாய உதவியும் வழங்குகின்றன. மூன்றாமுலகில் பல என்.ஜீ.ஓக்கள் வெவ்வேறு சமூக ஒடுக்குமுறைகட்கு இடையே உள்ள உறவுகள் புலப்படாமல் இருக்கும் விதமாகச் சமூகப் பிரச்சினைகளை அரசியல் நீக்கஞ்செய்வதில் முனைப்பாக உள்ளன.

புத்திஜீவிகளிடையிலான என்.ஜீ.ஓச் செயற்பாடுகள் போராட்டங்களைக் கூறுபோட்டுத் தனிமைப்படுத்துகிறதைப் பரிந்துரைக்கிற விதமாகப் பின் நவீனத்துவச் சிந்தனையை ஊக்குவிக்கின்றன. அரசியலில்லாத மேல் தட்டுப் பெண்ணியத்தை ஊக்குவிக்கின்றன. வர்க்கத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் மறுக்கிற தலித்

என்போர் இடதுசாரி இயக்கங்களிலிருந்து விலகியோடி இடதுசாரிப் புத்திஜீவிகளாகப் பாவனை செய்கிற பலர் இப்போது என்.ஜீ.ஓக்களின் வள்ளன்மையால் நன்மை பெறுகிறவர்களாக உள்ளனர். அதே வேளை ஒடுக்கப்பட்டோரின் ஐக்கியப்பாட்டுக்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டங்கட்கும் குழிபறிக்கிற வர்களாகவும் உள்ளனர்.

வெகுசனங்களுடன் தொடர்பு கொண்டிருக்கத் தவறியதாலும் வெகுசன வேலைகளில் ஈடுபடத் தயங்குவதாலும் தமது வெகுசன அரசியற் தளங்கள் கரைந்து போகக் காண்கிற திக்கற்ற இடதுசாரிகட்குத் தூண்டில் போட என்.ஜீ.ஓக்கள் தங்களுக்கு எளிதாக எட்டக் கூடிய விதமாகக் கணிசமான நிதி இருப்பதைப் பயன்படுத்



**எந்த நிலையிலும் ஏகாதிபத்தியம் தமது நண்பனல்ல என்பதில் எந்தவொரு தேசிய விடுதலைப் போராட்டமும் தெளிவாக இருக்க வேண்டும்.**

திக்கொள்கின்றனர். முதுபெரும் ட்ரொட்ஸ்கிவாதியும் முன்னாட் போராளியும் இலங்கை வர்த்தக சங்கம் எனும் தொழிற் சங்கத்தின் தலைவருமான ஒருவர் சர்வதேச என்.ஜீ.ஓக்களுடன் நெருக்கமான உறவுகொண்டுள்ளார். அதன் விளைவாக அவர் ஒழுங்கு செய்கிற கூட்டங்களிலோ வெகுசன ஆர்ப்பாட்டங்களிலோ பங்குபற்றுவோர் அரசியல் பேசக்கூடாது என்று அவர் முன்நிபந்தனை விதிக்கிறார். கொழும்பில அடுத்தடுத்து நிகழ்ந்துவந்த ஆட்கடத்தல்களை எடுத்து இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கட்கெதிரான பிரசாரங்களில் ஊக்கமுடன் பங்கு பற்றி வந்த இரண்டு போட்டியிடும் ட்ரொட்ஸ்கியப் பிரிவுகளான ஐக்கிய சோஷலிசக் கட்சியும் நவசமசமாஜக் (இடதுசாரி முன்னணி) கட்சியும் இடதுசாரி அரசியற் செயற்பாட்டாளர்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்ட பிரச்சினையை அரசியற் பிரச்சினையாக இல்லாமல் மனிதாபிமானப் பிரச்சினையாகவே கையாள முற்படுகின்றன. அவர்களது மனித உரிமைக்கான இயக்கத்திற்கு ஆதரவளிக்கிற என்.ஜீ.ஓ வர்க்கப் போராட்டத்தையும் அரச ஒடுக்குமுறையின் அரசியலையும் அரசின் மனித உரிமை மீறலிலிருந்து பிரிப்பதில் வெற்றி கண்டுள்ளதாலேயே இது இயலுமானது எனத் தெரிய வருகிறது.

மனித உரிமை மீறல்களையும் அடிப்படை உரிமை மீறல்களையும் மனிதாபிமானப் பிரச்சனைகளாக நோக்குவது ஒடுக்குமுறை ஆட்சியாளர்கட்கு வசதியானது. ஏனெனில் உரிமை மீறல்கட்கான அரசியல் அடிப்படை மறைந்தும் எதிர்க்கப்படாமலும் இருக்கையில் நீதிக்கான கோரிக்கை சட்ட நுணுக்கங்கட்குட் சிறைபுண்டோ கருணைக்கான இறைஞ்சுதலாகவோ மாற்றப்படுகிறது. இதன் விளைவாக, மிரட்டல்கட்கும் கொலைகட்கும் ஆட்கடத்தல்கட்கும் பின்னால் இயங்குகிற அரசியல் நலன்களை அறியும் உரிமை மக்களுக்கு மறுக்கப்படுகிறது. அதிலும் முக்கியமாக இவ்வாறான நிகழ்வுகட்கெதிராகவும் அவை மீள நிகழாமலும் மக்கள் அணிதிரளும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

ஆளும் வர்க்க நலன்கட்கும் நடைமுறையிலுள்ள சமூக ஒழுங்கிற்கும் மிரட்டலாகத் தெரிகிற எவருக்கும் அரச சட்டவிரோதமான தண்டனைகளை வழங்கக் காரணம் அதன் ஆற்றாமையே. பிரச்சினைகளை வெளிக்கொண்டுவருவதும் பொதுமக்களுக்கு அறியத்தருவதும் போராட்டத்தின் பரப்பை விரிவுபடுத்துவதுமே விடுதலைப் போராட்டத்தின் சரியான எதிர்வினையாகும்.

# தேசிய அரசும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும்

அமெரிக்காவில அமைந்துள்ள மனித உரிமைக் கண்காணிப்பு (ஹியூமன் றைறஸ் வோச்) எனும் பன்னாட்டு என்.ஜீ.ஓ அரசினதும் பலவேறு ஆயுதக்குழுக்களதும் மனித உரிமை மீறல்கள் பற்றி விலாவாரியாக எழுதியிருந்தது. எனினும் அடிப்படையான பிரச்சினையாகத் தேசிய இன ஒடுக்கலை அடையாளங்காண்பதைத் தவிர்த்திருந்தது. அதனுடைய பரிந்துரைகள் போரிடும் தரப்பினர் கடைப்பிடிக்க வேண்டிய 'நன் நடத்தை' பற்றி அமைந்திருந்தன. ஆனால் தேசிய இனமொன்றின் சுய நிர்ணய உரிமை ஒரு புறமிருக்கப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு தேவை என்பதையே அது புறக்கணித்துள்ளது. இது எந்த வகையிலும் வடக்கு-கிழக்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி என்.ஜீ.ஓக்களின் அணுமுறையினின்று வேறுபட்டதல்ல. அடிப்படைப் பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் தவிர்க்க இயலாதவையான மனிதாபிமானப் பிரச்சினையை மட்டுமே அவர்கள் பார்க்கிறார்கள்.

உலகமயமாதலின் பிரசாரகர்களும் மனிதாபிமான வேலைத்திட்டங்களின் ஆதரவாளர்களும் நன்னோக்கு கொண்ட ஆனால் விடயந் தெரியாத இடது சார்பான கருத்துரையாளர்களும் சமூகங்கள் ஒன்றின் மீது ஒன்று தங்கியிருக்கிற காரணத்தால் நவீன உலகில் தேசியத்துக்கு இடமில்லை என்றும் தேச அரசு என்பது ஏறத்தாழப் பொருத்தமற்ற ஒன்றாகிவிட்டது என வாதிக்கின்றனர். ஒடுக்குமுறையை முறியடிக்க முற்படுகிற விதமான தேசியம் பேரினவாதத்தின் தவிர்க்க இயலாத ஒரு விளைவாகும். அதையும் ஒடுக்குமுறையாளர்களது தேசியத்தையும் ஒரே தராசில இட முடியாது.

சகலவிதமான இன அடையாளங்களும் தேசிய அடையாளங்களும் கற்பனையானவையே என்று வைத்துக் கொண்டாலும் அவை மக்களின் சிந்தனையில் உள்ளன. அவை சமூகங்களின் ஒட்டுமொத்தமான உளநிலை மீது ஆதிக்கஞ் செலுத்துகின்றன. அவை மக்களைப் பிளவுபடுத்துகின்றன என்பதும் அவை மோதலுக்கும் ஒடுக்குமுறைக்கும் வழி செய்கின்றன என்பதும் உண்மை. மனித இனத்தின் பிரச்சினைகளைத் தர்க்க ரீதியாகவும் உலகளாவிய முறையிலும் அணுகுவதற்கான வாதங்கள் வலியன. எனினும் தேசியவாதத்தையும் இன மையமான உணர்வுகளையும் நினைத்த மாத்திரத்தில் இல்லாமற் செய்துவிட இயலாது. மனித அடையாளத்தின் மதிப்புடன் நடத்தப்பட வேண்டிய பகுதிகளாக இனத்துவத்தையும் தேசியத்தையும் ஏற்றுப் பல்வகையான அடையாளங்களைச் சமமாக நடத்துவதன் மூலமே அவற்றைச் சிறப்பாகக் கையாள முடியும்.

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களைக் கைவிடும்படி கேட்பதன் விளைவாக ஒடுக்குமுறை மேலும் மோசமாவதுடன் ஏகாதிபத்தியத்தின் கைகளே வலுப்படும். செய்ய வேண்டியது ஏதெனில் மூன்றாமுலகின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். அதில் இனம், சாதி, பால் உட்பட்ட பலவேறு வகையான ஒடுக்குமுறைகட்கும் எதிரான நீதியான போராட்டங்கள் அனைத்தும் உட்படுத்தப்பட வேண்டும். தென் அமெரிக்காவில் இடதுசாரிகளது எழுச்சியில் பழங்குடிகளது பங்கு பெரியது. அது வெற்றி பெறுவதற்கு ஐந்து நூற்றாண்டுகளாகக் கடுமையாகச் சுரண்டப்பட்டு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு விளிம்பு நிலையில் வைக்கப்பட்டுள்ள மக்கள் மேலும் பெரியதொரு பங்கு வகிக்க வேண்டியிருக்கும்.

எந்த நிலையிலும் ஏகாதிபத்தியம் தமது நண்பனல்ல என்கிற தமது பார்வையில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் தெளிவாக இருக்க வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அது ஒடுக்குமுறை அரசின் கூட்டாளியாகவே இருந்துள்ளது. எப்போதாயினும் ஏகாதிபத்தியம் ஒடுக்கப்பட்ட தேசிய இனமொன்றின் தரப்பில நின்றிருந்தால் அது குறுகியகால நோக்கில் மட்டுமே தான். அரச அதிகாரம் ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்களிடம் கைமாறியதும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்திற்கும் அதன் போராட்டத்துக்கும் துரோகமிழைக்கப்படும். எனவே எந்தத் தேசிய இனத்தின் பேரில் பேரினவாத அரசு சிறுபான்மைத் தேசிய இனங்களை ஒடுக்குகிறதோ அந்தத் தேசிய இனத்திலுள்ள ஏகாதிபத்திய விரோதச் சக்திகளை ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம் நாடி நட்புறவை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தேசிய முதலாளியத்தின் முற்போக்கான இயல்பு பற்றிய கொலனியயுகத்தின் சூத்திரங்களைக் கிளிப்பிள்ளை போல ஒப்புவிப்பது பயனற்றது. மூன்றாமுலகின் தேசிய முதலாளியத்தின் வகிபாகம் ஏகாதிபத்தியத்துடனான அதனது உறவுக்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க அது எவ்வளவு ஆயத்தமாயுளது என்பதற்கும் சார்பாகத் தொடர்ச்சியான மதிப்பீடு வேண்டும். இந்த அணுகுமுறை தேசிய விடுதலை இயக்கங்களின் தலைமைகட்கும் பொருந்தும். எனவே ஏகாதிபத்தியத்துடனான சமரசங்கள் கடுமையாகத் தவிர்க்க உகந்தவை.

முற்றும்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 9

## முஸ்லீம் தனித்துவத்தின் அரசியல்

அராபிய வணிகர்கள் இஸ்லாம் மதத்தின் தோற்றத்திற்கு முன்பிருந்தே வந்து போயுள்ளனர். இஸ்லாம் அராபிய சமூகங்களின் எழுச்சிக்கு ஒரு முக்கியமான பங்களித்தது என்ற காரணத்தால் அராபிய வணிகர்கள் பெருமளவில் வரத் தொடங்கிய காலங்களில் இஸ்லாம் அராபியர்களில் ஏகப் பெரும்பாலோனரது மதமாகியதுடன் அரபு எல்லைகட்கும் அப்பாலும் பரவத் தொடங்கி விட்டது. ஐரோப்பியக் கொலனிய வாதிகள் ஆசிய நாடுகளில் தமது வணிக ஆதிக்கத்தை நிலைநிறுத்த முன்பு அரபு வணிகர்களே தென்னாசியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் கடல் வழி வணிகத்தில் ஆதிக்கஞ் செலுத்தினர். போர்த்துக்கேயக் கொலனியவாதம் இலங்கையில் காலூன்ற முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருந்தது இந்து சமுத்திரக் கடல்வழி வணிகத்தில் அராபியரை மேவி ஓரங்கட்டுகிற நோக்கமாகும். இலங்கையில் வந்திறங்கிய போர்த்துக்கேயர் தம்மை நிலைநிறு த்த முறபட்டபோது இலங்கையில் வந்திருந்த அராபிய முஸ்லீம் வணிகர்கள் அதை விரும்பாததில் வியப்பில்லை.

சில சிங்களப் பேரினவாத வரலாற்றாசிரியர்களும் பிரசாரகர்களும் காட்டமுனைவது போல சிங்கள, போர்த்துக்கேயப் பகைமைக்கு முஸ்லீம்கள் காரணமாயிருந்தனர் என்பது தவறானது. சிங்கள மன்னர்கட்கு அராபிய, முஸ்லீம் வணிகர்கட்கும் இருந்த உறவு ஆதிக்க நோக்கங்கட்கு அப்பால்பட்ட ஒரு வணிக உறவாகவே இருந்தது. போர்த்துக்கேயருக்கும் சிங்கள அரசர் கட்கும் முரண்பாடுகள் ஏற்பட்ட போது முஸ்லீம்கள் சிங்கள அரசர் கட்கு ஆதரவாக இருந்தனர். இது சிங்கள- முஸ்லீம் சமூகங்களிடையே பகைமையற்ற உறவுக்கு ஆதாரமாய் இருந்தது. சிங்கள முதலாளி வர்க்கத்தின் தோற்றமும் எழுச்சியும் அதன் பின்பு முஸ்லீம் வணிகர்களுடன் ஏற்பட்ட போட்டியுமே சிங்கள- முஸ்லீம் பகைமையாக உருமாற்றம் பெற்றது. சிங்கள பௌத்தச் சிந்தனை என்பது குறிப்பிட்ட வர்க்கப் பிரிவினரது நலனை முன்னிறுத்தி உருவானது போல அதன் இலக்கும் அந்த வர்க்கப் பிரிவினரது போட்டியாக இருந்த கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் இலக்கு வைத்தன.

முஸ்லீம்களின் மதமும் மொழியும் வேறுபட்டு இருந்ததால் முஸ்லீம்களை அந்நியராகக் காட்டுவது எளிதாக இயலுமாயிருந்தது. முஸ்லீம்கள் எல்லாரும் ஒரு பொதுவான முன்னோரைக் கொண்டவர்கள் என்று கூறுவது பொருந்தாது. அவர்களுட் கணிசமானவர்களது முன்னோர் அராபியரும் அராபிய- தமிழ், அராபிய- சிங்களச் கலப்பினத்தவராயிருந்திருக்க நியாயமுண்டு. அதேவேளை தமிழகத்திலும் கேரளத்திலும் இருந்து வந்து குடியேறியவர்களின் எண்ணிக்கையும் பெரிது. பின்னைக் காலங்களில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் இந்திய முஸ்லீம்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டனர். அவர்களிடையிலும் பலவாறான பிரதேச அடையாளங்கள் இன்று வரை இருந்து வருகின்றன. மலாயர் என அழைக்கப்படுவோரின் பெரும் பகுதியினர் டச்சுக் காரரின் ஆட்சியின் போது வந்து குடியோராவர். அவர்கள் தங்களை ஒரு தனித்துவமான சமூகமாகவே கருதி வந்தனர். கொலனிய ஆட்சிக்காலக் குடிசனப் பதிவுகளில் இலங்கைச் சோனகர், இந்தியச் சோனகர், மலாயர் என்று முஸ்லீம்கள் வெவ்வேறாக அடையாளங் காணப்பட்டனர். இம் மூன்று பிரிவினரிடையிலும் அவர்களது சமூக இருப்பின் தன்மைகளின் விளைவாக அகமண முறையே காணப்பட்டது. இலங்கைச் சோனகர் எனப்பட்ட இலங்கை முஸ்லீம்கள் நாடெங்கிலும் பரவி வாழ்ந்தாலும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக இன்றைய அம்பாறை மாவட்டத்திலும் அடுத்து மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களினதும் பல கிராமங்களிலும் புத்தளம், பேருவளை, மன்னார்ப் பகுதிகளிலும் செறிவாக வாழ்ந்து வந்துள்ளனர். இப் பகுதிகளில் அவர்களது தனித்துவமான சமூக அடையாளம் சனத்தொகையின் விளைவாக மிகவும் வலுவாக வெளிப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்திற் போன்று தமிழரிடையே சிறு தொகையினராக வாழ்ந்த முஸ்லீம்கள் தமது மத அடையாளத்தின் வழியில் தமது தனித்துவத்தைப் பேணிய போதும் தமிழர் களுடனான நெருக்கமான சமூக உறவின் விளைவாக அவர்கள் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பகுதியினர் போன்றே வாழ்ந்தனர். தென்னிலங்கையில் அவர்கள் சிங்கள மக்களிடையே பரவி வாழ்ந்தாலும் அவர்களது வீட்டு மொழி தமிழாகவே இருந்து வந்தது. மொழி வேறுபாட்டையும் மீறி அவர்கள் சிங்கள மக்களுடன் நட்புறவு பேணி வந்தனர்.

இந்தியச் சோனகர் எனப்பட்ட இந்திய முஸ்லீம் சமூகத்தினர் தென் இந்தியாவிலிருந்து பிற் காலத்தில் வந்து குடியேறியவர் கள். இவர்களிடையே சிறு வணிகர்களது தொகை அதிகமாயிருந்தது. இவர்களது வீட்டு மொழி தமிழாக இருந்தது. இவர்கள் பெரும்பாலும் தென்னிலங்கையிலேயே வாழ்ந்து வந்தனர்.

மலாய்ச் சமூகத்தினர் வீட்டிலும் வெளியிற் தமக்கிடையேயும் மலாய் மொழி பேசுவோராக இருந்தனர். ஆயினும் தமிழிலும் சிங்களத்திலும் தமது சமூக உறவுகளைப் பேணி வந்தனர்.

இலங்கை இந்திய முஸ்லீம்கள் பிரதேச வேறுபாடின்றித் தமிழையே வீட்டுமொழியாகக் கொண்டிருந்ததையும் அவர்களிற் கணிசமானவர்களது முன்னோர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதையும் பயன்படுத்திப் பொன்னம் பலம் ராமநாதன் அவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் தமிழர்கள் என்று கொச்சைப்படுத்தி அவர் களது தனித்துவத்தை மறுத் தார். இதன் மூலம் அவர்கள் முஸ்லீம் களுக்கான தனியான பிரதி நிதித்துவத்தை மறுத்த நோக்கம் முக்கியமாக அவரது சுயநல மென்றே கூற வேண்டும். தமிழ்ப் பேசுகிற அத்தனை பேரையும் தமிழர் எனக் கூறி அந்த எண்ணிக்கை வலிமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய ராமநாதன் தமிழ் மக்களில் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த வசதிபடைத்த உயர் சாதியினரது நலன்களை வலியுறுத்திய ஒரு அரசியல் வாதி. பௌத் தர்களது மத உரிமைகள் தொடர்பாக அவர் குரல் கொடுத் துள்ளார். அது மெச்சத்தக்கதே. ஆனாலும் அதற்கும் மேலாகச் சிங்களப் பேரினவாதிகளுக்குச் சாதகமாக முஸ்லீம் கட்கு எதிராகக் கொலனிய எசமானர்களிடம் மன்றாடியிருக்கிறார் என்பது அவரது நோக்கங்கள் பற்றிய பல ஐயங்களை எழுப்புகின்றன.

தென்னிலங்கை முஸ்லீம்களிடையேயிருந்து தான் பெருந்தொகையான செல்வந்த முஸ்லீம்களும் வசதியான குடும்பங்களைச் சேர்ந்த படித்த முஸ்லீ ம்களும் தோன்றினர். இவர்கள் நடுவிலிருந்தே அன் றைய முஸ்லீம்களின் அரசியல் தலைவர்கள் தோன்றினர். முக்கியமாகக் கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிய முஸ்லீம் தலைவர்களின் பின் னணி நகர் சார்ந்ததாக இருந்தது. எனவே இவர்களது அக்கறைகள் பெரும்பாலும் மேல்தட்டு முஸ்லீம்களின் நலன்களையும் அடுத்தபடியாக நகர் சார்ந்த முஸ்லீம் வணிக சமூகத்தின் நலன்களை யும் பற்றியனவாகவே இருந்தன. பிற் காலத்தில் தொகுதி வாரித் தேர்தல்களும் சர்வசன வாக்குரிமையும் முதலில் அரச சபை பின்பு பாராளுமன்றம் முதலாக உள்ளூராட்சிகளில் சாதாரண மக்களுக்கும் ஒரு குரலைக் கொடுத்த பின்னருங் கூட நாட்டின் அரசியலில் முஸ்லீம் தலைமையின் வலுவான பகுதி தென்னிலங்கை யின் வசதிபடைத்த முஸ்லீம்களின் கைகளிலேயே இருந்து வந்தது.

முஸ்லீம்கள் சுயமாகத் தமக்கென ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுக்கக் கடினமான விதமாக அவர்களது சனத்தொகைப் பரம்பல் அமைந்திருந்தது ஒரு புறம் முஸ்லீம் சமூகத்தின் பலவீனமாயிருந்த போதும் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அவர்களது எண்ணிக்கை கணிசமாக இருந்ததை முஸ்லீம் தலைவர்கள் எனப்பட்டோர் தமக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

சித்திலெப்பை அவர்களின் தீர்க்கமான பார்வை முஸ்லீம்களுடைய சமூக அடையாளத்தை வலுப்படுத்த உதவிய போதும் பரவிக் கிடந்த முஸ்லீம்களின் வாழ்விடங்களும் வேறுபாடும் சனத்தொகைச் செறிவும் அவர்களது சமூகத் தேவைகளை அடையாளங்கண்டு பொதுவான முஸ்லீம் அரசியல் அடையாளத்தை உருவாக்க இயலாது போயிற்று. தமிழரையுஞ் சிங்களவர்களையும் போலன்றி, முஸ்லீம்களிடையே சாதி என்கிற அநீதியான சமூகப் பிரிவினை இருக்கவில்லை. அவர்களை ஒற்றுமைப்படுத்த தடையாக இருந்தது வசதிபடைத்த வர்க்கத்தினரது நலன் பேணும் அரசியல் தலைமைத்துவமே.

முஸ்லீம்களிடையே பிரதேச அடிப்படையிலும் வம்சாவழியின் அடிப்படையிலுமான வேறுபாடுகள் உள்ளன. அவற்றிற் சில காலத்தால் இல்லாது போயுள்ளன. வேறு சில அண்மைக் காலங்களின் அரசியற் பிரச்சனைகளால் மேலுங் கூர்மையடைந்தும் உள்ளன. எவ்வாறாயினும் முஸ்லீம் அரசியல் அடையாளத்தின் தோற்றத்திற்கு அவர்கட்கு எதிரான சிங்களப் பேரினவாதப் பகைமை ஒரு முக்கியமான பங்களித்தது. முஸ்லீம்கட்கும் தமிழருக்குமிடையே இருந்த அடையாள வேறுபாட்டின் முக்கியத்துவத்தைக் குறைவாக மதிப்பிட்டதும் போதாமல் அதை முற்றாகவே மறுத்ததன் மூலம் பொன்னம்பலம் ராமநாதன் அந்த வேறுபாட்டை மேலும் வலுப் படுத்தினார். போதற்குப் பிற்படுத்தப்பட்ட தமிழ்ச் சமூகப் பிரிவினரைப் பற்றித் தாழ்வாகப் பேசி வந்த அதே தோரணையில் முஸ்லீம் கள் பற்றி அவர் கூறிய சொற்களும் முஸ்லீம்- தமிழ்ப் பகைமையை வளர்க்கிறதற்கு இன்று வரை பயன்பட்டு வந்துள்ளன.

1915 சிங்கள- முஸ்லீம் கலவரம் ஒரு முக்கியமான அரசியல் திருப்பு முனையாய் இருந்த போதும் அன்றைய முஸ்லீம் தலைவர்கள் முஸ்லீம்கள் ஒரு தனித்துவமான சமூகத்தினர் என்பதை நிறுவியதற்கும் அப்பால் முஸ்லீம்களின் ஒற்றுமை பற்றி இடையிடையே குரல் எழுப்பியதற்கும் அப்பால் நாடு தழுவிய முறையில் முஸ்லீம்கட்கான ஒரு தேசிய இன அடையாளத்தையும் அது சார்ந்த அரசியற் பார்வை எதையும் விருத்தி செய்யத் தவறியமைக்கு அவர்களது குறுகிய வர்க்க நலன்கள் மட்டுமே காரணமல்ல. தமிழர்கட்கு இருந்தது போல ஒரு தொடர்ச்சி யான பிரதேசம் இல்லாமை போக அவர்களில் ஏகப்பெரும்பாலானோர் நாடு முழுவதும் பரவிப் பல பிரதேசங்களில் ஐந்து பத்துச் சதவீதமளவிற்குள் அவர்களது சனத் தொகை விகிதம் அமைந்திருந்ததும் ஒரு காரணமாகும். முஸ்லீம் களின் கல்வி தமிழ்ச் சிங்களச் சமூகங்களுடன் ஒப்படுகையிற் பின் தங்கியே இருந்ததும் கவனிக்கத்தக்கதாகும்.

முஸ்லீம்கள் ஒரு தேசிய இனமாகத் தம்மை அடையாளங்கண்டு ஒரு தேசிய இனமாக விருத்தியடையத் தடையாக முற்குறிப்பிட்ட விதமான சூழ்நிலைகள் அமைந்திருந்தன. முஸ்லீம் தேசியவாத அரசியல் எழுச்சி கண்ட பின்பும் முஸ்லீம் இன அடையாளத்தின் அரசியலின் தொடக்கக் காலப் பலவீனங்கள் இன்னமும் முஸ்லீம் தேசிய இன நலன்கட்குக் கேடான முறையிற் தொடர்வதற்கான காரணங்களில் முஸ்லீம் இன அரசியலில் தொடர்ந்தும் ஆதிக்கஞ் செலுத்தி வருகிற வர்க்க நலன்கள் முக்கியமானவை.

**வளரும்**

---

### ஜே.வி.பி...... 6ம் பக்கம் தொடர்ச்சி

தன்னைத் தொடர்ந்து வேறுபடுத்தி காட்ட முடியாத கஷ்டத்திற்குள்ளானது. பாராளுமன்றப் பாதையை மையப்படுத்த வேண்டியதாயிற்று. பாரம்பரிய இடதுசாரிகள் சீரழிந்த பாதையிலேயே பயணித்து அவர்கள் கண்ட சீரழிவை விட மோசமாகச் சீரழிந்து நிற்கின்றனர்.

ஆக ஒட்டுமொத்தமாக யுத்தவாதக் கட்சியாகவே அதன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்ததுடன் பாராளுமன்ற அரசியலுக்குள்ளும் புதைந்து கொண்டது. சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி லங்கா சமசமாஜக்கட்சி போன்ற பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளுக்கு மாற்றுக்கட்சி என்று ஜே.வி.பி தம்மைத் தாமே கூறிக்கொண்ட போதும் அவை மூழ்கிப்போன சுழிக்குள் ளேயே தானும் சிக்குண்டு கிடக்கின்றது.

இவ்வாறிருந்தபோதும் தற்போது அதில் ஏற்பட்டிருக்கும் பிளவு ஜே.வி.பி யின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்று அலசுவதில் சிலர் தலையைப் பிய்த்துக் கொள்கின்றனர். அதனுடைய தேசிய மாநாடு மே மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தை மத்தியப்படுத்திய பேரினவாத அரசியல் பாதையிலிருந்தும் யுத்தத்தை முன்னெடுப்பதற்கு வழிசெய்யும் அரசியல் வேலைத்திட்டத்திலிருந்தும் ஜே.வி.பி விலகிக் கொண்டு யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்ப சிந்திக்க தலைப்படாதவிடத்து அதன் கொள்கையில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் அதனால் பிரயோசனமற்றதாகும்.

ஜே.வி.பி இரண்டு பெரிய கட்சிகளுக்கு மாற்று என்று சோஷ லிஸ எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் என்றெல்லாம் நம்பிக் கொண்டு ஜே.வி.பி யில் அணிதிரண்டுள்ள ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் சிந்திப்பதற்கான சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும். அக்கட்சியின் கொள்கைகள், தலைமைத்துவம் போன்றன பற்றிய விமர்சனங்களை முன்வைத்து அரசியல் போராட்டங்களை அவர்கள் தொடங்க வேண்டியவர்களாக இருக்கின்ற னர்.

எந்தவொரு கட்சியும் இரண்டு பெரிய கட்சிகளுக்கு பின்னால் சென்று பாராளுமன்றப் பாதையில் மூழ்கி இலங்கை மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. சரியான அரசியல் இயக்கத்தை முன்னெடுக்கவும் முடியாது. அத்துடன் ஏனைய இடதுசாரி ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து புரிந்துணர்வுடன் செயற்படாது தனியொரு கட்சியாக மாற்று அரசியலை தற்போதைக்கு எந்தவொரு கட்சியும் முன்னெடுக்க முடியாது என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படமுடியாது என்பதையும் யுத்தம் வழிமுறை அல்ல என்பதும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பூகோளமயமாதலுக்கு எதிர்ப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பன தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றை நிராகரிப்பதன் மூலம் சாத்தியமாகப் போவதில்லை.

இந்த வகையில் ஜே.வி.பி யின் அங்கத்தவர்கள் சிந்திப்பதுடன் 1971, 1988- 89 காலகட்ட கிளர்ச்சிகள் அதன்பிறகு ஜே.வி.பி முன்னெடுத்த பாராளுமன்ற யுத்தவாத அரசியலின் தவறுகள் போன்றவற்றை உரியவாறு மதிப்பீடு செய்வது அவசியம்.

இந்த மதிப்பீடுகளுக்கூடாக ஜே.வி.பி புனரமைக்கப்பட்டால் பலமடையலாம். இல்லாவிட்டால் ஜே.வி.பி க்கு மாறாக இன்னொரு பலமான அமைப்பை கட்ட முடியும். இன்னொரு அமைப்பை கட்டும்போது உதிரிகளாக என்.ஜீ.ஓக் காரர்களாக செயற்படும் ஜே.வி.பி யின் முன்னாள் உறுப்பினர்களின் சீரழிவுகளை பாடமாகவும் கொள்ள வேண்டும். வாய்ச் சொல்லில் வீரர்களாக இருக்கும் அந்த முன்னாள் ஜே.வி.பி யினரின் பாதையை நிராகரிப்பதே சரியானதாகும்.

இதைவிடுத்து தற்போதைய நிலைப்பாட்டில் ஜே.வி.பி பிளவு பட்டாலோ, ஒன்றுபட்டு பலமடைந்தாலோ அது இலங்கையின் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாகவே இருக்கும். அதாவது கொள்கையில் மாற்றமில்லாத ஜே.வி.பி பிளவிலோ ஒன்றுபடுதலிலோ இந்நாட்டு மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கின் தேர்தலில் வெற்றிலையும் யானையும்?

மே மாதம் பத்தாம் திகதி கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற இருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் பாரம் பரிய பிரதேசமான கிழக்கை வடக்கிலிருந்து பிரித்து தனிமா காணமாக்கிய பேரினவாதச் சூழ்ச்சியின் ஒரு பகுதியாகவே மேற்படி தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் முன்னைய விடு தலைப் புலிகளின் கிழக்குப் பிரிவை தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் இயக்கமாக மாற்றித் தம்முடன் வைத்துக் கொண்டே மகி ந்த அரசாங்கம் தேர்தல் நாடகத்தில் இறங்கிக் கொண்டது. ஏற் கனவே உள்ளுராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றதான களிப்பு டன் இப்போது மாகாண சபைத் தேர்தலை நடாத்துகிறது. ஆனால் யுத்தமாக்கப்பட்ட இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன் வைக்கப்படவும் இல்லை. யுத்தமும் முடிவுக்கு கொண்டுவரப்பட வும் இல்லை.

மேற்படி கிழக்கின் தேர்தலை ஜனநாயக மீட்பு எனவும் பயங்கர வாத ஒழிப்பு என்றும் கதை அளக்கப்படுகிறது. சிங்கள மக்களின் கவனத்தைத் திசை திருப்பி வைத்துக் கொள்ளவும் யுத்தத்தின் தேவையை வலியுறுத்தவும் கிழக்கின் தேர்தல் நன்கு காட்சிப் படுத்தப்படுகிறது. யுத்தத்தை ஆதரித்துக் கொண்டே தெற்கின் பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கத்தைக் பெயரளவில் குற்றம் சுமத்திக் கொள்ள முனைந்த ஜே.வி.பி மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் திரை மறைவச் செயல்களால் பிளவுபடுத்தப்பட் டுள்ளது. பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேரினவாதப் பிரச்சாரப் பீரங்கியான விமல் வீரவன்சா அரசாங்க சார்பு நிலைப் பாட்டிற்கு வந்திருப்பது ஜனாதிபதியின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு கிடைத்துள்ள ஒரு வகை வெற்றி எனலாம். ஆனால் அதன் மூலம் தெற்கில் வளர்ந்து வரும் மக்களது அதிருப்தி எதிர்ப்புணர்வக ளைத் தணிக்க முடியும் என்று கூறிவிட முடியாது.

தெற்கில் இவ்வாறு இடம்பெற்று வரும் சூழலிலேயே கிழக்கில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று விடத் துடிக்கிறது. அங்கு ஏற்கனவே இடம் பெற்ற உள்ளுராட்சித் தேர் தலில் ஒரு உயிர் கூடப் பலி கொள்ளப்படாது (மறைமுகக் கொலைகள் இடம் பெறவே செய்தன) மிகக் குறைந்த அசம்பா விதங்களுடன் வெற்றி பெற்றதாக மகிந்த சிந்தனை பெருமை அடித்துக் கொண்டது. ஆனால் இம் முறை மாகாண சபைத் தேர் தலில் கடும் போட்டி ஏற்பட்டிருக்கும் சூழலில் கொலைகளும் வன் முறைகளும் ஆங்காங்கே நிகழ ஆரம்பித்துள்ளன.

இக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்க- எதிர்க்கட்சி களாக இருப்பவை இரண்டு பிரதான பேரினவாதக் கட்சிகள் என் பது குறிப்பானதாகும். இவ்விரண்டு கட்சிகளும் கடந்த நூற்றாண் டின் நாற்பதுகள் தொடங்கி கிழக்கை திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்கள் மூலம் தமிழர் பிரதேசங்களைக் கபளீகரம் செய்யத் தலைமை தாங்கி வந்தன என்பது இரகசியமல்ல. அம்பாறையை முழுச் சிங்கள ஆதிக்க மாவட்டமாக மாற்றியதுடன் திருகோண மலையையும் படிப்படியாகச் சிங்கள மயப்படுத்தி வந்ததும் இவ் இர ண்டு கட்சிகளின் ஆட்சிகளேயாகும். இப் பேரினவாத நடவடிக் கையில் தமிழர்கள் மட்டுமன்றி முஸ்லீம் மக்களும் கடுமையான பாதிப்புக்களைப் பெற்று வந்தனர்.

அத்தகைய பேரினவாதக் கட்சிகள் இரண்டினதும் தலைமைகளை அடிமை விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டே கிழக்கின் தமிழ் முஸ்லீம் கட்சிகள் எனப் பட்டவை வெற்றலை யானை ஆகிய சின்னங்களில் போட்டியிடுகின்றன. தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் இயக்கம் எனப்படுவது தனது தேர்தல் சின்னத் தைக் கை விட்டு பேரினவாதச் சின்னமாக வெற்றிலை யில் பிள்ளை யான் தலைமையில் போட்டியிடுகின்றனர். கிழக்கின் தமிழ் மக்கள் அபிவிருத்திக்காகத் தமக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடானது முற்றிலும் பேரினவாத நிகழ்ச்சி நிர லுக்கு உட்பட்டதாகும். இதனை மகிந்த சிந்தனை முன்னெடுத் தாலும் அல்லது ரணில் சிந்தனை முன்னெடுப்பதாலும் அடிப் படை யில் முதலாளித்துவ ஆளும் வர்க்கப் பேரினவாதத்தின் செயற் பாடேயாகும்.

கிழக்கு மாகாணம் தமிழ் சிங்கள முஸ்லீம் மோதல்களுக்கு பலி யாகி நிற்கும் மாகாணமாகும். இது இன மத மொழித் தேசிய வாத த்தின் ஊடாக மக்கள் பிளவுபடுத்தப்பட்டு மோத வைக்கப்பட்ட தன் விளைவாகும். ஒவ்வொரு கட்சிகளும் தத்தமது இன மத மக்களு க்காக நிற்பதாகவே உரத்துக் கூறி வருகின்றன. ஆனால் இவர் கள் எவருமே ஏகப் பெரும்பான்மையான சாதாரண உழைக்கும் மக்களான தம் இனத்தவர்களின் நலன்கள் தேவைகளில் அக் கறையற்றவர்கள். அதேவேளை தத்தமது சொத்து சுகம் அதி காரம் ஆதிக்கம் போன்ற உயர் வர்க்க நலன்கள் மீதே அடிப்படை அக்கறையுடையவர்களாக இருந்து வருகின்றனர். இதன் காரண மாகவே கிழக்கின் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் வர்க்க முதலாளித்துவ பேரினவாதக் கட்சிகள் இரண்டையும் தமிழ் முஸ் லீம் கட்சிகள் பற்றி நிற்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு இத் தேர்தலில் பங்கு கொள்ளாத நிலையில் அவர்களது வாக்கு வங்கியில் இருந்து கணிசமான வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொள்ளக் கூடிய எதிர்பார்ப்பே இருந்து வருகி றது. அதனை நம்பியே முஸ்லீம் காங்கிரஸ் தனது மரம் சின்னத் தைக் கைவிட்டு யானையில் ஏறிக் கொண்டது. இதே வேளை இத் தேர்தலை நிராகரிக்குமாறும் பிரசுரங்கள் வெளி வந்துள் ளன. மீண்டும் மீண்டும் அனர்த்தங்கள் அழிவுகள் அச்சுறுத்தல் கள் அடாவடித் தனங்கள் உயிரிழப்புகள் இடப்பெயர்வுகள் போன்றவற்றால் துவண்டு போயிருந்தும் கிழக்குமாகாண மக் களுக்கு உருவாகி உள்ள தேர்தல் சூறாவளி பெரும்சோத னை யும் வேதனையுமாகும்.

அதேவேளை சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்று அரசாங்கத் தரப்பில் முன்னாள் பிரதி அமைச்சரான எம்.எல்.எம். ஹிஸ்புல்லா போட்டியிடுகின்றார். பிள்ளையானும் ஹிஸ்புல்லாவும் முதலைமைச்சர் பதவிக்கு உள்ளுரப் போட்டி யிடுகின்றனர். அரசாங்கமும் மகிந்த சிந்தனை கொள்கை வகுப்பாளர்களும் மேற்படி தேர்தலில் தமிழ் முஸ்லீம் தலைமை களைத் தமது பகடைக்காய்களாக நகர்த்த பயன்படுத்தி வருகின்றனர்.

அதேவேளை சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைவர் ரவூவ் ஹக்கீமும் தவிசாளர் சேகுதாவூத்தும் செயலாளர் ஹசன் அலி யும் தமது பாரளுமன்றப் பதவிகளைத் துறந்தே மாகாண சபைத் தேர்தலில் பங்கு கொள்கின்றனர். அதுவும் தமது மரம் சின்னத் தைக் கைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் யானையில் போட்டி யிடுகின்றனர். இவ்வாறு நிற்பதன் பின்னணி யாது? ஐக்கிய தேசி யக் கட்சிச் சின்னத்தில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளையும் முஸ்லீம் மக்களின் வாக்குகளையும் சேர்த்துப் பெற்றுக் கொள்ளலாம் என்ற பெரும் நம்பிக்கை கொள்ளப்பட்டி ருக்கிறது. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியும் முஸ்லீம் காங்கிர சும் இணைந்து கொண்டதன் பின்னால் இந்தியாவின் ஆளும் வர்க்கக் கரங்கள் இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இதே கரங்கள் தான் ஏற்கனவே ரவ்வூப் ஹக்கீமை அரசாங்கத்திலிரு ந்து விலகிக் கொள்ளவும் வழி காட்டி நின்றன என்றும் நம்பப்படு கிறது.

எவ்வாறாயினும் கிழக்கிலே முன்னெடுக்கப்படும் மாகாண சபைத் தேர்தலானது தமிழ் முஸ்லீம் மக்களின் இன மொழி மத பிரதேச தனித்துவங்களைப் பேரினவாத சக்திகளிடம் அடகு வைத்த சூழலில் முற்றிலும் அடிபணிந்த நிலையில் முன்னெடுக் கப்படும் தேர்தல் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

அதேவேளை தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங் களைத் திட்டமிட்டுப் பிரிக்கவும் பறிக்கவும் அவர்களிடையே மோதல்களை மேலும் தீவிரப்படுத்திக் கொள்ளவும் பேரினவாத த்திற்கு உதவும் செயலாகவே கிழக்கின் தேர்தல் அமைந்துள் ளது. அடிபட்டு மிதிபட்டு உயிர் இழந்து அல்லல்கள் அவலங்கள் சுமப்பது மக்கள். அவற்றின் ஊடே அரசியல் அதிகார லாபங்கள் அடைவது ஆளும் வர்க்கம். அத்துடன் அங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று அங்கு இல்லை என்னும் மகிந்த சிந்தனை நிலைப் பாட்டிற்கு இத் தேர்தல் பொய்ச் சாட்சியமாகவும் காட்டப்படுகி றது.

**எழுவான்கரை முத்து**

# இந்திய கிரிக்கட் போட்டி ஏலம் பண முதலைகளின் வியாபாரம்

ஒருமுறை மறைந்த கவர்ச்சி நடிகை "சில்க்" சுமிதா கடித்த எச்சில் ஆப்பிளை ரசிகர் ஒருவர் 10, 000 ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். கிரிக்கெட் விளையாட்டிலும் அண்மையில் இது போன்றதொரு ஏலம் நடந்திருக்கிறது. ஏலம் எடுக்கப்பட்டது இந் திய கிரிக்கெட் வீரர்கள் தின்று போட்ட எச்சில் இலைகளையல்ல. மாறாக, கிரிக்கெட் வீரர்களையே ஏலம் எடுத்திருக்கிறார்கள் இந்தியப் பெருமுதலாளிகள்.

"சில்க்" சுமித்தாவின் எச்சில் ஆப்பிளை ஏலத்துக்கு எடுத்தவரின் செயலை, பைத்தியக்காரத்தனம் என்று எவரும் எளிதில் கூறிவிட முடியும். ஆனால், கிரிக்கெட் வீரர்களை ஏலத்தில் எடுத்திருக் கும் முதலாளிகள் நிச்சயம் பைத்தியக்காரர்கள் அல்ல. "இது ஒரு இலாபம் தரும் வியாபாரம்" என்று பேட்டியளிக்கிறார் கொல்க த்தா அணியை ஏலம் எடுத்திருக்கும் இந்தி நடிகர் ஷாருக்கான்.

ஏப்பரல்- ஜூன் மாதங்களில் இருபதுக்கு இருபது (20/20) என்ற பெயரில் இந்தியன் பிரீமியர் லீக் என்ற அமைப்பு கிரிக்கெட் போட்டிகளை நடத்தவிருக்கிறது. இந்தப் போட்டிகளில் சென்னை, ஹைதராபாத், கொல்கத்தா, டெல்லி, மொஹாலி, ஜெய்ப்பூர், மும்பை, பெங்களுர் என இந்தியாவின் எட்டு மாநில நகரங்களின் பெயரில் அணிகள் மோதவிருக்கின்றன. இந்த அணிகளை யார் வேண்டுமானாலும் ஏலத்தில் எடுத்துக் கொள் ளலாம் என 200 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை (டெண்டர்) வெளியிட்டது இந்திய கிரிக்கெட் வாரியம், இதன் படி சாராய அதிபர் விஜய் மல்லையா திரு(ட்டு)பாய் அம்பானி, ஜி.எம்.ஆர். எனும் வீட்டுமனை கொள்ளைக்கார நிறுவனம், டெக்கான் கிரானிக்கல் எனும் ஆங்கில நாளேடு பெருமுதலாளி நெஸ் வாடியா, இந்தி சினிமா நடிகர் ஷாருக்கான் கவர்ச்சி நடிகை பிரீத்தி ஜிந்தா ஆகியோர் பல நூறு கோடிகளுக்கு ஒவ் வொரு அணியையும் ஏலம் எடுத்துள்ளனர்.

இந்த அணிக்ள் இந்தியாவின் மாநிலங்களைச் சேர்ந்த நகரங்க ளின் பெயர்களில் அமைந்திருந்தாலும். அதில் விளையாடுபவர்க ளெல்லாம் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இன்னம் சொல்லப் போனால் இதில் பலர் இந்தியாவைச் சேர்ந்தவர்களே அல்ல. ஒவ்வொரு அணியிலும் வெளி நாடுகளைச் சேர்ந்த 4 கிரிக் கெட் வீரர்கள் இடம் பெறுவார்கள். எஞ்சியிருப்பவர்களில் எந்த மாநிலத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களும் இடம் பெறுவார்கள். இப்படி உள்நாட்டு- வெளிநாட்டு வீரர்களைக் கலந்து வீரிய ஒட்டு ரகமாக அணிகள் அமைந்திருக்கும்.

அணிகளை ஏலத்தக்கு எடுத்ததைப் போலவே அதற்கான ஆட் டக்காரர்களையும் ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள் இந்திய முத லாளிகள். இதன்படி சென்னை அணியில் விளையாடவுள்ள மகேந்திரசிங் டோனியை 6 கோடி ரூபாய்க்கு ஏலமெடுத்திருக் கிறார் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முதலாளி. ஆஸ்தி ரேலிய கிரிக்கெட் ஆட்டக்காரர் சைமண்ட்சை 5.4 கோடி ரூபா ய்க்கு ஹைதராபாத் அணிக்காக ஏலம் எடுத் திருக்கிறது டெக் கான் கிரானிக்கல் நாளேடு. இதேபோல பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 80 கிரிக்கெட் விளையாட்டு வீரர்களை இந்த ஏல முறை க்கு ஒப்பந்தம் செய்திருக்கிறது இந்திய கிரிக்கெட் வாரியம். இவர்களில் தங்களுக்கு விருப்பமானவர்களைத் தெரிவு செய்து தாங்கள் ஏலம் எடுத்துள்ள அணிகளில் அவர்களை ஆட வைக்க முதலாளிகளால் முடியும்.

**ஏகாதிபத்தியத்தின் கீழ் எதுவுமே புனிதமானதல்ல. எல்லாமே பணம் பண்ணும் சரக்குத்தான் என்பதையே ஏலம் விடப்பட்ட கிரிக்கேட் போட்டி எடுத்துக்காட்டுகிறது.**

ஆங்கிலேய பிரபுக்குலத்தின் மேட்டுக்குடி சீமான்களின் பொழுது போக்கு விளையாட்டாகத் தொடங்கிய கிரிக்கெட் இன்று பன் னாட்டுத் தொழிற்கழகங்களின் விளம்பர- வியாபார கூடமாகவும், தரகுப் பெருமுதலாளிகள்- கருப்புப் பணச் சூதாடிகளின் விளை யாட்டாகவும் வளர்ந்து விட்டது. சினிமாவுக்கு அடுத்த கவர்ச்சி கரமானதாக கிரிக்கெட் மாற்றப்பட்டிருக்கும் அதேசமயம், சினி மாவைவிட அதிகமாகப் பணம் புரளும், பணம் கொழிக்கும் மைய மாக கிரிக்கெட் விளையாட்டு மாறியிருக்கிறது. கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் வெவ்வேறு நாடுகளின் ஊழல்மிக்க வாரி யங்கள் ஆண்டுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் சம்பாதி க்கின்றன. கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஒவ்வொரு போட்டியி லும் பல லட்ச ரூபாய் சம்பளமாகப் பெறுவதோடு கூடுதலாக விளம் பரங்களில் தோன்றி கோடிக்கணக்கில் ஊதியம் பெறுகிறார்கள். இவை மட்டுமின்றி, கிரிக்கெட் சூதாடிகளுடனும் தரகர்களுட னும் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்து உல்லாச வாழ்க்கை நட த்துகிறார்கள். இதில் சுருட்டப்பணம் யாருடையது?

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பால் உல்மரின் கொலைச் சம்பவம் சர்வதேச கிரிக்கெட்டின் இருண்ட- அசிங்கமான பகு தியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து காட்டியது. இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கக் கிரிக்கெட் அணிகளின் வீரர் கள், வர்த்தகச் சூதாடிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஊழலில் ஈடு பட்ட விவகாரம் ஏற்கெனவே அம்பலமாகியுள்ளத. இருப்பினும் உள்நாட்டு- வெளிநாட்டு முதலாளிகளால் பல்லாயிரம் கோடி கள் வாரியிறைக்கப்பட்டு இந்த கிரிக்கெட் சூதாட்டம் வெறி யோடு நடத்தப்படுகிறது. ஆங்கிலேய காலனிய நாடுகளாக இரு ந்த நாடுகளில் மட்டுமே. அவமான அடிமைச் சின்னமாக கிரிக் கெட் விளையாட்டு தொடர்கிறது. விடுதலைப் போராட்ட உணர் வுகள் மழுங்கடிக்கப்பட்டு அமெரிக்க- ஆங்கில மோகம் ஊட்டி வளர்க்கப்படுவதைப் போலவே கிரிக்கெட் மோகம் 'தேச பக்தி'யாக வளர்க்கப்படுகிறது.

கிரிக்கெட்டையே தனித்தொழிலாகக் கொண்ட ஆட்டக்காரர் களும், கிரிக்கெட்டை பந்தயம்- சூதாட்டமாகவும் வியாபாரம்- விளம்பரமாகவும் நடத்தும் கருப்புப் பண கும்பலும் சமுதாயத்தின் மிகப் பெரிய ஒட்டுண்ணிகளாக வளர்ந்து விட்டதை தற்போதைய ஏல விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. குதிரைப் பந்த யம், லாட்டரி, ஆபாச களிவெறியாட்ட விடுதிகள் போன்றவை எவ்வாறு ஒழிக்கப்பட வேண்டியவையோ அதைப் போலவே மிகப் பெரிய சமூகக் கேடான கிரிக்கெட் விளையாட்டும் ஒழிக்கப்பட வேண்டும். உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களே, இச்சூதாட்ட வெறியாட்டத்தை முடிவக்குக் கொண்டு வரும்.

**நன்றி: புதிய ஜனநாயகம்** **பாலன்**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ். குடாநாடு இயல்பு நிலைக்கு வந்து விட்டதா?

அரசாங்கத்தின் கொழும்பு அதிகாரிகளும் அரசு சார்பு ஊடகங்களும் யாழ்- குடாநாடு தற்போது இயல்பு நிலைக்கு வந்து விட்டதாகக் கூறி வருகின்றனர். ஆனால் இயல்பு வாழ்வ என்ன என்பது தான் பிரச்சினை. இரண்டு அல்லது ஒரு வருடத்திற்கு முந்திய நிலைமைகளோடு ஒப்பிட்டு விடயங்கள் கூறப்படுவதை "பரவாயில்லை" "கொஞ்சம் முன்னேற்றம்" என்று கூறக் கூடும். அதற்கு அப்பால் பழைய நிலைக்கு குடா நாடு திரும்புவது என்றால் கடந்த கால் நூற்றாண்டுக்கு முந்திய வாழ்க்கை நிலையோடு தான் ஒப்பிட்டுக் கூற வேண்டும். அத்தகைய நோக்குடன் இன்றைய நிலையை வைத்துப் பார்த்தால் சீர்குலைந்து சீரழிந்து அழிவுற்று வந்த யாழ்குடா நாட்டில் ஏதோ வாழ்கின்றோம் என்ற ஒரு ஏக்கப் பெரு மூச்சுடன் தான் மக்களிடமிருந்து பதில் வர முடிகிறது.

அண்மையில் யாழ் குடா நாட்டில் அரசு சார்பாக எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கு விபரத்தின் படி சுமார் ஆறு லட்சம் மக்கள் என்று கொள்ளப்படுகிறது. விவசாயிகள் மீனவர்கள் அன்றாடத் தொழில் செய்வோர் அரசாங்க- தனியார்துறை ஊழியர்கள் மாணவர்கள் வேலையற்றவர்கள் என்ற பல தரத்தில் உள்ள மக்கள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் தொழில்களும் வருவாய்களும் வாழ்க்கை நிலைமைகளும் பலதரங்களுடன் கூடிய கஷ்டங்களைக் கொண்டதாகும். மாத வருமானத்தை ஒழுங்காகப் பெறும் ஒரு அரசாங்க- தனியார்துறை ஊழியர்கள் பணியாளர்களால் பெறப்படும் சம்பளம் வாழ்க்கைச் செலவின் ஒரு மூலைக்குக் கூடக் காணக்தக்கதாக இல்லை. அதே வேளை விவசாயிகளின் உற்பத்திகள் முன்பு போல் முழு அளவுடையதாக இல்லை. குடாநாட்டுக்கு அப்பால் விளை பொருட்கள் எடுத்துச் செல்ல முடியாதபடியால் மிக மட்டுப்படுத்தப்பட்ட விவசாய முயச்சிகளே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கூலி விவசாயிகளாக உள்ள மக்கள் தொழில் இன்றி மிக மோசமான வாழ் நிலையில் உள்ளனர். அதிலும் கூட எரிபொருள், இடுபசளை, கிருமிநாசினி விதைகள் போன்றவற்றின் விலை அதிகரிப்பும் தட்டுப்பாடும் விவசாயிகளை முடங்கச் செய்துள்ளன. பல பகுதிகளின் விளை நிலங்கள் ராணுவ அதி விஷேட பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுள்ளன. வலி வடக்கு உட்பட குடாநாட்டின் பல பகுதிகளின் பயன்தரும் விவசாய நிலங்கள் பறிபோன நிலையில் இருந்து வருகின்றன.

அவ்வாறே குடா நாட்டைச் சுற்றியுள்ள பரந்த கடற்பரப்பில் மீனவர்கள் தமது மீன் பிடியைச் செய்ய முடியாது உள்ளனர். இரவு நேர மீன் பிடி முற்றாகவே தடைசெய்யப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் இரண்டு கி.மீ. தூரத்திற்குள் மட்டும் தான் மீன் பிடியில் மீனவர்கள் ஈடுபட முடியும். அது கூட முறைவைத்தே கடலுக்குச் செல்ல மீனவர்கள் அனுமதிக்கப்படுவர். அதனால் வாரத்தில் ஓரிரு நாட்கள் மட்டுமே தொழில் செய்ய முடியும். குடாநாட்டில் தற் போது கடற்தொழிலில் பத்தாயிரம் குடும்பங்கள் வரை ஈடுபட்டு வருவதாக அறிய முடிகின்றது. அவர்களது வருமானம் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதால் பல்வேறு வாழ்க்கை நெருக்கடிகளை அனுபவிக்கின்றனர். பல குடும்பங்கள் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று விட்டனர்.

சீமெந்தின் விலை 1500 ரூபா முதல் 2000 ரூபா வரை விற்பனையாவதுடன் ஏனைய கட்டிடப்பொருட்களும் பல மடங்கு விலைகளில் உள்ளன. இதனால் கட்டிடத்தொழில் சார்ந்த அனைவரும் தொழில் இன்றி இருக்கின்றனர்.

இவ்வாறே கடந்த பதினெட்டு ஆண்டுகளாக இடம் பெயர்ந்தோர் குடாநாடு பூராவும் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாடகை இருப்பிடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். 2007ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் மொத்தம் ஒரு லட்சத்து ஏழாயிரத்து நூற்றி முப்பத்தாறு பேர் இடம் பெயர்ந்தோராக உள்ளனர். இத் தொகை குடாநாட்டு சனத்தொகையில் 21 வீதமானவர்களாகும். இவர்களில் "பழைய" இடம் பெயர்ந்தோர் "புதிய" இடம் பெயர்ந்தோர் என்ற வேறுபாடு இருப்பதுடன் இவர்களுக்கான உலர் உணவு வழங்கல்களிலும் வித்தியாசங்கள் காட்டப்படுகின்றன. கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களோடும் அவர்களது வாழ் நிலையோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் பலர் குடா நாட்டு இடம் பெயர்ந்தோர் பரவாயில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் குடாநாட்டு இடம் பெயர்ந்தோர் வாழ்வு அன்றாட அவலங்கள் கொண்டவை தான். அத்துடன் இவ் இடம் பெயர்ந்த மக்களுக்கான வாரவாரம் வழங்கப்படும் உலர் உணவுக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கான உதவி வந்த உலக உணவுத் திட்டம் தனது "உதவியை" நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளமை இடம் பெயர்ந்தோருக்கான பெரும் இடியாகவே அமையப் போகிறது.

இவற்றுக்கும் அப்பால் குடாநாட்டை விட்டு வெளி மாகாணங்களுக்குச் செல்வதற்கு ராணுவ நிர்வாக அனுமதி பெறுவதும் விமான- கப்பல் பயணம் செய்வதும் நரகப் பயணம் போன்றதாகும். பணச் செலவும் பயண அலைச்சலும் மக்களுக்கு வேண்டாம் வேண்டாம் என்றாகி விடுகிறது. அவ்வாறு இருந்தும் தத்தமது அத்தியாவசிய தேவைகளுக்காகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியே உள்ளது.

குடாநாட்டுக் கல்வியானது பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை சீரழிந்த நிலையில் தான் காணப்படுகிறது. ஏதோ கல்வி கற்றலும் கற்பித்தலும் இடம் பெறுகின்றன என்பது உண்மை தான். ஆனால் பசி பட்டினி பற்றாக்குறைகளுடன் தமது பிள்ளைகளைப் படிப்பதற்கு அனுப்பும் பெற்றோர் மாணவர்கள் வீடு திரும்பும் வரை மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது. அவ்வாறே ஆசிரியர்கள் அச்சமின்றி சுதந்திர மாக மனம்திறந்த கற்பித்தலைச் செய்ய முடியாதுள்ளனர்.

இவற்றுக்கும் அப்பால் கொலைகள் நிகழ்வதும் ஆட்கடத்தல்கள் தொடர்வதும் ஒப்பீட்டு வகையில் "குறைந்துள்ளது" என்று கூறப்பட்டாலும் தொடரும் அச்ச சூழலாகவே காணப்படுகிறது. குடா நாட்டைப் பொருளாதார கல்வி பண்பாட்டு நிலைகளில் சீரழித்து சின்னாபின்னமாக்கி எந்தவிதமான அரசியல் கோரிக்கைகளும் மேலெழும்பாத வண்ணம் பேரினவாதப் பிடியின் கீழ் வைத்திருப்பதே ஆளும் வர்க்கத்தின் அடிப்படை நோக்கமாகும். என்று முடியும் இந்த அவல வாழ்வு என்ற கேள்வியே இன்றைய குடா நாட்டு மக்களிடம் மேலோங்கி நிற்கும் பிரதான சிந்தனையாகும்.

**வடபுலத்தான்.**

# கொசோவோவும் பிச்சை அரசியலும்

கொசோவோ தனிநாட்டுப் பிரகடனத்தை வெளியிட்டவுடன் தனிநாட்டுப்பிரகடனம் செய்திருக்கும் கொசோவோவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வாழ்த்துக்களை தெரிவித்தது. அதில்.

"உயிர்களை உவப்பீகை செய்து சுதந்திரம் இறைமை உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி விடுதலையை வென்றெடுத்துள்ள வகையில் தனிநாட்டுப் பிரகடனம் செய்திருக்கும் கொசோவோவுக்கு தமிழ் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்." என்று கூறப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுமானால் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளட்டும். தமிழ் மக்களின் வாழ்த்துக்களை தெரிவிக்க இவர்கள் யார்? தமிழ் மொழியின் பெயரால் ஒரு மரபுக் கூட்டம் பிழைப்பு நடத்த தமிழ் மக்களின் பெயரால் இன்னொரு கூட்டம் அரசியல் பிழைப்பு நடத்துகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கையில்: மேலும்

"ஒரு விடுதலைப் போராட்டத்தை ஏற்று அந்த மக்களுக்கு இறைமை உண்டு தன்னாட்சி உரிமை உண்டு என்று அதனை அங்கீகரித்து அதன் தனிநாட்டுப் பிரடனத்துக்கும் பாதுகாப்புக்கும் ஒத்துழைத்து செயற்படும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கும் வாழ்த்துக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவிக்கின்றது." என்று கூறியுள்ளது.

"ஒடுக்கப்பட்ட இனம் ஒன்றிற்கான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை இறைமை என்பவற்றை கொசோவோவில் உலகப் [illegible]நாடுகள் அங்கீகரித்து தனிநாட்டுப் பிரகடனத்துக்கு ஒத்துழைக்கின்றமை தமிழினத்துக்கும் அனைத்துலகத்தின் பால் நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எல்லாவற்றிற்கும் கையேந்திக் கையேந்திப் பிச்சையெடுத்துப் பழகிய கூட்டமைப்பினருக்கு செய்யக் கூடியதெல்லாம் பிச்சையிடுவார்கள் என்று அவர்கள் நம்புகிறவர்களைப் போற்றுவது மட்டுமே. இவர்களால் தமிழ் மக்களுக்கு பயனெதுவும் விளையப் போவதில்லை. அண்டிப் பிழைக்கும் அரசியலையன்றி வேறெதையும் அறியாதவர்கள் இவ்வகையான பயனற்ற வீரவசனங்களை பேசி பிழைப்பு நடத்துவதை விட வேறெதைச் செய்யமுடியும்.

இனி என்ன.......

இந்த வாழ்த்துச் செய்தியின் ஆங்கில மொழியாக்கம் கொழும்பில் உள்ள மேற்குலக தூதராலாயங்களுக்கு அனுப்பப்படும். தூதராலய அதிகாரிகளுடன் கூட்டங்களுக்கு செல்லும் போது இந்த வாழ்த் துச் செய்தியை கையோடு எடுத்துச் சென்று தமிழ் மக்கள் எப் போதும் உங்களுடன் தான் இருக்கிறார்கள் என தமிழ் மக்களின் பெயரால் பிச்சையெடுக்க வேண்டியதுதான்.

இதற்கிடையில் இந்தியா கொசோவோ தனிநாட்டுப் பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்க்கும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யப் போவதென்ன?

இந்தியா சொன்னால் நாங்கள் சொன்னமாதிரித்தான் என்று சொல்பவர்கள் இந்த விடயத்தில் யார் பக்கம் நிற்கிறார்கள்?

கொசோவோ தனிநாட்டுப் பிரகடனத்தை வெளியிட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைப்பதைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த எண்பது வயது மூதாட்டி சொன்னார். "1948 இல் பார்த்த மாதிரியே இருக்கு."

ஐ.நா பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் உள்ள ரஷ்யா மற்றும் சீனா ஆகியன கொசோவோ தனிநாட்டுப் பிரகடனத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அதேவேளை ஐ.நாவின் 1244 வது தீர்மானத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளன. ஸ்பெயின் கொசோவோவை அங்கீகரிக்க மறுத்ததோடல்லாமல் ஐரோப்பிய ஒன்றியம் இதை ஆதரிக்கக் கூடாது எனவும் கேட்டுள்ளது. கிறீஸ் மற்றும் அனேகமான கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் கொசோவோவை அங்கீகரிக்க மறுத்துள்ளன.

அந்த மூதாட்டி சொன்னது போல இன்னுமொரு இலங்கைக்கான தொடக்க விழா அரங்கேறியுள்ளது.

போராடிப் பெறாத சுதந்திரத்திற்கு மாற்றாக மன்றாடிப் பெற்ற சுதந்திரம் எப்படி இருக்கும் என்பதற்கு கொசோவோ ஒரு பாடமாக அமையும்.

**தமிழ் மகன்**

# கண்டதும் கேட்டதும் செய்திக் கோப்பு

ஏசுகுருவி

## காலில் வீழும் கலாச்சாரம்

முன்னாள் அமைச்சர் செ. இராசதுரையின் "சுவடுகள் நூல் வெளியீடும் கௌரவிப்பும் கொழும்பில் நடைபெற்றது. பகுத்தறிவாளர் ஈ.வே. ராவில் தொடங்கி சாயிபாபாவிடம் வந்து நிற்பவர் இந்த முன்னாள் அமைச்சர். அவ்வாறு அரசியலில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை ஆசானாகக் கொண்டவர் பின்பு ஜே. ஆரின் விசுவாசியாகிக் கொண்டவர். அதனால் தந்தையின் மைந்தர்களால் "துரோகி" பட்டமும் கட்டப்பட்டவர். அதனால் அவருக்கு கிட்டச் செல்வதற்குப் பயந்தவர்கள் பலர். அவர்களில் ஒருவரான கம்பவாரிதி இக் கூட்டத்தில் பேசும் போது. தான் அரசியல் பேசவில்லை என்று அடிக்கடி கூறிக் கொண்டே "பச்சை" அரசியல் பேசியதை அவதானிக்க முடிந்தது. இதுவரை சிலர் கம்பவாரிதியின் கால்களைத் தொட்டு வணங்கி நிற்பதையே காண முடிந்தது. ஆனால் அன்றைய நிகழ்வில் கம்பவாரிதியே முன்னாள் அமைச்சரின் கால்களைத் தொட்டு வணங்கிக் கொண்டார். காலில் வீழும் தமிழகத்து கலாச்சாரம் இங்கு வேகமாகப் பரவுகிறது போலும்.

## ஆனந்தசங்கரியின் ஆலோசனை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ. ஆனந்தசங்கரி சமகால தமிழ் அரசியல் நிலவரம் பற்றி ஆளும் தரப்புக்கு ஆதரவான வகையில் அடிக்கடி கருத்துரைத்து வருபவர். தான் ஜனாதிபதிக்கு எடுத்துக் காட்டியதன் காரணமாகவே தற்போது இரவு நேர வான்வழித் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார். அவர் மேலும் தனது செல்வாக்கைச் செலுத்தி பகல் நேர வான் தாக்குதல்களையும் நிறுத்திக் வைக்க ஏற்பாடு செய்வாரா? அல்லது பகல் நேரத் தாக்குதல்களை விரிவாக்கும் படி மேலும் ஆலோசனை வழங்குவாரா?

## கருணாநிதி காட்டிய உதாரணம

தமிழக சட்டசபையில் முதல்வர் கருணாநிதி இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் மத்திய அரசு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசி இருக்கிறார். அவ் உரையில் "ஈழத்தமிழர் போராட்ட இயக்கங்கள் தம்முள் ஒற்றுமையில்லாது நின்றமையினால் தான் இந்தச் சபையில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றி பரிந்துரை செய்யும் நிலை உருவாகி இருக்கிறது. ஒரே குழுவாக இருந்து தமிழர்களுக்குரிய உரிமைகளைப் பெறும் எண்ணம் அவர்களிடம் இல்லாமல் ஒரு குழு மற்றக் குழுவினரை மாய்க்க வேண்டும் என்று வெட்டியும் சுட்டும் மாய்ந்தார்கள். அதனால் தான் உலகில் பல விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றும் கூட இவர்களால் வெற்றி பெற இயலவில்லை. அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து போராடியதால் தான் நேபாளத்தில் வெற்றி கிடைத்திருக்கிறது." இவ்வாறு முதல்வர் கருணாநிதி கூறி இருக்கிறார். அவரது அரசியல் பிற்போக்கானது என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் தனது பேச்சில் சுட்டிக் காட்டிய ஈழத்தமிழர் இயக்கங்கள் பற்றிக் கூறியவை தமிழர்தரப்புகளின் சுய கவனத்திற்குரியவையாகும்.

## ஆறுமுகனின் துணிச்சல்

அமைச்சர் ஆறுமுகன் தொண்டைமானைப் போன்ற துணிச்சல் மிக்க மலையகத் தலைவர் யாருமில்லை. சௌமியமூர்த்தி தொண்டமானிடம் இருந்த அதே துணிச்சல் சாணக்கியம் இன்று ஆறுமுகனிடம் உண்டு. அவரின் சேவையை மலையக மக்கள் பெற்றுக்கொள்ள ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு வீரகேசரி வார இதழின் மலையகப் பார்வை பகுதியில் ஒருவரது பேட்டி மூலம் சொல்ல வைக்கப்பட்டிருக்கிறது. இந்த துணிச்சல் மிக்கத் தலைவர் பதவியில் இருந்த எல்லா அரசாங்கங்களிலும் அமைச்சர் பதவி பெற்றமை அவரது சாணக்கியம் தான். இதனை அவர் தாத்தாவிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்றுக் கொண்டதேயாகும். ஆனால் இவரை நம்பிய மலையக மக்கள் தான் பரிதாபத்திற்குரியவர்கள்.

## எஸ்.ஜே.வி. யின் இறுதிக் கூற்று

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே.வி செல்வநாயகத்தின் 31வது சிரார்த்த தினத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா "தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தமிழீழம் தான் இறுதியான தீர்வென்று வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் போது தந்தை செல்வா கூறியிருந்தார். இதனால் ஐரோப்பியரிடம் இழந்த உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழீழத்தை அடைய நாம் அனைவரும் பாடுபட வேண்டும்." எனக் கூறி உள்ளார். செல்வாவின் சிரார்த்த தினத்தில் அவர் இறுதியாக்க கூறிச் சென்ற மற்றொரு கூற்றான "தமிழ் இனத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்பதையும் சேர்த்து நினைவுபடுத்தியிருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் பொருளாதாரச் சீரழிவால் நாடு நாசமடைகிறது

பயங்கரவாதத்திடமிருந்து நாடும் மக்களும் மீட்டெடுக்கப் பட்டு வருவதாகவும் ஜனநாயகச் சூழல் மீள் நிர்மாணம் செய்யப் பட்டு வருவதாகவும் அரசு கூறிக்கொண்டிருகிறது. மக்களின் இயல்பு வாழ்க்கை கட்டியெழுப்பப்பட்டு வருவதாகவும், மீள்குடி யேற்றம், புனர்நிர்மாணம், அபிவிருத்தி வேலைகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாகவும் அரசும் அரச ஊடகங்களும் பறைசாற்றி வருகின்றன.

ஆனால் யதார்த்த சூழ்நிலை இதற்கு மாறான நிலமையையே பிரதிபலித்து நிற்கிறது. சிங்கள பௌத்த பேரினவாத முதலாளித் துவ ஆட்சி அதிகாரம் பயங்கரவாதத்தை முற்றாக அழிப்பதாகக் கூறிக் கொண்டு வடக்கிலே மிகக் கொடூரமான யுத்தத்தை முன்னெடுத்து வருகிறது. பொது மக்கள் செறிந்து வாழும் பிர தேசங்கள் மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் வயது வித்தியாசமற்ற காட்டுமிராண்டித்தனமான படுகொலை களையும் மேற்கொள்வதன் ஊடாகத் தமிழ் மக்களின் நியாய பூர்வமான வாழ்வாதார உரிமைகளை ஒடுக்குவதில் அரசு முன் நின்று வருகிறது. அதே வேளை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரி மைக்கான எந்தவொரு குரலையும் அடியோடு அழித்து விடு வதில் மிகக் கவனமாகவே செயற்பட்டும் வருகிறது.

கிழக்கில் ஜனநாயக மீள் உருவாக்கம் என்ற திரைக்கு பின்னால்

## கிழக்கில் ஜனநாயகம்

அரசின் பூரண அனுசரணையோடு ஆயுதக் குழுக்கள் மேற் கொண்டுவரும் அட்டூழியங்கள் யாவரும் அறிந்த இரகசியம். மீள் குடியேற்றம் என்ற பெயரிலான இனவாத குடியேற்றங்கள், அபி விருத்தி என்ற பெயரிலான அத்துமீறிய ஆக்கிரமிப்புகள் மிகத் தாராளமாகவே மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே நேரம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான எந்தவித சாதக சூழலும் உருவாக்கப்படாத சூழ்நிலையில் அடுத்தடுத்து தேர்தல்களை நடத்த எத்தனிப்பதன் மூலம் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப் பட்டு மக்களுக்கான ஜனநாயக சூழல் உருவாக்கப்பட்டு வருவ தாக சர்வதேசத்திற்கு காட்ட அரசு முயற்சித்து வருகின்றது.

அதேவேளை நாட்டின் ஏனைய பிரதேசங்களின் தேசிய சிறு பான்மை இன மக்களின் அடிப்படை வாழ்வாதார ஜனநாயக உரி மைகள் யுத்தத்தின் பெயரால் அரசு இரும்பு, கரம் கொண்டு நசு க்கி வருகின்றது. ஆட்கடத்தல், தனிமனித படுகொலைகள், அனாமதேயே கைதுகள் தடுத்து வைப்புக்கள் என்பன சாராசரி நிகழ்வாகி சாதாரண வாழ்வுக்கு அச்சுறுத்தலும், அச்சமும் நிறை ந்த ஒரு சூழலும் நிலவி வருகிறது. மனித உரிமை மீறல் ஊடாக சுதந்திர மறுப்பு என்பனவற்றில் உலகிலேயே முக்கிய இடத்தை எமது நாடு பிடித்துள்ளது.

## பொருளாதார வீழ்ச்சி

நாட்டின் பொருளாதார கட்டுமானம் மிகமோசமான வீழ்ச்சியை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறது. ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியை நோக்கிச் செல்ல இறக்குமதி செலவீனம் பன் மடங் காக அதிகரித்துக் கொண்டு செல்கிறது. உள்நாட்டு பொருளா தாரத்தில் பெரும்பகுதி ஏகாதிபத்திய பல்தேசிய கம்ப னிகளுக்கு தாரைவார்க்கப்பட்டு விட்டது. உள்ளூர் உற்பத்தி சுயப்பொருளா தாரம், கிராமியக் கைத்தொழில், விவசாயம் அனைத்தையும் விழுங்கி உலகமயமாதல் கொண்டு வந்துக் கொட்டும் நச்சு நுக ர்வு காலாச்சாரம் எல்லா மட்ட மக்கள் மீதும் வலிந்து திணிக்கப் பட்டு வருகிறது. இந்த நாட்டுப் பொருளாதாரத் தில் பெரும் பங் களிப்புச் செய்து வந்த பெருந்தோட்டப் பொருளாதாரம் தேசிய விதேசிய பல்தேசிய கம்பனிகளுக்கு நீண்ட காலம் குத்தகைக்கு வழங்கப்பட்டதோடு பல்வேறு வழிகளில் சீரழிக்கப்பட்டு வருகி றது. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஒவ்வொரு மணி நேர மும் அதிகரித்த வண்ணம் உள்ளது. சாதாரண மக்களின் அன் றாட வாழ்வை ஆட்டம் காண வைத்துக் கொண்டிருக்கும் இந்த பொருளாதார நசிவுக்கு பல்வேறு வியாக்கியானங்களும், விளக்கங்களும் அரசினாலும் ஆளும் வர்க்க நலன் காக்கும் பொருளாதார நிபுணர்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின் றன. அண்மையில் இலங்கையின் பொருளாதார வலையமைப்பை ஒழுங்கமைக்கும் மத்திய வங்கியின் ஆளுனர். மோட்டார் கார், கையடக்கத் தொலைபேசிப் பாவனை கட்டிடங்கள் அதிகரித்துள் ளாதாகவும் அதன் அடிப்படையில் தனி மனித வருமானம் அதி கரித்துள்ளதாக வும் பொருளாதார வளர்ச்சி வீதம் மிகப் பெரிய வளர்ச்சியை காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஏகாதிபத்திய விசுவாசம்


அதனால் எமது ஒட்டு மொத்த பொருளாதார அசைவியக்கத்தை யும் தீர்மானிப்பது அன்னிய ஏகாதிபத்திய வல்லாதிக்கமே என்ற உண்மையை மறைக்கவும், அதற்கெதிராக மக்கள் மத்தியில் இருந்து எழக் கூடிய எந்த விதமான எதிர்ப்பலைகளைத் தடுத் துக் கொள்வதற்காகவும் யுத்தம் என்ற ஆயுதத்தை அரசு மிக வலிமையுடன் பயன்படுத்தி வருகின்றது. எமது வளங்களை பங்கு போட்டுக் கொள்வதில் அமெரிக்க- மேற்குலக இந்திய- யப் பானிய ஆளும் வர்க்க சக்திகள் போட்டிப் போட்டுக் கொண்டு முனைப்புக் காட்டி வருகின்றன. ஏகாதிபத்தியம் தனது நவகாலனி யாதிக்க, உலகமயமாதல் நிழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு ஏது வாக வடிவமைக்கப்பட்ட கல்வித் திட்டம் உள்ளிட்ட பொருளாதார செயற்திட்டங்களுக்கு பொருளாதார உதவி மனிதாபிமான உதவி போன்ற வடிவில் எச்சில் இலைகளை வீசி ஏறிவதன் மூலம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்து வரும் ஆளும் வர்க்கப் பேரினவாத தலைமை கள் தமது வர்க்க நலனை பாதுகாத்துக் கொள்வதற்கும் தமது இருப்பை ஸ்திரப்படுத்தி கொள்ளவதற்கும் தமது ஏகாதிபத்திய விசுவாசத்தை மிக பக்தியுடன் பூஜித்து வருகின்றது. அதேபோல் தன் பேரி னவாத நிகழ்ச்சி நிரலை ஏகாதிபத்திய உலகமயமாதல் சக்திகளின் ஆசீர்வாதத்தோடு முன்னெடுத்து வரும் அதேவேளை இதற்கு ஏதுவாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் அரசாங்கங் கள் அரசு இயந்திரத்தையும் ஊடகங்களையும் வடிவமைத்துக் கொள்வதோடு பௌத்த மேலாதிக்க சக்திகள் மேல் தட்டு வர்க்க நலனு க்கு ஒத்தூதும் புத்திஜீவிகள் என் போரையும் இணைத்துக் கொண்டு மிக வலுவான அதிகார வலையமைப்பை ஏற்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தி வந்திருப்பதும் அவதானிக்க வேண் டிய விடயம்.


## உழைக்கும் மக்களின் அவலம்


இந்த நிலையில் இந்த நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள் சாதாரண உழைக்கும் மக்களின் தினசரி வாழ்க்கை சவால்க ளும், போராட்டமும் நிறைந்ததாகவும் வாழ்வாதார உரிமை, ஜன நாயக மறுப்பு மேலோங்கியதாகவும் காணப்படுகின்றது. உலகம யமாக்கல் கொண்டு வரும் நச்சு சிந்தனைகளும் நசிவு கலாச் சாரமும் ஒவ்வொரு வீட்டினுள்ளும் ஊடுருவி அடுப்படி வரை சென்று நிற்கிறது. மஹிந்த சிந்தனை என்ற பெயரில் கிராமப் புற அபிவிருத்தி, உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தல், சுய பொரு ளாதாரத்தை கட்டிவளர்த்தல், அத்தியாவசிய பண்ட உற்பத்தியில் தன்னிறைவை எட்டுதல் என்பன போன்ற கவர்ச்சிகரமான கொள்கை வாசிப்புகளுடன் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தன் இருப்பை நிலை நிறுத்திக்











கொள்வதற்காக தனது சிங்கள பௌத்த பேரினவாத விசுவாச த்தை வெளி வெளியாக நடைமுறைப்படுத்துவதிலும், சிறுபான்மை மக்கள் மீதான கொடூரமான அடக்கு முறைகளை பிரயோகிப்பதி லும் மிக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அதேவேளை சிறு பான்மையினரிடமிருந்து மட்டுமன்றி ஏனைய சாதாரண மக்களி டமிருந்தும் எழக் கூடிய எழுச்சிகள், போராட்டங்களை மிகவும் வக்கிரமாக ஒடுக்குவதில் அரச பயங்கரவாதமும் அரசு தீனி போட்டு வளர்க்கும் இனவாத அட்டைகளும் அரசுக்கு வக்கால த்து வாங்கும் சில ஊடகங்களும் மிக முனைப்பாக செயற்பட்டு வருகின் றன. அதேநேரம் காலத்திற்கு காலம் சிறுபான்மை, மற்றும் சாதாரண உழைக்கும் மக்கள் மீதான, பொருளாதார சுமை, சுர ண்டல் அடக்குமுறை என்பவற்றிற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய இந்த மக்களின் வாக்குகளிலும், சந்தா பணத்திலும் அர சியல் பிழைப்பு நடத்தும் அரசியல், தொழிற்சங்கத் தலைமைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆட்சி பீடம் ஏறும் அரசாங்களிடம் பதவி பட்டங்களைப் பெற்றுக் கொண்டு அதியுயர் சுபபோகங்களை அனுப்பவிப்பதோடு அம்மக்களின் உணர்வுகளை அடகு வைத்து வயிற்றுப் பிழைப்பு நடத்துவதையே அரசியலாக காட்டி வந்திருக் கிறார்கள்.

## ஐ.தே. கட்சியின் ஏமாற்று

மாற்று அரசியல் செய்வதாக காட்டிக்கொள்ளும் வேறும் சில அரசியல் தலைமைகள் இந்த நாட்டில் இருக்கும் பெரிய கட்சிகள் ஒன்றுக்கு மாற்றாக இன்னொன்றை மாறி மாறி ஆட்சி பீடம் ஏற்றுவதின் மூலம் விமோசனம் கிட்டி விடும் என்ற மாயையான கருத்தியலுடனே அரசியல் பேசி வந்திருக்கின்றன. எனவே இன்றைய சூழ்நிலையில் பிரதான எதிர் கட்சியாக இரு க்க கூடிய ஐக்கிய தேசிய கட்சி இந்த நாட்டின் இன முரண் பாட்டை தூண்டி அதற்கு தூபம் போட்டு வளர்த்ததோடு பல்வேறு கால கட்டத்திலும் எழுந்த அரசியல் தொழிற்சங்க போராட்டங் களை நசுக்குவதிலும் மிக கொடூரமான் அதிகார பலத்தை பிர யோகித்து வந்த கட்சி ஆகும். திறந்த பொருளாதாரத்தை அறி முகப்படுத்தி இந்த நாட்டின் சுய பொருளாதார தளத்தை சீரழித்த தோடு 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலம் ஏக வல்லமை உடைய ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி தனி நபர் ஆதிக்கத்திற்கு வழி வகுத்தது. இந்த சாபக்கேட்டின் விளைவுகளை இன்றும் நாட்டு மக்கள் மிக மோசமாக அனுபவி த்து வருகின்றார்கள். இவ்வாறானதொரு கட்சி இன்று மக்க ளின் துயரங்களைக் கண்டு நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு வீதிகள், சந்தைகள் தோறும் குள்ளநரித்தனமான நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. இதன் மூலம் தமது வாக்கு வங்கியை காத்துக்கொள்வதிலும் தமது வர்க்க நலனை தக்க வைத்துக் கொள்வதிலும் தன் கைவந்த அரசியல் நாடகத்தை மேடையேற்றி அடுத்து ஆட்சியை பிடிக்கும் அரசியல் தந்திரோபாயத்தை செய ற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

## இனவெறி கக்கும் ஜே.வி.பி

மறுபுறத்தில் இடதுசாரி முகமூடியை மாட்டிக் கொண்டு குறிப் பாக சிங்கள இளம் தலைமுறையினரிடையே தனது இடதுசாரி வேஷத்தின் மூலம் மிகப்பெரிய ஆகர்ஷிப்பை ஏற்படுத்தி இந்த நாட்டின் நேர்மையான மார்க்ஸிய இயக்கச் செயற்பாடுகளு க்கு ஆப்பு வைத்த (J.V.P) மக்கள் விடுதலை முன்னணி இன்று இன வாதத்திற்கு எண்ணைய் வார்த்து பௌத்த சிங்கள பேரினவாத த்தை பிரதிநிதித்துவப்படுத்துவதிலும் அதனை பாதுகாப்பதி லும்

**புதிய மலையகம் மகேந்திரன்**

சதேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்துரைப்ப திலும் மக்கள் மீதான இன சுத்திகரிப்பு கோர யுத்தத்தை முன் னெடுப்பதிலும் வரிந்து கட்டிக் கொண்டு முன் வரிசையில் நிற் கிறது. எப்போதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சோசலிச எதிர்காலம் என மேடைகளில் வாய்சவடால் போடும் ஜே.வி.பி மக்களின் அடிப் படை உரிமைகளுக்காகவும் தொழிற்சங்க அரசியல் தேவைகளுக்காக மக்கள் எழுச்சிகளும் போராட்டங்களும் வெடித்தப் போதெல்லாம் முண்டியடித் துக் கொண்டு தனது போலி தொழி லாளர் விசுவாச கோஷங்களை தூக்கி பிடித்துக் கொண்டு உண்மை யான நேர்மையான மக்கள் சத்தி களை பின்னுக்கு தள்ளி அந்த போரா ட்டங்களை பிசுபிசுத்து போகச் செய்த வரலா றுகள் ஏராளமாகவே உள்ளன. அது மட்டு மன்றி தேசிய இனப்பிரச்ச னை தொடர்பில் அதன் செயற்பாடு களும் அக்கட்சியின் நிழல் அமைப்புக ளின் செயற்பாடுகளும் அதன் சுய ரூப த்தை வெளி வெளியோகவே பல சந்தர்ப்பங்களில் தோலுரித்துக் காட்டி யுள்ளன. அதேவேளை இந்த நாட்டின் உழைக்கும் சாதாரன மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்காக ஜே.வி.பி எப்போதும் இதய சுத்தியுடன் போராடியது கிடையாது. இதன் நிகழ் ச்சி நிரல் வேறொன்றாகவே இருந்து வந்துள்ளது. இக்கட்சியின் வர்க்க விரோத வங்குரோத்து அரசியல் சாயம் வெளுத்து உட்கட்சி முரண் பாடுகளும் பிளவுகளும் மேலோங்கி வருவதைக் காணலாம்.

## பழைய இடதுசாரிகளின் நிலை

மேலும் இந்த நாட்டின் பழம் பெரும் இடதுசாரிகள் என பிரக டனப்படுத்திக் கொள்ளும் சில அரசியல் கட்சிகளும் தலைமை களும் இருக்கவே செய்கின்றன. இவற்றில் ஒரு சாரார் தமது பழைய இடதுசாரி அரசியல் இன்னும் இருப்பது போல காட்டிக் கொண்டு அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புகளையும் அனுபவித்துக் கொண்டு காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றுமொரு சாரார் யுத்த எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, கைது, கடத்தல், காணாமல் போதல்களு க்கு எதிர்ப்பு போன்ற பாதாகைகளை தூக்கி பிடித்துக் கொண்டு வெகுஜன எழுச்சிக்கு தலைமை தாங்குவாதாக காட்டி பத்திரிக்கைகளுக்கு அறிக்கை விடுவதும் மகாநாடு களை நடத்துவதும் அவ்வப்போது ஊடகங்களில் தலையை நீட்டி கருத்துச் சொல்லதோடும் தமது அரசியல் பிழைப்பை மேற் கொண்டு வருகிறார்கள். இன்னும் சிலர் இதற்குமேலாக

தொடர்ச்சி..... 14ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# நேபாளத் தேர்தலில் மாஓவாதிகள் வெற்றி

## புதிய ஜனநாயகம்- சோசலிச நோக்கிய முதல் படி


கடந்த மார்ச் மாதம் 10ம் திகதி தென்னாசியப் பிராந்திய நாடுகளில் ஒன்றான நேபாளத்தில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இத் தேர்தல் பாராளுமன்றத்திற்கான ஒன்று அல்ல. அரசியல் அமைப்பு ஒன்றினை வரைவதற்கான அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலாகும் இவ்வாறு ஒரு தேர்தல் இடம் பெறுவதை நேபாளத்தின் மன்னராட்சி ஆதரவாளர்களும் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளும் விரும்பவில்லை. அவ்வாறே இந்திய அமெரிக்க மேலாதிக்க சக்திகளும் தேர்தலை ஒத்திப் போடவே முயன்றன. ஏற்கனவே இரு தடவைகள் அவ்வாறு பின் போடப்பட்டது. ஆனால் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய ஜனநாயக சக்திகளும் வெகுஜனப் போராட்ட வற்புறுத்தல் செய்து கொண்டதன் விளைவாகவே தேர்தல் இடம் பெற்றது.

இத் தேர்தலில் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி தனிப் பலமுடைய கட்சியாக வெற்றி பெற்றிருக்கிறது. அது ஏனைய மாக்சிச, ஜனநாயக, தேசிய இனக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் நிர்ணய சபையின் பெரும்பான்மைப்பலத்தைக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் சுமார் இரண்டரை நூற்றாண்டு கால மன்னராட்சிக்கு முடிவு கட்டி விட வாய்ப்பு உருவாகியுள்ளது. மக்கள் ஜனநாயகம் தோற்றுவிக்கப்பட்டு புதிய ஜனநாயகத்தின் ஊடாக சோஷசத்தை நோக்கி வீறு நடைபோடக் கூடிய ஆரம்ப வெற்றி இத் தேர்தலில் மூலம் கிடைத்திருக்கிறது.

நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி குறுக்கு வழிகளில் பெறப்பட்ட ஒன்று அல்ல. பன்னிரண்டு ஆண்டுகளாக அக் கட்சி திட்டவட்டமான தொலை நோக்குத் தெளிவுடன் கூடிய கொள்கைத் திட்டத்தை முன்வைத்து நடாத்தி வந்த மக்கள் யுத்தப் பாதையிலான ஆயுதப் போராட்டத்தின் பின்பாகப் பெறப்பட்ட தேர்தல் வெற்றியாகும். அங்கு ஆயுதப் போராட்டம் என்பது வெறும் கண்மூடித்தனமான வழிகளில் முன்னெடுக்கப்படவில்லை. வர்க்கப் போராட்டப் பாதையில் வழிநடந்து விவசாயிகள் தொழிலாளர்கள் நிலமற்றோர் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஒடுக்கப்படும் தேசிய இனத்தவர் பெண்கள் இளைஞர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் புத்திஜீவிகள் மற்றும் தேசப் பற்று மிக்கோர் எனப் பலதரப்பட்ட மக்களையும் கொள்கை வேலைத்திட்ட அடிப்படையில் அணிதிரண்டிய போராட்டமாகவே முன்னெடுக்கப்பட்டது. கட்சியின் உறுதியான தலைமைத்துவத்தின் கீழ் வெகுஜன அமைப்புகள் மக்கள் மத்தியில் அர்ப்பணிப்பு மிக்க வேலை முறைகளை முன்னெடுத்தன. அதேவேளை மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் மக்கள் படை தோற்றுவிக்கப்பட்டு மக்கள் யுத்தத்தின் பனமுகப் போர்த் தந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. கிராமப் புறத்தளப் பிரதேசங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கொரில்லா யுத்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. நிலப்பிரபுத்துவத்தின் கீழ் ஒடுக்கப்பட்டிருந்த விவசாயிகள் போராட்டத்தில் முக்கிய பாத்திரம் வகித்தனர். ஏனைய ஒடுக்கப்பட்ட பிரிவு மக்களும் பெண்களும் இளந் தலைமுறையினரும் போராட்டக்களத்தில் முன்னின்றனர். ஒரு முழுமையான விடுதலைப் போராட்டமாக விருத்தி பெற்றுக் கொண்டமையைப் பொறுக்க முடியாத அமெரிக்கா நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியை தனது பயங் கரவாதப் பட்டியலில் பதிவு செய்து கொண்டது.

இத்தகைய நேபாள மக்களின் போராட்டத்தால் பல பிரதேசங்கள் கட்சியினதும் படைகளினதும் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. அவ்வாறு அமைந்த பிரதேசங்களில் நிலச்சீர்திருத்தம் கொண்டு வரப்ப ட்டு விவசாயிகளுக்கும் நிலமற்றோருக்கும் நிலம் பகிர்ந்தளிக்கப் பட்டன. விடுதலைப் பிரதேசங்களின் அபிவிருத்தி குறிப்பிட்டளவு ஏற்படுத்தப்பட்டதுடன் கல்வி சுகாதாரம் உட்பட சமூக பண்பாட்டம்சங்கள் திட்டமிட்டு புதிய வழிகளில் மேற் கொள்ளப்பட் டன. குறிப்பாக சாதிய ஏற்றத்தாழ்வுகள் நிராகரிக்கப்பட்டு சமத் துவ நிலை வலியுறுத்தப்பட்டது. தேசிய இனங்களின் தனித்துவங் கள் பேணப்பட்டன.

மேலும் பெண்கள் மீதான அடக்குமுறைகள் பல நிலைகளிலும் ஒழிக்கப்படுவதற்கான முன் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பெண் விடுதலைக்கான ஆரம்ப செயற்பாடுகள் திட்டமிட்டுச் செயல் வடிவம் பெற்றன. இவை யாவும் சுமார் பத்தாண்டுகால விடுதலைப் போராட்டச் சூழலில் மேற்கொள்ளப்பட்டவையாகும். ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான விடுதலைப் போராட்டத்தில் பின் பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவும் நேபாளத்தின் விஷேட நிலைமைகளுக்கு ஏற்றவாறு முன்னெடுக்கப்பட்டன. மன்னராட்சியை வீழ்த்தி ஒழிப்பது என்பது குறிக்கோளாக்கப்பட்டு அதற்கான ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை நிலப்பிரபுத்துவத்தின் சகல பழைமைவாத பிற்போக்குக் கருத்தியல்களும் சிந்தனை செயல் முறைகளும் மக்களுக்கு எடுத்து விளக்கி நிராகரிக்க வைக்கப்பட்டன. ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி பயத்தின் காரணமாகக் காரியங்கள் முன்னெடுக்கப்படுவது தவி



ர்க்கப்பட்டு அறிவியல் பூர்வமாகவும் அரசியல் ரீதியாகவும் மக்கள் அறிவூட்டப்பட்டனர். இதனை வெகுஜன அரசியல் மயப்படுத்தல் மூலமே சாத்தியமாக்கினர். ஒரு நிலவுடைமை மன்னராட்சியில் இந்து ராச்சியம் என்ற பெயரில் நிலவுடைமைக்காலக் கருத்தியல் சிந்தனை இறுக்கத்தின் கீழ் நேபாளக் கம்யூனிஸ்ட்டுக்களின் வேலை முறையானது மக்களை வென்றெடுக்கத்தக்க வகையில் கடுமையான வேலை முறைகளினால் அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அவர்களது வேலைமுறை தென்னாசியச் சூழலில் உள்ள நாடுகளின் போராட்ட சக்திகளால் படிக்கப்பட வேண்டியதாகும்.

அதேவேளை மன்னராட்சியையும் நேபாள முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளையும் பாதுகாத்து நிலை நிறுத்த இந்திய அமெரிக்க ஆளும் வர்க்கங்கள் சதாமுயன்று வந்துள்ளன. அமெரிக்காவின் "சி.ஐ.ஏ." இந்தியாவின் "றோ" போன்ற உளவு அமைப்புகள் நேபாளத்தில் தமது கைவரிசைகளை காட்டியே வருகின்றன. அவற்றை எல்லாம் முறியடிக்கும் வகையில் கம்யூனிஸ்ட்டுக்களின் தலைமையிலான வெகுஜன அரசியல் மார்க்கம் உறுதியானதாக இருந்து வருகின்றது.

இவை அனைத்தினதும் ஒட்டுமொத்த வெற்றியைத் தான் அண்மைய தேர்தல் வெற்றி எடுத்துக் காட்டுகிறது. அமெரிக்க மேற்

15ம் பக்கம் பார்க்க.....

13ம் பக்கம் தொடர்ச்சி.....

இன்றை நாட்டின் அசாதாரன குழப்பகரமான சூழ்நிலைகள் மனித உரிமை மீறல்கள் என்பவற்றை காட்டி வெளிநாடுகளில் பணம் வாங்குவதிலும் N.G.O நடத்துவதிலும் மார்க்ஸிய அரசியலை அடகு வைத்து ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த பிழைப்புவாத இடதுசாரிகள் தங்களின் கேலிகூத்து அரசியல் மூலம் மறைமுகமாக முதலாளித்துவ நலன்களுக்கு துணை போவதோடு நேர்மையான இடதுசாரி அரசியல் முன்னெடுப்புக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறார்கள்.

### என்.ஜி.ஓ. க்களின் சிதைவு வேலைகள்

இன்று பல்வேறு வழிகளில் ஊடுருவி மக்களின் சமூக பொருளாதார கட்டமைப்பை சிதைப்பதிலும் கூட்டு வாழ்க்கை முறையை சிதைத்து நசிவு கலாச்சாரப் பண்புகளை எமது மூளைக்குள் திணித்து மேற்கத்தேய கலாச்சார பண்பாடுகளைப் பின்பற்றியும் நுகர்வு பொருளாதார மோகத்திற்குப் பின்னால் அலைய விடுவதிலும் மிகக் காத்திரமான பங்கினை என்.ஜீ.ஓக்கள் வகித்து வருகின்றன. மேற்குலக ஏகாதிபத்தியத்தின் கமிஷன் ஏஜண்டுகளான இவ் N.G.O கள் சமூக விடுதலைக்கெதிரான மிகப் பெரிய தலையிடியாகவும் முட்டுக்கட்டைகளாகவும் சவாலாகவும் உருவெடுத்து நிற்கின்றன. இந்த N.G.O கார்கள் மக்கள் மத்தியில் இருந்து எழக்கூடிய எல்லாப் போராட்டங்களையும் ஆக்கிரமித்துச் கொண்டு மக்கள் எழுச்சியையும் போராட்ட குணாம்சங்களையும் சிதைத்து. அரசியல் தொழிற்சங்க வெகுஜன அணிதிரட்டல்களை இல்லாமல். செய்வதிலும் நேர்மையான அரசியல் தலைமைத்துவம் கட்டி வளர்க்கப்படுவதை தடுத்து தனிமனித சிந்தான வாதத்தையும் ஏகாதிபத்திய சர்வாதிகாரத்தின் நச்சு சிந்தனைகளையும் எம்முள் தினிப்பதே இவற்றின் பிரதான வேலை திட்டமாகும். இந்த ஜனநாயக விரோத வர்க்க விரோத சக்திகளே மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கான விமோசன கர்த்தாக்களாக உருவகித்துக் கொண்டிருக்கும் அபாயத்தை மிகவும் சரியாகப் புரிந்து கொண்டாக வேண்டும்.

### உறுதியான அரசியல் தலைமைத்துவம்

எனவே அரசியல் சதியும் சூழ்ச்சியும் மிக்க நாசகார சூழலில் இருந்து தொழிலாளர்களை விவசாயிகளைப் பாதுகாக்கப் போவது யார்? தேசிய இனங்களின் நியாயபூர்வமான வாழ்வாதார உரிமைகளை வென்றெடுக்கப்போவது யார்? உல கமயமாதல் கொண்டு வந்து கொட்டும் பண்பாட்டு கலாச்சார சீரழிவுகளில் இருந்து இளம் தலைமுறையினரை மீட் டெடுக்கப் போவது யார்? இந்த கேள்விகள் நேர்மையான மக்கள் செயற் பாட்டாளர்கள். சமூக விடுதலை நோக்கிச் செயற்படும் அரசியல் வெகுஜன அமைப்புகள் முன் எழுந்து நிற்கிறது.

இந்தப் பயங்கரம் மிக்க அசாதாரண சூழலில் இருந்து மக்களை மீட்க. எந்த மீட்பரோ இரட்சகரோ வரப் போவதில்லை. எனவே இந்த முதலலாளி வர்க்க அதிகார கட்டுமானம் தகர்த்தெறியப் படுவதற்கு உறுதியான அரசியல் தலைமை கட்டிவளர்க்கப்பட வேண்டும். எனவே இன்று சமூக எதிர் நோக்கும் அடிப்படை பிரச்சனைகளை வென்றெடுக்க வலுவான போராட்டங்களும் வெகுஜன அரசியல் தலைமைத்துவமும் தோற்றுவிக்கப்படுவது அவசியமாகும். ஆகவே இந்தப் பொறுப்பும் வரலாற்று கடமையும் இன்று வர்க்க விடுதலையை நோக்கிய மார்க்ஸிய- லெனினிய அரசியல் தத்துவத்தை நேர்மையாக முன்னெடுக்கும் சகதிகளுக்கு முன்னால் உள்ளது. எனவே மிக ஆழமான வேலைதிட்டங்களும் உறுதியான செயற்பாடுகளும் முன்னெடுக்க வேண்டிய மிக அவசியமான கால கட்டமே இன்று நம்முன் இருக்கிறது.

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## அமெரிக்கத் தேர்தலும் சில உண்மைகளும்

இன்னமும் பலருக்கு அமெரிக்கா பற்றிய கனவுகள் கலைவதாகத் தெரியவில்லை. எமது ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் அதை இன்னமும் உறுதிப்படுத்துகின்றன. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் பற்றி எமது பத்திரிகைகளில் எழுதப்படும் செய்திகள் எல்லாம் மாட்டில் மழை பெய்த கதைகள். ஏதோ ஹிலரி கிரின்டன் ஜனாதிபதியினால் உலகில் போர்கள் எல்லாவற்றையும் அமெரிக்கா நிறுத்திவிடும் என்பது போன்ற செய்திகள் உருவாக்கப்படுகின்றன. மறுபக்கம், ஒபாமா கறுப்பு மக்களின் பிரதிநிதி. அமெரிக்காவில் எல்லோரும் சமமாக மதிக்கப்படுவதற்கு ஒபாமா போட்டியிடுவது ஒரு உதாரணம் என்றெல்லாம் எழுதப்படுகின்றது.

ஹிலரியோ ஒபாமாவோ, ஏன் வேறுயார் ஜனாதிபதியாக வந்தாலும் அமெரிக்கா தன் போர்களை நிறுத்தப் போவது இல்லை. தனது ஏகாதிபத்திய நலன்களை விட்டுவிடப் போவதில்லை. எல்லாம் "பயங்காரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின்" பேரால் தொடரத்தான் போகிறது. தூங்குபவனை எழுப்பலாம். ஆனால் தூங்குவது போல நடிப்பவனை?

## நாகரீகமானவர்கள் பற்றி

தென்னமெரிக்காவில் உள்ள பழங்குடியினர் பற்றிக் கருத்துரைத்த புத்திஜீவி (எங்கள் பத்திரிகைகள் புத்திஜீவிக்கு கொடுக்கும் வரைவிலக்கணப்படி) ஜோர்ச் புஷ் "தென்னமெரிக்கப் பழம் குடியினரை நாகரீகமானவர்களாக மாற்ற வேண்டியிருக் கிறது. அவர்களை நாகரீகமானவர்களாக மாற்றுவதன் மூலம் ஜனநாயகத்தை தென்னமெரிக்கா முழுவதும் நிலைபெறச் செய்ய முடியும். அதன் மூலம் தென்னமெரிக்காவில் பயங்கரவாதத்தையும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் அடியோடு ஒழி க்க முடியும்" என்று சொன்னார்.

யார் யாரை நாகரீகமானவர்களாக மாற்றுவது. யார் ஜனநாயகம் பற்றிப் பேசுவது. இலட்சக் கணக்கான செவ்விந்தியப் பழங் குடியினரைக் கொன்றொழித்தவர்களின் வாரிசுகளா நாகரீகம் பற்றிப் பேசுவது. இவர்களா ஜனநாயகம் பற்றிப் பேசுவது.

உண்மையாகப் பயங்கரவாதத்தில் ஈடுபடுவோரிடம் பயங்கரவாதம் இல்லையாம். பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டங்களும் நடவடிக்கைகளும் தான் பயங்கரவாதமாம்.

## சமாதானம் நோக்கிய நடவடிக்கை

இஸ்ரேல் பிரதமரையும் பலஸ்தீன ஜனாதிபதியையும் கூப்பிட்டு நிரந்தர சமாதானத்திற்கு வழி பார்க்கச் சொல்லி உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட வைத்து தன்னை சமாதான விரும்பியாகக் காட்டிக் கொண்டவர் அமெரிக்க ஜனாதிபதி புஷ். இது நடந்து இரண்டரை மாதத்திற்குள் 200க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் பலஸ்தீனத்தில் இஸ்ரேலியத் தாக்குதல்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இச் செயற்பாடுகளை இஸ்ரேல் "நிரந்தர சமாதானம் நோக்கிய நடவடிக்கை" என்று கூறுகிறது. அமெரிக்க விரும்புகிற சமாதானம் எதுவென்பதும் அமெரிக்கா வற்புறுத்துகிற நிரந்தரத் தீர்வு எது என்பதும் எல்லோரும் அறிந்ததே.

இங்கேயும் சிலர் நிரந்தர சமாதானம் பற்றிப் பேசுகிறார்கள். அமெரிக்க உள்ளிட்ட மேற்குலகம் தலையிட்டு நிரந்தரத் தீர்வைத் தர வேண்டும் என்றெல்லாம் அடிக்கடி சொல்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சொல்கிற "நிரந்தர சமாதானம்" பற்றியும் "நிரந்தரத் தீர்வு" பற்றியும் அவதானமாக இருக்க வேண்டிய கட்டாயம் எமக்கிருக்கிறது.

## நல்ல பயன்களைப் பெறுவது பற்றி

உக்ரேன் நாடு நேட்டோ அமைப்பில் சேருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரேனிய மக்கள் மிகப் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகிறார்கள். அதேவேளை அமெரிக்கா தனது ஐரோப்பிய ஏவுகணைத் தளத்தை போலந்தில் நிறுவவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போலந்து மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகிறார்கள். கருத்துக் கணிப்பின் படி 70 வீத போலந்து மக்கள் ஏவுகணைத் தளம் அமைக்கப்படுவதை எதிர்த்து வருகிறார்கள்.

இந் நிகழ்வுகள் பற்றிக் கருத்துரைத்த உக்கிரேனிய போலந்து அதிகாரிகள்

"இவ்வாறான மிகப் பயன்தரும் திட்டங்களை எதிர்ப்பதன் மூலம் மக்கள் நல்ல பயன்களைப் பெறுவது தடை செய்யப்படுகிறது. நல்ல பயன் கிடைக்கக் கூடிய திட்டங்களை மக்கள் எதிர்க்கக் கூடாது என்றும் சொல்கிறார்கள்.

ஒரே ஒரு கேள்வி. இத் திட்டங்களால் நல்ல பயன்களைப் பெறுவது யார்? நிச்சயமாக உக்கிரேனிய போலந்து மக்கள் இல்லை என்பது மட்டும் உறுதி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கவிதை தொகுப்பு விமர்சனம்

# "இசை பிழியப்பட்ட வீணை"

## பக்குவமடையாத நரம்புகளால் கட்டப்பட்டுள்ளது



இசை பிழியப்பட்ட வீணை என்பது பத்தனை வே. தினகரனால் தொகுக்கப்பட்ட மலையகக் கவிஞர்களின் படைப்புகளை கொண்ட கவிதைத் தொகுதி. சவிற்சலாந்தை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஊடறு அமைப்பின் வெளியீடாக வந்துள்ளது.

பெண் விடுதலையை பற்றி பேசும் போது பெண்களின் பங்களிப்பை போன்று பெண்களுக்கான ஆண்களின் பங்களிப்பையும் மறுப்பதற்கில்லை. அதேபோன்று பெண்களின் இலக்கியம் என்று பார்த்தால் பெண்களின் எழுத்துக்களும் பெண்கள் பற்றிய பெண்களுக்கான எழுத்துக்களும் அடங்கும்

'இசை பிழியப்பட்ட வீணை' தொகுதியில் எல்லாமே பெண்களின் கவிதைகளல்ல. எனக்கு தெரிந்தளவில் ஒரு ஆணின் கவிதையும் இருக்கிறது. அதை தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய தேவை இல்லை.

வே. தினகரனின் முகவுரையிலும் றஞ்சி, தேவா ஆகியோரின் தொகுப்புரையிலும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகளின் தரம்பற்றி சில சமாதானங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பெண்களின் கவிதைகள் அல்லது பெண்கள் பற்றிய கவிதைகள் அல்லது இரண்டு விதமான கவிதைகளையும் தொகுப்பதில் மேலும் சிரமப்பட்டிருந்தால் தரமான கவிதைகளை மலையக சூழ் நிலையிலும் தேடி இருக்க முடியும்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளை கொண்டு பெண்களின் /பெண்கள் பற்றிய கவிதைகளை அளவிடக்கூடாது என்பதற்காக இதனை சொல்ல வேண்டியுள்ளது.

இளம் பெண் (வளர்ந்துவருபவர்களை குறிக்கிறது) கவிஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் ரகமான கவிதைகளை தெரிவு செய்வதற்காகவும் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டிருப்பின் அந்நோக்கத்தையே வெளிப்படுத்துவது நல்லது. பெண்கள் என்பதற்காக எல்லா பெண் எழுத்தாளர்களும் முற்போக்கு படைப்பாளிகளல்ல. பாலரஞ்சனி ஜெயபாலின் 'ஒரு அதிகாலை போதின் ரம்ய சூசக மருசளாவின் சவால்' போன்ற கவிதைகள் எதைக் கூறுகின்றன? 15 லட்சம் பேரில் 5 ஆயிரம் பேர் உத்தியோகம் பார்க்கலாம், சிலர் கடை நடத்தலாம், சிலர் விலை கொடுத்து வீடு வாங்கி இருக்கலாம், சிலர் மூச்சக்கர வண்டி ஓடலாம் காரோடலாம். அதனால் மலையக சமூகம் வளர்ந்து விட்டதாகக் காட்ட வேண்டும் பேச வேண்டும் எழுத வேண்டும் என்று சிலர் தற்போது எத்தணிக்கின்றனர். பெரும்பாலான மலையக மக்கள் அடிப்படை வசதியுமின்றியும் சமூக கொடுமைகளாலும் கஸ்டப்படுவதாக சொல்வது அவர்களுக்கு கௌரவ குறைச்சலாக இருக்கிறது.

பெண்ணடிமைத்தனத்திற்கு தொழிலாளர்களை விட படித்த பெண்கள் அதிகம் முகம் கொடுக்கின்றனர். படித்த பெண்கள் அவர்களின் வேலைத்தலத்தில் பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகின்றனர். தொழில், திருமணம் என்பவற்றில் சாதியம் ஒடுக்குகிறது. சீதனக் கொடுமையும் தான். சாதியம், சீதனக்கொடுமை, பாலியல் சுரண்டல் படித்த மலையகப் பெண்களுக்கே மிகவும் சவாலுக்குரிய விடயங்களாக இருக்கின்றன. (தொழிலாளப் பெண்களிடம் மிகவும் குறைவு. ஏனெனில் ஆண் தொழிலாளர்களுக்கு சாதிய, சீதனம் போன்றவற்றை பாதுகாப்பதற்கு அதிகம் தேவை இருக்கவில்லை) இன்றைய படித்தவர்கள் அவற்றுக்கு எதிரான செயற்பாடுகளில் அதிகம் ஈடுபடுவதில்லை.

1960 தொடக்கம் 1980களின் இறுதிவரை மலையகப்படித்தவர்கள் அடக்குமுறையாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தனர். தற்போது அந்நிலைமை இல்லை. காரணம் படித்தவர்களில் அதிகமானோர் எதை பேசினாலும், எழுதினாலும், அடக்குமுறையாளருடன் கைகோர்த்துக் கொண்டு அல்லது இணங்கிப் போவோராகவே இருக்கின்றனர் எனலாம். உதாரணமாக பாராளுமன்ற வாதிகளை தொழிற்சங்கவாதிகளை விமர்சித்து எழுதவேண்டிய படிப்பாளிகள் அவர்களுக்கு 'தூக்கு தூக்கிகளாக' இருக்கின்றனர். அடக்குமுறை, சுரண்டல் நிறைந்த சமூகத்தை விமர்சிப்பவர்கள் அவற்றுக்கு காரணமான இந்த சமூக அமைப்பின் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். இந்த சமூக அமைப்பை மாற்றுவதற்காக எடுக்கப்படும் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு எதிராகவே செயற்படுகின்றனர்.

தோட்டத்தொழிலாளர்களின் மீதான வர்க்க அடக்குமுறைகள் மலையக சமூகத்தின் மீதான பேரினவாத ஒடுக்கல், இச்சூழ்நிலையில் காணப்படும் பெண் ஒடுக்கல் போன்றன பற்றிய கவிதைகள் 'இசை பிழியப்பட்ட வீணை' யில் இடம்பெறவில்லை. பெரும்பாலான கவிதைகள் கவித்துவமற்ற வெறும் வசனங்களாக இருப்பதுடன் மேலோட்டமான விடயங்களையே கொண்டுள்ளன. குறைபாடு பெரிய அளவில் மலையகப் பெண்களின் எழுத்திலோ, பெண்கள் பற்றிய எழுத்திலோ இருக்க முடியாது என்பது எனது கணிப்பும் நம்பிக்கையும். தொகுப்பில் தவறுதல்கள், கவலையீனம், அசட்டை, அவசரம், கூட்டு உழைப்பின்மை இருந்திருக்கலாம் என்றே கருத இடமுண்டு. அதனால் இத்தொகுதி பக்குவமடையாதிருந்த நரம்புகளை கொண்டு கட்டப்பட்டுள்ளதாகவே கருத முடிகிறது. அதனாலேயே அதில் முழுமையான இசை உருவாக முடியவில்லை.

இத் தொகுதி வெளியிடுவதற்கு கிடைக்கப் பெற்ற உதவிகள், முயற்சிகள் பாராட்டுக்குரியவை. அவை அரைகுறையாக பயன்படுத்தப்பட்டமையால் இத் தொகுதி முழுமையடையவில்லை.

இச்செய்தியுடன், மலையகத்தின் எழுத்தார்வம் மிக்கவர்கள் வளர்வதற்கும் வளர்க்கப்படுவதற்கும் பாரிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இதில் இளம் காணப்பட்ட கவிதைகளுக்கு அவை அதிகம் தேவைப்படுகின்றன என்ற செய்தியையும் இத்தொகுதி சொல்கிறது.

தவிரவும் வே. தினகரனின் முன்னுரையில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் கவனத்திற்குரியன. விவாதங்களுக்குரிய சில முரண்பாடுகளுக்கும் இடம் தருகின்றன. அவற்றில் சில இங்கு குறிப்பிட வேண்டியனவாகின்றன. மலையக (பாரம்பரிய) கலாசாரத்தில் பெண்ணடிமைத்தனத்திற்கு அதிகம் தீனிபோடப்பட்டிருக்கவில்லை. குடும்பங்களில் பெண்களுக்கு போதிய இடம் இருந்துள்ளது (காரணம் உழைக்கும் சமூகமாகும்) பொது இடங்களில் பெண்கள் தீண்டத்தகாதவர்களாக இருக்கவில்லை. காமன் கூத்து, பொன்னர்சங்கர் போன்றவற்றில் அக்காலத்துடனான கருத்துக்களுடன் பார்க்கும்போது மிகவும் கொடுமையாக இல்லை. ஆகவே பெண் விடுதலை கருத்து N.G.O அம்மணிகளால் மலையகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட கட்டுப்பாடற்ற சுதந்திரங்களல்ல. மலையகப் போராட்டங்களில் பெண்களின் பங்கும் தியாகமும் ஆழமானதாகும். பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராகவும் போராடி இருக்கின்றனர். கல்கந்தை காமாட்சியம்மாளின் உயிர்த்தியாகம், சங்குவாரி, உருளவள்ளி "தங்கவலையல் போராட்டம்" குறிப்பிடத்தக்கன. ஆனால் அவை என்றும் திருப்தியடைந்து கொண்டிருக்க போதுமானவை அல்ல. இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் பிற்படுத்தப்பட்ட மலையக சமூகம் அதன் உரிமைகளுக்காக போராடாமல் இருக்கவில்லை. "பாராளுமன்ற இரட்சகர்களும்" "அமைச்சர்கள் என்ற முழுமுதற் கடவுள்களும்" தோன்றும் வரையும் அடிமை மோகம் கொண்ட எழுத்தறிவு பெற்றவர்களும் தோன்றும் வரையும் மலையகம் சோம்பி இருக்கவில்லை.

இத்தொகுப்பில் வெளிவந்துள்ள கவிதைகளில் ஒன்று புதிய மலையகம் சஞ்சிகை முதல் இதழில் வெளிவந்ததாகும் என்பதை கூறாமல் விட்டது தொகுப்பாளர்களின் தவறுதலாக கொள்ளலாமா?

இராகலையை வெளியீட்டிடமாகக் கொண்டு வெளிவரும் 'புதிய மலையகம்' என்ற சஞ்சிகையின் பெயரை வீரகேசரி அதனது புதன்கிழமை இலவச வெளியீட்டிற்கு பெயராக மேற் கொண்டது. பல அழுத்தங்களின் மத்தியில் வீரகேசரி அப் பெயரை பாவிப்பதை விட்டு 'சூரியகாந்தி' என்று பெயரிட்டுள்ளது வீரகேசரியில் வேலை செய்த நிக்சன் என்பவர் வெளியிடும் இணையத்தளத்திற்கு அப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப் பெயரை வீரகேசரி பாவித்ததும், நிக்சன் பாவிப்பதுக்கும் இசை பிழியப்பட்ட வீணை தொகுப்பின் முன்னுரிமையில் குறிப்பிடாமல் விட்டது தொடர்புபட்டதா? என்றே கேட்கத் தோன்றுகிறது. ஏனெனில் புதிய மலையகம் சஞ்சிகையின் ஆசிரியர் வே. மகேந்திரன் கடந்த ஒருவருட காலத்திற்கு மேலாக அவசரகால சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் தொடர்பு கொண்டிருந்த புதிய மலையகத்தின் வாசகருமான வெ. தினகரனுக்கு "நான் தாடா கூலியா" என்ற கவிதை முதலாவது புதிய மலையகத்தில் வெளி வந்தது என்பதை மறப்பதற்கு காரணம் இருக்க முடியாது.

எனினும் நடந்த தவறுகளுக்கு 'கவலையீனம்' ஒரு காரணமாக இருக்கக் கூடாது என்பதற்காகவே சுட்டிக் காட்டப்படுகிறது. அந்தனி ஜீவா போன்றவர்கள் விடுகின்ற 'தவறுகள்' அலட்சியம் செய்யப்படும் ஏனெனில் அவர்கள் திட்டமிட்டு செய்பவர்கள். வே. தினகரன் மதிப்பிற்குரிய இளம் கவிஞர் அவர் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதே எமது அவா.

**மலைமதி**

---

# சூனியமாயின

அப்பொழுது அகன்று போன
ரயிலின் தண்டவாளங்கள் போல்
மனசும் வெறிச்சோடிக் கிடந்தது......
நாட்களின் சுமைகள்
ஒவ்வோர் நரம்புகளையும்
நசுக்கிப் பிழிந்தன.

எல்லா லட்சியங்களும் சிதைவுற்றன
எல்லாக் கனவுகளும் மங்கிப்போயின
என்
எல்லா வசந்தங்களிலும் பிணவாடை வீசியது
எல்லா ரம்யங்களிலும் ரத்தம் தெளிக்கப்பட்டன
ஓ! என் வாழ்வின் சுகங்களை
பறித்தவன் யார்?

தூங்கும் பொழுதின்- என்
கனவுகளைக் கூட
யந்திர துப்பாக்கிகள்
துளையிட்டு சோதனை செய்கின்றன
அடிக்கடி நான்
விசாரிக்கப்படுகின்றேன்.
என் சுதந்திரங்கள் யாரால்......
யாரால் பறிக்கப்பட்டன!

யதார்த்தமாய் வாழ
என் பிள்ளைகளுக்கு எதைக்
கற்றுக் கொடுப்பது?
முரண்படுகின்றேன்!

என் வாழ்வின்
ஒவ்வோர் அத்தியாயமும்
எழுதப்படாமலே அழிந்துப்போயின
இசைக்கப்படாமலே நசுக்கப்பட்டன.
மீட்டப்படாமலே அபசுரமாயின
ரசிக்கப்படாமலே மறக்கப்பட்டன.

எல்லாமும் சூனியமாகின
ஏனெனில்
இந்த நாட்டுக்கு நான்
இரண்டாந்தர பிரசையென்பதால்

என்னை பார்க்கின்ற கண்கள்
பொய்மை தூவின
ரோட்டில் ............
பட்டினி பொழுதுகளில்..............
பஸ் பிரயாணத்தின்
நெருக்கடியில் பரிதவித்து
நிற்கும் போது கூட
என் பைகளில்
கிறைனைட்டுக்கள் இருப்பதாய்
கண்களின் சந்தேக மேய்ச்சல்!

இந்த நாட்டில்......
நான் அந்நியன் என்பதாலா...........?
நானும் மனிதன் என்பதை
மறந்து விடாதீர்கள்

**சந்திரலேகா கிங்ஸ்லி**

---

14ம் பக்கத் தொடர்ச்சி.....

குலகு சாராது இந்தியாவின் ஆதரவு இன்றி சீனாவின் அரவணைப்புப் பெறாது முற்றிலும் நேபாள மக்களின் மீது நம்பிக்கை வைத்தே அங்கு விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சோவியத் யூனியன்- கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசம் வீழ்ச்சி கண்ட சூழலில் சீனாவில் சோஷலிசப் பாதையில் விலகல் ஏற்பட்ட நிலையில் மாக்சிசமும் சோஷலிசமும் மரணித்துவிட்டதாக ஊடகங்கள் ஊழையிட்டு வந்த சூழலிலேயே இமயமலை உச்சியில் செங்கொடி பட்டொளி வீசிப்பறக்க விடப்பட்டுள்ளது. தென்னாசியக் கம்யூனிஸ்டுக்களும் புரட்சிகர மக்களும் விடுதலைக்காக முயன்று வரும் மக்களும் நேபாளத்தின் செங்கொடிகளால் உற்சாகமும் உறுதியும் பெற்று நிற்கின்றனர். பல ஆயிரம் கம்யூனிஸ்ட்டுக்களாலும் போராடிய மக்களாலும் அர்ப்பணிக்கப்பட்ட உயிர் தியாகத்தால் அங்கு செங்கொடிகள் உயர்ந்து நிற்கின்றன. நேபாளத்தின் விடுதலைப் போராட்டம் சமகால விடுதலைப் போராட்டங்களுக்கு முன்னுதாரணம் காட்டி நிற்கின்றது. இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான புதிய ஜனநாயகத்திற்கும் சோஷலிசத்திற்குமான போராட்டப் பாதையில் நேபாளத்திலிருந்து படிக்க நிறையவே உண்டு.

இருப்பினும் இதுவரையான நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றிகரமான புரட்சிகரப் பாதையைத் திசை திருப்பிக் கொள்ள உள் நாட்டிலும் உலக அளவிலும் பல்வேறு பிற்போக்கு சக்திகள் கடும் முயற்சிகள் மேற்கொள்வார்கள். அதே வேளை பல்வேறு சவால்கள் சோதனைகள் தடைகள் என்பனவற்றை எதிர் கொண்டு சரியான புரட்சிகர நிலைப்பாட்டில் நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி வீறு நடைபோட வேண்டும் என்பதே உலக மக்கள் அனைவரினதும் பெரு விருப்பாகும்.

நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியானது நேபாளத்தின் விஷேட நிலைமைகளுக்கு ஏற்பவும் மாக்சிச லெனினிசக் கோட்பாட்டு நிலையிலும் கொள்கைகளை முன்னெடுக்கும் வழிமுறைகளிலும் பயணிக்க வேண்டிய இமாலயப் பொறுப்பைச் சுமந்து நிற்கிறது. ஏனெனில் வீழ்த்தப்படும் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சக்திகள் அமெரிக்க இந்திய ஆளும் வர்க்க சக்திகளுடன் இணைந்து சும்மா இருக்கப் போவதில்லை. இந்திய மக்கள் உள்ளிட்ட தென்னாசிய மக்களும் உலக மக்களும் நேபாளத்தின் வென்றெடுக்கப்பட்டு வரும் மக்கள் சக்திக்கு உறுதுணையாக இருப்பது அவசியமாகிறது.

**சண்முகம்.**

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

மே 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



நேபாள மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா

## உலக நாடுகளில் மேதின எழுச்சிகள்




நேபாளத்தில் மாவோவாதிகளின் வெற்றி கொண்டாடப்படுகிறது




















வெளியீடுபவர் : இ.தம்பையா, இல 47. 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.